
தமிழரசு
16.9.1976
50 காசு

# அரசு—மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

**ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்**

## அரசு —வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# தமிழரசு

மலர்: 7 | 16-9-1976 | இதழ்: 6


## இந்த இதழில்


பக்க எண்

அமரகவிக்கு ஆளுநர் சூட்டிய புகழ்மாலை 2

''என்றென்றைக்கும் போற்றவேண்டும்'' —ராஜாஜி 3

பாட்டுக்கொரு புலவன் பாரதி! —கவிமணி 4

பாரதி நினைவு —நாமக்கல் கவிஞர் 5

அணையா விளக்கு —பாரதிதாசன் 5

தெய்வத் தமிழ் நாட்டினிலே! —கல்கி 6

உலக மகாகவி —வ.ரா. 6

நெஞ்சினிலே நீந்தும் நினைவு! —சௌந்தரா கைலாசம் 7

தீர்க்க ஞானி —கண்ணதாசன் 8

பாரதியார் பெருமை —கல்கி 9

முத்தான முத்தல்லவோ! .. .. 11

பாரதியைத் தேடினேன் —பெ. தூரன் 14

பாரதி வாழ்க்கை வரலாறு .. .. 17

வருங்காலம் —(பாரதியார் எழுதிய கட்டுரை) 19

மகாகவியும் மகாத்மாவும் —சுத்தானந்த பாரதியார் 21

படமும் செய்தியும் .. .. .. 24

வரவே இல்லை —கி. வா. ஜகந்நாதன் 27

அமர கவி பாரதியார்—சகுந்தலா பாரதி 33

நான் கண்ட பாரதியார் —யதுகிரி அம்மாள் 37

பாரதி கூறிய ஒற்றுமையும் ஒருமைப்பாடும்! 41

உலக கவி —எஸ். டி. சுந்தரம் 43

பாரதியார் தத்துவ ஞானம் —ப. ஜீவானந்தம் 45

மாமனும் மருகனும் —வ. உ. சி. சுப்பிரமணியம் 47




## அடுத்த இதழில்

பாரதியார் மொழிபெயர்த்த தாகூர் சிறுகதையும், பாரதியாருடன் வாழ்ந்து, பாஞ்சாலி சபதத்தை அச்சுக் கோத்த அச்சகத் தொழிலாளி திரு வைத்தியநாத ஸ்வாமிப் பிள்ளை அவர்கள், பாரதியார் பற்றி அளித்த பேட்டிக் கட்டுரையும் 1—10—1976 தேதிய இதழில் இடம் பெறுகின்றன.

குறிப்பு: அட்டைப்படத்தில் காணப்படும் வீடு, பாரதியார் பிறந்துவளர்ந்த எட்டையபுரம் வீடாகும்.



எட்டையபுரத்தில் உள்ள மகாகவி பாரதியாரின் இல்லத்தையும், பாரதியார் நினைவு மண்டபத்தையும் தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள் 20—8—1976 அன்று, பார்வையிட்டார்.

# அமரகவிக்கு ஆளுநர் சூட்டிய புகழ்மாலை!

தேசிய ஒருமைப்பாடு என்ற தொடர் வழக்கில் வருமுன்பே, இக்கோட்பாடு சுப்ரமணிய பாரதியாரால் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

''வெள்ளிப் பனி மலையின் மீதுலாவுவோம்-அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்

''வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்.

''முத்துக்குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர் பலநாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே

''காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்

''வானையளப்போம் கடல் மீனையளப்போம்''

இவ்வாறெல்லாம் பாரதியார் அன்று கனவு கண்டார் இந்தியாவைப் பற்றி.

பாரதியார் கண்ட கனவை நனவாக்கும் வகையில், சுரண்டலை ஒழித்து, இந்தியர் அனைவரும் இந்நாட்டு மன்னர் என்பதற்கு வகை செய்யும் 'பாரத சமுதாயம்' என்ற இலட்சியத்தை நோக்கி நடைபோட்ட நாம் இன்று தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

(1976-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாள் விடுதலை நாள் விழாவினையொட்டி தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து.)



# "என்றென்றைக்கும் போற்ற வேண்டும்!"

—ராஜாஜி

இந்நாளில்பலர் பாரதியாரைப் பற்றித் தங்களுடைய சொந்த அனுபவங்களையும், ஞாபகங்களையும் சொல்லுகிறார்கள். அவர்கள் எல்லோரையும் விடப் பாரதியாரை எனக்கு அதிகமாய்த் தெரியும் ; அதிக காலமாயும் தெரியும். இதற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் எல்லோரையும் விட எனக்கு வயது அதிகம். அவருடைய மாமாவைத் தவிரச் சொல்கிறேன். வயது எனக்கு அதிகமானதினாலேயே சில விஷயங்களில் அனுபவமும் அதிகமாய்த்தானே இருக்க வேணும்? 1906-ம் வருஷத்திலேயே பாரதியாரை எனக்குத் தெரியும். அவரும் நானும் கல்கத்தா காங்கிரஸுக்கும் அடுத்த வருஷம் சூரத் காங்கிரஸுக்கும் போனோம். பாரதியார் தீவிரவாதி. நானும் அப்போது அப்படித்தான். அந்தக் காலத்தில் தீவிர வாதம் என்றால் சாதாரண விஷயம் அல்ல. சூரத் காங்கிரசில் நாற்காலிகள் வீசி எறியப்பட்டன. இந்த அமர்க்களமெல்லாம் நடந்து கொண்டிருந்த போது பாரதியார் தூரத்தில் போய் திரு. ஜி. ஏ. நடேசனுடன் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கவிஞராகையால் அப்படிச் செய்தார். கவிகள் சாதாரண மனிதர்களைப் போல் இறங்கி விட்டால், அவர்கள் கவிகளாயிருக்க முடியாது.

பாரதியார் உண்மையான கவி. எத்தனையோ மணமுள்ள மலர்களைச் சிருஷ்டித்துக் கொடுத்திருக்கிறார். தேசத்துக்கு அவசியமான எல்லா விஷயங்களையும் பற்றிப் பாடியிருக்கிறார். அவர் தொடாத விஷயம் இல்லை. ஆனால் சமூக சீர்திருத்தத்துக்காவது அரசியல் கொள்கைகளுக்காவதுகவிகளிடம் பிரமாணம் தேட வேண்டிய அவசியமில்லை. அப்படித் தேடினோமானால் சில சமயம் முரண்பட்டதுபோல் தோன்றும். கருத்துக்களைக் கண்டு குழப்பமடைவோம். அவ்வப்போது தேசத்தில் ஆவேசத்தை உண்டாக்கியிருந்த இயக்கங்களைக் குறித்து பாரதியார் பாடியிருக்கிறார். முக்கியமாக, நம் காலத்தில் பாரதியார் பிறந்து பாடியதனால், இந்தத் தமிழ் ஜாதியின் சக்தி அழிந்து விடவில்லை என்று நிச்சயமாகத் தெரிகிறது. அப்பேர்ப்பட்ட கவிஞன் ஞாபகத்தை நாம் என்றென்றைக்கும் போற்ற வேண்டும். அப்படிப் போற்றுவதினால் இன்னும் பல கவிகள் தமிழ் நாட்டில் வருங்காலத்தில் தோன்றக் கூடும்.

—பாரதியார் பெருமை என்னும் நூலிலிருந்து.....

# பாட்டுக்கொரு புலவன் பாரதி!



—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.



பாட்டுக் கொரு புலவன் பாரதி, அடா! — அவன்
பாட்டைப் பண்ணொடொருவன் பாடினான், அடா!
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே, அடா!— அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய், அடா!

சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமே, அடா!— கவி
துள்ளும் மறியைப்போலே துள்ளுமே, அடா!
கல்லும் கனிந்துகனி யாகுமே, அடா!— பசுங்
கன்றும்பால் அருந்திடாது கேட்குமே, அடா!

குயிலும் கிளியும்பாட்டில் கூவுமே, அடா!— மயில்
குதித்துக் குதித்துநடம் ஆடுமே, அடா!
வெயிலும் மழையுமதில் தோன்றுமே, அடா!— மலர்
விரிந்து விரிந்துமணம் வீசுமே, அடா!

அலைமேலே அலைவந்து மோதுமே, அடா!— அலை
அழகான முத்தையள்ளிக் கொட்டுமே, அடா!
மலைமேலே மலைவளர்ந் தோங்குமே, அடா!— அதை
வனங்கள் அடர்ந்தடர்ந்து சூழுமே, அடா!

விண்ணி லொளிருமீன்கள் மின்னுமே, அடா!— விண்ணில்
விளங்கும் மதிநிலவு வீசுமே, அடா!— அதில்
கண்ணுக் கினியசோலை காணுமே, அடா!
களித்திள மான்கள்விளை யாடுமே, அடா!

தேனும் தினையும்பாவில் உண்ணலாம், அடா!— மிகத்
தித்திக்கும் முக்கனியும் உண்ணலாம், அடா!
கானக் குழலிசையும் கேட்கலாம், அடா!— ஊடே
களிவண்டு பாடுவதும் கேட்கலாம், அடா!

நாட்டு மொழியுமவன் பாட்டினிசையில்— மிக்க
நல்ல கற்கண்டினிமை சொட்டுமே, அடா!
ஏட்டிலிம் மந்திரந்தான் கண்டவருண்டோ?— ஈதவ்
ஈசன் திருவருளென் றெண்ணுவாய்; அடா!


உள்ளந் தெளியுமொரு பாட்டிலே, அடா!— மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலே, அடா!
கள்ளின் வெறிகொளுமோர் பாட்டிலே, அடா!— ஊற்றுய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர் பாட்டிலே, அடா!

பாரி நிலையம் வெளியிட்டுள்ள 'மலரும் மாலையும்' என்னும் நூலிலிருந்து.........



# பாரதி நினைவு

—நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை.



சுப்ரமண்ய பாரதியை நினைத்திட் டாலும்
சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென் றேறும்;
இப்ரபஞ்சம் முழுதும்நமக் கினமாய் எண்ணும் ;
'இந்தியன்நான்' என்றிடும்நல் லிறுமாப் புண்டாம் ;
எப்பெரிய காரியமும் எளிதாய்த் தோன்றும்;
எல்லையற்ற உற்சாகம் எழுந்து பொங்கும் !
ஒப்பரிய 'தமிழன்' எனும் உவகை ஊறும்;
உள்ளமெல்லாம் துள்ளியுயெழும் ஊக்க முண்டாம்.

அச்சமெனும் பெரும்பேயை அடித்துப் போக்கும்;
அடிமைமன விலங்குகளை அறுத்துத் தள்ளும்;
துச்சமென வருதுயரம் எதையும் தாங்கிச்
சுதந்திரத்தை விட்டுவிடாத் துணிவு தோன்றும்;
கொச்சைமிகும் பிறநாட்டு மயக்க மெல்லாம்
கூண்டோடு விட்டொழிக்கத் தெளிவு கூட்டும்;
மெச்சிடுநம் தாய்நாட்டின் நாக ரீகம்
மேன்மையெல்லாம் பாரதியார் பாட்டால் மேவும்!

தரித்திரத்தின் கொடுமையெல்லாம் சேர்ந்து வாட்டத்
தன்வீட்டில் உணவின்றித் தவித்த நாளும்
சிரித்தமுகம் மாறுமல் செம்மை காத்துத்
தேசத்தின் விடுதலையே சிறப்பா யெண்ணித்
தெருத்தெருவாய்த் தேசிய பஜனை பாடிச்
சென்னையிலும் உணர்ச்சிவரச் செய்த தீரன்
உருத்தெரியா திப்போதும் இங்கே நம்மை
ஊக்குவதும் பாரதியின் உரைக ளேயாம்!

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி வெளியிட்டுள்ள 'நாமக்கல் கவிஞர் பாடல்கள்' என்னும் நூலிலிருந்து.....



# அணையா விளக்கு

—பாரதிதாசன்



பைந்த மிழ்த்தேர்ப் பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனி, சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
நீடு துயில்நீக்கப் பாடி வந்தநிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றும் கதையின் புதையல்
திறம்பட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்;
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்!


(பாரிநிலையம் வெளியிட்டுள்ள பாரதிதாசன் கவிதைகள் 2-ம் தொகுதியிலுள்ள, 'புது நெறிகாட்டிய புலவன்' என்னும் கவிதையிலிருந்து)






# தெய்வத்தமிழ் நாட்டினிலே...

—கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி







தெய்வத்தமிழ் நாட்டினிலே-வெண்ணிலாவே நாங்கள்
தீரமின்றிப் பேதையராய் வாழ்ந்திருந்தோம்—ஏதும்
செய்வதறி யாதிருந்த போதினிலே-ஒரு
சிங்கநாதம் கேட்டெழுந்தோம்-வெண்ணிலாவே.

இருளடைந்த நாடிதென்று எவரோ சொன்னார்-அந்த
இழிவும் ஒரு பெருமையென்று எண்ணி வாழ்ந்தோம்-நல்ல
அறிவொளியால் இருளகற்ற ஒருவர் வந்தார்-இதை
அமரர் நாடென்றறிந்தோம் வெண்ணிலாவே.

கங்கையெனப் பொங்கி வரும் தண்தமிழினில்-இன்பக்
கவிதைபல புனைந்தளித்தார் வெண்ணிலாவே-வெற்றிச்
சங்கமூதி முரசறைந்து எழுகஎன்றார்-இந்தத்
தரணியில் நமக்குநிகர் இல்லை யென்றார்

கவியரசர் பாரதியின் கவிதை இன்பம்-உன்
கதிரொளியில் காண்பதென்ன வெண்ணிலாவே-இந்தப்
புவியில்நீயும் தமிழன்என்னப் பிறந்ததுண்டோ?-அவர்
புதுமைக்கவி அமுதருந்தி மகிழ்ந்ததுண்டோ?



# பாரதி, உலக மகா கவி!

—வ.ரா.

மனித வர்க்கத்துக்கு உய்வு, கலையும் கவிதையுந்தான். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண ஆனந்தம் கவிதைதான். தத்துவத்திலே தர்க்கம் நிறைந்திருக்கலாம். பௌதீக சாஸ்திரத்திலே அறிவு மிதந்து கிடக்கலாம். மதத்திலே பக்தி பூரித்து நிற்கலாம். காதலிலே கனிவும் கீதமும் குழைவும் மண்டிக் கிடக்கலாம். கலையிலே அழகும் ஆனந்தமும் விம்மி விழிக்கலாம். ஆனால் இவைகள் எல்லாவற்றையும் தனக்கு அங்கங்களாகக் கொண்டிருக்கும் கவிதையைக் கடவுள் என்று நான் போற்றுகின்றேன். ஒப்புயர்வில்லாத கவிதையைப் பாடியவர் சுப்பிரமணிய பாரதியார் என்று நான் உரக்கக் கூவுகின்றேன். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து உலகத்துக்குக் காட்சியளிக்கும் வளர்பிறை பாரதியார் என்று சொல்லுகிறேன். வானை நோக்கிக் கைகள் கூப்பித் தொழுது நிற்கும் பக்தர்களுக்கும் உயிரும் உற்சாகமும் அளித்து உரப்படுத்தும் சூரியன் பாரதியார் என்று வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'அவர் தொடாதது ஒன்றும் இல்லை. தொட்டதை அழகுபடுத்தாமல் விட்டதில்லை' என்று டாக்டர் ஜான்சன் கோல்ட்ஸ்மித் என்ற மேதாவி எழுத்தாளரைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். இதையே இன்னும் அதிகமான அழுத்தத்துடன் பாரதியாரைப் பற்றிச் சொல்ல முடியாதா? பாப்பா முதல் பாட்டிவரையில், காதலன் முதல் காதகன் வரையில், குரங்கு முதல் குயில் வரையில், பதிதன் முதல் பக்தன் வரையில், காலி முதல் கவி வரையில், கசடன் முதல் காந்தி வரையில், அன்பன் முதல் அரக்கன் வரையில், வம்பன் முதல் கம்பன் வரையில் பாரதியார் யாரை, எதைத் தொட்டு அழகு செய்யவில்லை?

பாரதியாரின் கவிதையிலே நகைச்சுவை வேண்டுமா? இருக்கிறது. சோகம் வேண்டுமா? உண்டு. அற்புதம் வேண்டுமா? அபரிமிதமாக உண்டு.


பாரதியாரை நினைத்தால் எனக்குப் பயமாயிருக்கிறது. ஏன்? நேற்றைக்குப் படித்த கவிதையை இன்றைக்குப் படித்தால் புதிது புதிதாக அழகும் பொருளும் சுவையும் கண்ணுக்குத் தென்படுகின்றன. நாம் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்து கொண்டு போகிறோமோ, அதற்குத் தகுந்தாற்போல, பாரதியாரின் கவிதை என்ற சங்கப் பலகை நீண்டுகொண்டே போய், நமக்குத் தங்குமிடம் கொடுக்கிறது. இது என்ன விசித்திரமான கவிதை!

மேற்சொன்ன மாதிரி, நான் எவ்வளவு காலத்துக்கு முன்பேயோ எழுதினேன். 1943-ஆம் வருஷம் பாரதியார் கொண்டாட்ட வைபவ வாரத்தில் ராஜாஜி சொன்னதாவது: ''மாகாண பாஷைகளில், அதாவது வங்காளி, தெலுங்கு, குஜராத்தி, மராத்தி போன்ற பாஷைகளில், சென்ற முந்நூறு வருஷ காலமாக, பாரதியாரைப் போன்ற கவி தோன்றவில்லை. பாரதியார் தமிழ்நாட்டில் திரு அவதாரம் செய்தது தமிழர்களுக்குக் கிடைத்த பாக்கியமாகும்.''

நிகரில்லாத தமிழ்ப் புலவர் திரு. வி. கல்யாண சுந்தர முதலியார், ''இது பாரதி சகாப்தம். தமிழவர்களின் உள்ளத்திலும் வாழ்க்கையிலும் பாரதி, உன்னதமான புரட்சியை உண்டாக்கிவிட்டார். பாரதியாரின் கவிதை, தாகூரின் கீதாஞ்சலியைக் காட்டிலும் உயர்ந்தது. பாரதி உலக மகாகவி'' என்று சொன்னார்.

# நெஞ்சினிலே நீந்தும் நிலவு

—திருமதி சௌந்தரா கைலாசம்



பாரதியே! வெள்ளைப் பரங்கியரின் ஆட்சியினை
வேரறவே வீழ்த்தியது நின்கவிதை!—பாரினையே
என்கவிதை பாலிக்கும் என்றுருகிப் பாடினையே!
நின்கவிதைக் கேது நிகர்?


அறிவாலும் பொல்லா அறியாமை யாலும்
பிறப்ப தெளிமையெனும் பெற்றி!—அரசே
தெளிந்த அறிவுடையாய்! நீகவிதை சிந்த
எளிமையதில் ஆளும் இருந்து!

தான்பிழைக்கப் பாட்டெழுதும் தன்மை நினக்கில்லை;
நான்செழிக்க என்னருமை நாடதுவும் தான்செழிக்கப்
பாடிப் பணிசெய்த பாவலனே! நின்சொல்லை
நாடப் பெருகும் நலம்!

பாரதியே உன்னினிய பாடல் தெள்ளமுதில்
ஊறித் திளைத்தால் உருவாகும்—ஊறிக்
குவிகின்ற நல்லுணர்வைக் கோலமுறும் இன்பக்
கவியென்றே கொட்டும் கலை!

மூத்த அறிவுடையாய்! முத்துத் தமிழுடையாய்!
காத்து மகிழ்ந்திடநற் காவியங்கள் பாடுவதில்
வல்லானே! உன்னையெவர் வாவென் றழைத்தாரோ?
சொல்லாயோ யாரென்று? சொல்!

தாவிப் பறந்திருப்பாய்; சக்தி அழைத்திருப்பாள்!
நீவிட்டுச் சென்றாலும் நீங்கிடுமோ உன்நினைவு?
கொஞ்சுதமிழ் பாடும் குயிலே!நீ தேயா(து)எம்
நெஞ்சினிலே நீந்தும் நிலவு!







# தீர்க்க ஞானி

— கவிஞர் கண்ணதாசன்

இருண்டதோர் பார தத்தில்
இயற்கையில் எழுந்த வெய்யோன்!
மருண்டதோர் மனித ஜாதி
மருட்சிக்கு மருந்தாய் நின்றோன்!
அருந்திறன் உள்வாய் தோன்றி
ஆக்கிய கவிதை ஊற்று!
வருஞ்சமு தாய முற்றும்
வகைபடச் சொன்ன மேலோன்!

இந்திய ஒருமைப் பாட்டை
எப்பொழு தோஉ ரைத்தான்!
சந்திர மண்ட லத்தைத்
தான்பார்க்க நினைத்தி ருந்தான்!
யந்திரத் தொழில்நுட் பங்கள்
அனைத்தையும் கனவு கண்டோன்
மந்திரக் கவிஞன் அம்மா!
மாகாளி தந்த சக்தி!

எத்தனை தீர்க்க ஞானம்!
எத்தனை புதிய சொற்கள்!
எத்தனை உணர்ச்சி வேகம்!
எத்தனை பக்தி மோகம்!
இத்தனை கருத்தைச் சொன்ன
இயற்கவி வாழ்ந்த நாளில்
எத்தனை பேரு ணர்ந்தார்?
இப்பொழு துணர்கின் றாரே!

## மகாமகோபாத்தியாய போற்றிய மாகவிஞர்

தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதய்யர் அவர்களுக்கு அரசாங்கம், 'மகாமகோபாத்தியாய' என்னும் விருதை வழங்கியது. அதன் காரணமாக உ. வே. சா. அவர்களுக்கு மாநிலக் கல்லூரி மாணவர்கள் பாராட்டு விழா நடத்தினார்கள். அந்த விழாவில் பாரதியார் அவர்கள் கலந்து கொண்டார். உ. வே. சா. அவர்களைப் போற்றி மூன்று பாடல்களைப் பாடி அமர்ந்தார் பாரதியார். அதே விழாவில் கலந்து கொண்ட பாரதியாரின் நண்பர் ஒருவர் பாரதியிடம் வந்து, 'நீங்கள் பாடிய பாடல்களில் சொற் குற்றம், பொருட் குற்றம் உள்ளன' என்று ரகசியமாகக் கூறினார். அதனைக் கேட்ட பாரதியார் மனம் நொந்து, எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் விழாக் கூட்டத்தை விட்டுச் சென்றுவிட்டார்.

விழா முடிவில் நன்றியுரை ஆற்றிய உ. வே. சா. அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''இன்று இந்த அவையில் என்னைப் புகழ்ந்து முதலில் சில கவிகள் பாடப்பட்டன; சொற்சுவையும் பொருட்சுவையும் உவமை நயமும் மிகுந்த அந்தக் கவிதைகள் எனக்கு மயக்கத்தைத் தந்தன. அந்தக் கவிதைகளை மீண்டுமொரு முறை கேட்க விழைகிறேன்.''

விழாவை நடத்திய நிருவாகிகள் கவிதை பாடிய பாரதியைத் தேடினார்கள். கிடைக்கவில்லை. அவர் சென்றுவிட்ட செய்தியை உ. வே. சா. அவர்களிடம் தெரிவித்தார்கள். அவர் பெயர் பாரதியார் என்பதை அறிந்து உ. வே. சா. மகிழ்ந்தார். அன்று முதல் பாரதியாரிடம் அவர் அன்பு கொண்டார்.

மறுநாள், விழா நடத்தியவர்கள் பாரதியாரைச் சந்தித்து உ. வே. சா. வின் புகழுரைகளைக் கூறினார்கள். அப்போதுதான் பாரதியார் உள்ளம் மகிழ்ந்தார். 'மகாமகோபாத்தியாய' விருது பெற்ற உ. வே. சா. அவர்களே தமது கவிதையைப் பாராட்டியிருக்கிறார் என்றால், நண்பர் உரைத்தது தவறு என்பது பாரதியாருக்கு எளிதில் புரிந்தது!

# பாரதியார் பெருமை

—கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி

கவி ஒன்று கிடைக்குமானுல், அதற்காகத் தனியே ஒரு விழாக் கொண்டாடலாம் என்று ரஸிக சிகாமணிகள் சொல்லுவார்கள்.

ஒரு கவிஞர் கிடைத்து விட்டால் அதற்காக எத்தனையோ விதமான எவ்வளவோ விழாக்கள் கொண்டாடலாம்.

ஒரு மகா கவி கிடைத்து விட்டாலோ. அந்த நாட்டின் மக்கள் என்ன விதமான கொண்டாட்டம் நடத்துவது என்று தெரியாமல் திண்டாட வேண்டியதாகும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் ஒரு நாட்டில் ஒரு மகா கவி தோன்றக் கூடும் என்று இலக்கிய ஆராய்ச்சியாளரும் சரித்திரக்காரரும் திட்டமாய்க் கூறுகிருர்கள்.

குறைந்த பட்சம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் ஒரு நாட்டில் ஒரு மகா கவி தோன்றக் கூடும் என்று இலக்கிய ஆராய்ச்சியாளரும் சரித்திரக்காரரும் திட்டமாய்க் கூறுகிருர்கள்.

குறைந்த பட்சம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இடையருமல் தொடர்ந்து கலைகளும் இலக்கியமும் வளர்ந்துவந்த நாட்டிலேதான் மூன்று மகா கவிகள் வரிசைக் கிரமத்தில் தோன்றியிருக்க முடியும்.

தமிழ்நாடு அத்தகைய அதிர்ஷ்டம் வாய்ந்த நாடு. இந்த நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் திருவள்ளுவர் என்னும் மகா கவி தோன்றினுர். சத்திய வேதம் என்று சொல்லத் தக்க தத்துவ ஒழுக்க நூலை அற்புத சக்தி வாய்ந்த கவிதையில் அமைத்துக் கொடுத்தார்.

வள்ளுவருக்கு ஆருயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு கவிச் சக்கரவர்த்தி கம்பர் அவதரித்தார். உலகத்தில் வேறு எந்த நாட்டு எந்தப் பாஷை காவியத்துக்கும் மேம்பட்டது என்று சொல்லத் தக்க இராமாயண மகா காவியத்தைத் தமிழில் செய்து அளித்தார்.

கம்பருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய காலத்தில், மகா கவி பாரதியார் தோன்றினுர். எத்தனையோ நூற்றுண்டுகளில் அடிமை யிருளில் கிடந்த நாட்டுக்கும், செத்தவர்கள் போலிருந்த நாட்டு மக்களுக்கும் புத்துயிர் தந்தார். தேச பக்தியையும் சுதந்திர தாகத்தையும் தமிழ் வெறியையும் தன்னம்பிக்கையுடன் கவிதை இன்பத்துடன் கலந்து மக்களுக்கு ஊட்டினுர்.

பாரதியாரின் பாடல்கள் பலவற்றில் அதி ஆச்சரியமான தீர்க்க தரிசன சக்தியை நாம் காண்கிருேம். அவருடைய தீர்க்க தரிசன வாக்குகள் ஒவ்வொன்றுகப் பலித்துவருவதைக் கண்டு மகிழ்கிருேம்.

பாரதியார் தம் காலத்தில் கண்ட தமிழ் மக்களைப் பற்றி அவ்வளவாக உற்சாகம் கொண்டு விடவில்லை. தமிழ் மக்களிடத்திலும் இந்திய மகா ஜனங்களிடத்திலும் பற்பல குறைகளைக் கண்டு நைந்துருகி நெஞ்சுருகி நின்றுர்.

''நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்''

என்று மனம் பதறிக் கதறினுர்.

''நெஞ்சில் உரமு மின்றி
நேர்மைத் திறமும் இன்றி
வஞ்சனை செய்வாரடி—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி!''

என்று ஆத்திரத்தைக் கொட்டினுர்.

ஆயினும் இத்தகைய நிலைமையைக்கண்டு விட்டு உற்சாகக் குறைவு அடைந்து விட்



டாரே? அடியோடு நம்பிக்கை இழந்து விட்டாரோ?

அவருடைய காலத்து 'அறிவாளி'கள் சிலரைப் போல, ''இந்த தேசம் உருப்பட வாவது? இந்தியாவுக்கு விடுதலையாவது?'' என்று சொல்லிக் கொண்டு இருந்து விட்டா ரோ?'' இல்லவே இல்லை!

அந்த நிலைமையில் அப்படிப்பட்ட மக்க ளுக்கு மத்தியில் இருந்து கொண்டு, தீர்க்க திருஷ்டியுடன் வருங்காலத்தை நோக்கினர்.

''ஜய பேரிகை கொட்டடா !''

என்று முழங்கினர்.

''ஜய முண்டு பயமில்லை மனமே—இந்த
ஜன்மத்திலே விடுதலை யுண்டு நிலையுண்டு''

என்று கையடித்துச் சத்தியம் கொடுப்பது போல் உறுதி கூறினர்.

காரிருளுக்கு மத்தியில் பேரொளி பொங்கி வரும் அறிகுறிகளைக் கண்டார். அடிமைத் தனத்துக்கு மத்தியில் விடுதலையின் உதயப் பிரகாசத்தைக் கண்டு வரவேற்ருர்.

இந்தியாவைப் பிடித்திருந்த பீடைகளும் இந்திய மக்களிடம் குடிகொண்டிருந்த இழி குணங்களும் விரைவிலே அகன்று போய் விடும் என்பதை உள்ளுணர்ச்சியினுல் மகா கவி பாரதி யார் நிச்சமாய் அறிந்தார்.

''வலிமையற்ற தோளினுய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினுய் போ போ போ''

என்ற பாடலில், அச்சம், மடமை, பலவீனம் முதலிய மக்களின் குறைபாடுகளை யெல்லாம் அடித்து விரட்டுவது போல் சபித்து விரட் டினர்.

''ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ
தரும மொன்றியற்றிலாய் போ போ போ
நீதி நூறு சொல்லுவாய்—கா சொன்று
நீட்டினுல் வணங்குவாய் போ போ போ

என்று மூட நம்பிக்கையாளரையும் சமூகத் துரோகிகளையும் அதட்டி அடித்தார்.

பின்னர், வருங்காலத்தில் வரப் போகும் உண்மையான பாரத ஜாதியை ஞானக் கண் கொண்டு பார்த்து, சக்தி வாய்ந்த சொற்களி னுல் அற்புதமான கவிதை செய்து வர வேற்ருர்.

''இளைய பாரதத்தினுய் வா வா வா
எதிரிலா வலத்தினுய் வா வா வா
ஒளியிழந்த நாட்டிலே—நின்றேறும்
உதய ஞாயி றொப்பவே வா வா வா
களையிழந்த நாட்டிலே—முன்போல
கலை சிறக்க வந்தனை வா வா வா
விளையு மாண்பு யாவையும்—பார்த்தன் போல்
விழியினுல் விளக்குவாய் வா வா வா

இப்படிப்பட்ட தீர்க்க தரிசனத்துடன் சுதந்திர பாரதத்தை அகக் கண்ணினுல் கண்டு வரவேற்புக் கூறிய மகாகவிக்கு எத்தனைவிழாக் கள்தான் நடத்தக் கூடாது! தினந்தினம் ஒரு கொண்டாட்டம் ஊரெங்கும், நாடெங்கும் நடத்தி மகிழலாமே?

## மூர்மார்க்கெட்டில் அரங்கேறிய பாரதியார் பாட்டு!

அந்தக் காலத்தில் மூர்மார்க்கெட்டில் இப்போதுள்ளது போலக் கட்டிடங்கள் இல்லை. பெரும்பகுதியும் புழுதிபடிந்த பொட்டலாக இருக்கும். மழைக் காலங்களில் நீரும் சேறும் நிறைந்து கிடக்கும். கோடைக் காலங்களில் குப்பையும் கூளமும் குவிந்து இருக்கும். பாரதி யாருடைய சுதந்திரப் பிரசங்கங்கள் அங்கேதான் நடக்கும். ஜனங்கள் பெருந்திரளாகக் கூடுவார் கள். சேருக இருந்தாலும் புழுதியாக இருந்தா லும் பொருட்படுத்தாமல் உட்கார்ந்து பாட்டை யும் பிரசங்கத்தையும் கேட்பார்கள். விடுதலை வேட்கை மிகுந்த அநேக புதுப்புதுப் பாடல்களை பாரதியார் இந்த மூர்மார்க்கெட் பிரசங்கங்களிலே தான் அரங்கேற்றினர்.

பாரதியார் சென்னையை விட்டுப் புதுச் சேரிக்குள் புகுந்துகொள்வதற்குச் சிறிது காலத் திற்கு முன்புதான், ஒருநாள் மூர்மார்க்கெட் பிரசங்கத்தில் ஏராளமான வாலிபர்களுடைய கூட்டத்துக்கு இடையில், ''என்று தணியுமிந்த சுதந்திர தாகம்'' என்ற பாட்டை, முதல் முதலாகப் பாடி வெகு ஆவேசத்துடன் பிரசங்கம் செய்தார்.

அந்நிய ஆட்சி ஒழிய வேண்டுமென்றும், இந்தியாவை இந்தியனே ஆளவேண்டும் என்றும் தெருத்தெருவாகப்பாடிக்கொண்டு, தினம் தினம் மூர்மார்க்கெட்டில் கூட்டம் கூட்டி, வெகு உருக்க மான பிரசங்கங்களைச் செய்து கொண்டிருந்த பாரதியாருடைய பேச்சு, தமிழ்நாடு முழுவதும் பரவ ஆரம்பித்தது. அவர் மூர்மார்க் கெட்டில் பாடிய ''என்று தணியுமிந்த சுதந்திர தாகம்'' என்ற பாட்டும் அன்று அவர் பேசிய பேச்சும் இளைஞர்களுக்கு மிகவும் சுதந்தர ஆவேசத்தை ஊட்டக்கூடியவை.

[நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை அவர்களின் 'என்கதை' நூலிலிருந்து]

பாரதி வாழ்ந்திருந்த காலத்து மக்களின் இலட்சணத்தைப் பற்றி அவரே நன்ருகப் பாடியிருக்கிருர். தெளிவான வசன நடை யிலும் ''மண்ணுலகம்'' என்னும் ஞானரதம் பகுதியில் எழுதியிருக்கிருர்.


ஆகவே, பாரதி வாழ்ந்திருந்த காலத்தி லும் அதற்குப் பிற்பாடு சில காலம் வரை யிலும் கூடத் தமிழ் மக்களில் பெரும்பாலோர் ''பாரதி யார்?'' என்றும், ''எந்தப் பாரதி?'' என்றும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இப் போதெல்லாம் அப்படி யாரும் கேட்பதில்லை. ''நம்முடைய பாரதியார்'' என்று பெருமை யுடன் மார் தட்டிக் கொண்டு சொல்கிருேம். ''கவியரசு பாரதியார்'' என்றும் ''மகாகவி பாரதியார்'' என்றும் போற்றிப் புகழ்கிருேம். பாருக்கெல்லாம் அவர் பெருமையை நாம் பறைசாற்றுகிருேம்.

# முத்தான முத்தல்லவோ!

'எழுத்து, முத்து முத்தாக இருக்கிறது' என்று சொல்வதன் மூலம் ஒருவரது கையெழுத்தை நாம் புகழ்ந்து வருகிறோம் அல்லவா? பாரதியாரைப் பொறுத்த அளவில் 'இது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை'.

அவரது எழுத்துக்கள், அவர் அவசரமாகவோ வேகமாகவோ எழுதும் போது கூட முத்துப் போலத்தான் இருக்கும். ஓர் எழுத்து அடுத்த எழுத்துடன் மோதுவதில்லை, ஒவ்வொரு எழுத்தும் தனித் தனியாக அழகாக இடம் பெற்றிருக்கும்! பாரதியார், எழுத்துக்களைச் சிதைக்காமல் மூளியாக்காமலும் எழுதுவார். ஒற்றெழுத்துக்களின் சிரங்களில் உள்ள புள்ளிகளைத் தெளிவாக எழுதுவார்.


பாரதியார், தம் கைப்பட எழுதிய, 'காணி நிலம்,' 'ஜயமுண்டு,' 'விடுதலை, விடுதலை, விடுதலை' என்னும் தலைப்புகள் கொண்ட மூன்று பாடல்களின் கையெழுத்துப் பிரதிகள் புகைப்படங்களாக்கப் பெற்று இங்கே வெளியிடப் பெற்றுள்ளன. இந்தப் பாடல்களின் தலைப்புகளுக்கு அருகில், ராகத்தையும் தாளத்தையும் பாரதியார் குறிப்பிட்டிருப்பதிலிருந்து, அவரது இசை ஆற்றலும் இனிது உற விளங்குகிறது!


காணி நிலம்
ஆதிதாளம்

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அங்கு
தூணில் அழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித் தர வேண்டும் - அங்கு
கேணி யருகினிலே - தென்னைமரம்
கீற்றும் இளநீரும் -

பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும் - நல்ல
முத்துச் சுடர்போலே - நிலாவொளி
முன்பு வர வேணும் - அங்கு
கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதிற் பட வேணும் - என்றன்
சித்த மகிழ்ந்திடவே - நன்றாயிளந்
தென்றல் வர வேணும் -

பாட்டுக் கலந்திடவே - அங்கே யொரு
பத்தினிப் பெண் வேணும் - எங்கள்
கூட்டுக் களியினிலே - கவிதைகள்
கொண்டு தர வேணும் - அந்தக்
காட்டு வெளியினிலே - அம்மா, நின்றன்
காவலுற வேணும் - என்றன்
பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.



ஓம் சக்தி

(எ)

(கமாஸ்-ஆதி) ஜயமுண்டு

(பல்லவி)

ஜய முண்டு, பய மில்லை, மன மே- இந்த
ஜன்மத்தி லே விடுதலை யுண்டு, நிலை யுண்டு; (ஜய முண்டு)

(அநுபல்லவி)

பய னுண்டு பக்தியாலே- நெஞ்சிற்
பதி வுற்ற குல சக்தி சர ணுண்டு; பகை யில்லை (ஜய முண்டு)

(சரணங்கள்)

புய முண்டு குன்றத்தைப் போ லே- சக்தி
பொற் பத முண் டதன் மே லே-
நியம மெல்லாம் சக்தி நினை வன்றிப் பிறி தில்லை;
நெறி யுண்டு; குறி யுண்டு; குல சக்தி வெறி யுண்டு-
(ஜய முண்டு) (1)

மதி யுண்டு செல்வங்கள் சேர்க்கும்- தெய்வ
வலி யுண்டு தீமையைப் பேர்க்கும்
விதி யுண்டு; தொழிலுக்கு விளை யுண்டு; குறை வில்லை;
விசனப் பொய்க் கடலுக்குக் குமரன் கைக் கணை யுண்டு;
(ஜய முண்டு) — (2)


அலை பட்ட கடலுக்கு மே லே- சக்தி
அரு ளென்னுந் தோணியாலே
தொலை யெட்டிக் கரை யுற்றுத் துய ரற்று விடு பட்டுத்
துணி வுற்ற குல சக்தி சரணத்தில் முடி தொட்டு
(ஜய முண்டு) (3)

## பாரதியார் ஒரு தீவிர சீர்திருத்தவாதி!

பழைய பழக்க வழக்கங்களில் பலவற்றை வேரோடு பெயர்த்து எறிந்துவிட வேண்டும் என்று பாரதி துடிப்பார். திருமதி செல்லம்மா இந்த விஷயத்தில் அடிக்கடி அபிப்பிராய பேதப்படுவார். வீட்டில் சமையலறையில் செல்லம்மா 'மடி' யாக ஆசாரத்துடன் சமையல் செய்து கொண்டிருப்பார். பாரதியார் வெளியிலிருந்து வந்து, கை கால் கழுவி, நேராக உள்ளே போய்ச் சமையல் பாத்திரங்களில் வைத்திருப்பதைத் தொட்டுவிடுவார். "பத்து, தொடவேண்டாம்!" என்று செல்லம்மா ஆட்சேபிப்பார். பாரதி அதைப் பொருட்படுத்தவே மாட்டார். இருவருக்கும் வாக்குவாதம் பலக்கும். முடிவில், இவரது பேச்சே உயர்ந்து நிற்கும்; செல்லம்மா பேசாமல் இருந்து விடுவார்.

யார் சாப்பிட அழைத்தாலும் சரி, பாரதியார் மறுமொழியில்லாமல் ஒப்பிடுவார். ஜாதி, மதம் ஒன்றையும் பார்க்கவே மாட்டார்; வாயில் பாடுவதைப் போலவே நடத்தையிலும் செய்து காட்டுவார். மனத்தில் நினைத்தால் போதும், செயலிலும் காட்டிவிடுவார். எவ்வளவு கஷ்டமானாலும் சளைக்க மாட்டார்; யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்த மாட்டார்.

—யதுகிரி அம்மாள்



ஓம் சக்தி

விடுதலை! விடுதலை! விடுதலை!

பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை!
திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்,
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வம் இந்த நாட்டிலே. (1)

ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே.
வாழி-கல்வி செல்வம் எய்தி மனமகிழ்ந்து கூடியே,
மனிதர் யாரும் ஒருநிகர் .. சமானமாக வாழ்வமே (2)

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த வகையினும் நமக்குளே;
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரி, நிகர், சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே (3)

[illegible]

# உலக கவி

**—பாரதிதாசன்**

பாரதியார் உலககவி!—அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!
ஒருருக் கொருநாட்டுக் குரிய தான
ஒட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர்; மற்றும்
வீரர்அவர்! மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர்!
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க்கின்ற
செம்மைநலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்.

# பாரதியைத் தேடினேன்!

—பெ. தூரன்

**நா**ற்பத்தெட்டு ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. நினைத்தாலும் ஆச்சரியமாக இருக்கின்றது. 1928-ம் ஆண்டிலே நான் சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். பாரதியாருடைய எழுத்திலே ஒரே ஆர்வம்; பைத்தியம் என்றே சொல்லி விடலாம். அப்படி அவருடைய எழுத்திலே ஆர்வம்.

அந்தக் காலத்திலே பாரதியார் எழுதிய எத்தனையோ கவிதைகள், கதைகள், கட்டுரைகள், அரசியல் குறிப்புகள் எல்லாம் நூல் வடிவத்திலே வராமல் 'சுதேசமித்திரன்' நாளிதழ்களிலே மறைந்து கிடந்தன. அவற்றை எல்லாம் தேடி எடுத்து வெளியிட வேண்டும் என்று எனக்கு ஒரே ஆசை. பாரதியார் எழுத்தும் மறைந்து போவதா? எத்தனையோ பழைய இலக்கியங்கள் மறைந்துவிட்டன. இன்று நம்மிடையே வாழ்ந்த கவிஞனின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட எழுத்தும் மறைய விடலாமா?

இந்த ஆசைக்குத் தூண்டுகோலாக ஒரு சங்கம் அமைந்திருந்தது. தேச பக்தியிலும், இலக்கிய வளர்ச்சியிலும் பெரிதும் நாட்டம் கொண்டிருந்த கல்லூரி மாணவர்கள் ஒன்று சேர்ந்தோம். வன மலர்ச்சங்கம் என்ற சங்கத்தைத் தொடங்கினோம். சென்னை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் அன்றிருந்த கல்லூரிகளில் இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் பயின்று கொண்டிருந்தார்கள். திருவாளர்கள் சி. சுப்பிரமணியம், ஓ.வி. அளகேசன், ஏ. அளகிரிசாமி, கே. எஸ். பெரியசாமி, கே. எஸ். பழனிசாமி, டாக்டர் எல். கே. முத்துசாமி, ச. து. சு. யோகியார் முதலிய பலர் அந்தச் சங்கத்திலே முக்கிய இடம் பெற்றிருந்தனர்.

நாட்டு விடுதலையிலும், மொழியின் ஆக்கத்திலும் பித்துக்கொண்டவர்கள் என்ற குறிப்புத் தோன்றுமாறு **'பித்தன்'** என்ற மாதப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கி நடத்தினோம். டாக்டர் எல். கே. முத்துசாமி அதன் ஆசிரியர். நான் அதன் வெளியீட்டாளன். உயர்திரு. திரு. வி. க. அவர்கள் தான் அச்சிடுவோர். சாது அச்சுக் கூடத்திலே எங்கள் மாசிகை அச்சிடப்பெற்றது. கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் புதுமுறையிலே பித்தனில் வெளியாயின. ச. து. சு. யோகியார் 'பேயன்' என்ற புனைபெயரில் எழுதினார். நான் 'தூரன்' என்ற புனைபெயரைச் சூட்டிக் கொண்டு எழுதலானேன்.

மறைந்துகிடந்த பாரதியாரின் இலக்கியப் படைப்புகளைப் 'பித்தன்' வாயிலாக வெளியிட வேண்டும் என்று ஆசை கொண்டேன்.

திரு சி. ஆர். சீனிவாசன் அவர்களை எனக்கு முன்பின் தெரியாது. ஒரு நாள் அவர்கள் முன்னால் போய் நின்றேன். ''மறைந்து கிடக்கும் பாரதியாருடைய கவிதை, கட்டுரைகளை எல்லாம் பிரதி செய்துகொள்ள விரும்புகின்றேன். அனுமதி அளிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். அவர் என்னிடத்திலே என்ன கண்டாரோ எனக்குத் தெரியாது. ''அனுமதி அளிக்கின்றேன். ஆனால் சுதேசமித்திரன் பழைய இதழ்களை அவைகள் வைக்கப்பட்டிருக்கும் அறையை விட்டுமட்டும் வெளியே எடுத்துச் செல்லக்கூடாது. அந்த அறையிலேயே இருந்து வேண்டியவற்றை எழுதிக் கொள்ளலாம்'' என்று அன்போடு கூறினார். திரு சி. ஆர். சீனிவாசன் அவர்களை நான் என்றும் மறக்க முடியாது. அவரை நினைக்கும்போதெல்லாம் ஒரு நன்றி உணர்ச்சியே என் உள்ளத்தில் இன்றும் பொங்கி எழுகின்றது.

*1905-ஆம் ஆண்டு முதல் 1921* ஆம் ஆண்டு பாரதியார் மறையும் வரை சுதேசமித்திரன் நாள் இதழ்களிலும், வாரம் மும்முறை இதழ்களிலும் பாரதியார் எழுதியிருக்கின்றார். சில ஆண்டுகளில் அதிகமாகவும், சில ஆண்டுகளில் குறைவாகவும் இருந்தாலும் இந்தக் கால எல்லைக்குள்ளே அவருடைய படைப்புகள் வெளியாகிக் கொண்டே இருந்தன. தொடக்கத்தில் அவர் மிஸ்டர் சி. சுப்பிரமணி பாரதியாராக இருந்தார். பின்னால் 'காளிதாஸன்', 'சக்தி தாஸன்' முதலான பல புனைபெயர்களிலே எழுதினார். சுதேசமித்திரன் இதழ்களை ஒவ்வொன்றாகத் துருவிப் பார்த்து பாரதியாரின் இலக்கியங்களை நகல் எடுக்கத் தொடங்கினேன். சுதேசமித்திரன் பழைய தொகுப்புகளில் சிலவற்றை முன்னால் அடுக்கிக்கொண்டேன். அவை மேஜையாக உதவின. தரையில் அமர்ந்து மாதக் கணக்கில் எழுதிக்கொண்டே இருந்தேன். திரு கே. எஸ். பெரியசாமியும், டாக்டர் எல். கே. முத்துசாமியும் பல நாட்கள் வந்து எனக்கு உதவி செய்தார்கள். பழுப்பு நிறம் ஏறி நைந்து கொண்டிருக்கும் பழைய நாள் இதழ்களைத் தொகுத்து வைத்திருக்கும் அறைக்கே அலாதியான ஒரு மணம் உண்டு. அந்த மணம் எங்களுக்கு இனிமையாகவே இருந்தது. தூய்மையான காற்று எளிதில் நுழைந்து வெளிவரமுடியாத அந்த அறையில் பலநாள் இருந்து பிரதி செய்தது என் உடலைப் பாதித்துவிட்டது என்பது வேறு விஷயம்.

'பித்தன்' இதழ்கள் ஆயிரத்திற்குமேல் செலவாயின என்றால் அந்தக் காலத்திலே அது ஓர் அதிசயம்தான். அவற்றிலே பாரதியார், வ. வே. சு. ஐயர் இருவரும் எழுதியவற்றில் மறைந்துகிடந்த கட்டுரைகள் முதலியன மாதந்தோறும் வெளியாயின. அங்கத்தினரின் கவிதை, கதை, கட்டுரைகளும் வெளியாயின.

இண்டர்மீடியட் படிப்பின் இறுதித் தேர்வு நெருங்கிக்கொண்டிருந்தது. கல்லூரிகள் பாடங்களையெல்லாம் முடித்துவிட்டுத் தேர்விற்குப் படிக்க விடுமுறை அளித்திருந்தன. மாணவர்கள் அனைவரும் பாடப் புத்தகங்களிலே மூழ்கியிருந்தனர். நான் பாரதியாருடைய எழுத்துக்களைத் தேடி நகல் எடுப்பதிலே மூழ்கியிருந்தேன்.

தேர்விற்குப் பத்து நாட்களே இருந்தன. அந்தச் சமயத்தில் ஒரு நாள் இரவு எனது நண்பன் கே. எஸ். பெரியசாமி என்னை விக்டோரியா மாணவர் விடுதியில் நிலாமுற்றத்திற்கு வரும்படி

அழைத்தான். வெள்ளிக்கதிர்களை உலகத்தின்மீது மயக்கும் பால் நிலவு வானத்திலே மிதந்து கொண்டிருந்தது. நான் 'மலர்ந்தது நெடுநிலா' என்ற கம்பன் கவிதை வரியைச் சொல்லிக் கொண்டே நண்பனை நெருங்கினேன். நிலவின் வீக்கத்தை எண்ணி ஆறெலாம் கங்கையே என்ற நினைவோடு அவனை அணுகினேன்.

''ஏண்டா! தேர்வு எப்பொழுது வருகிறதென்று நினைவிருக்கிறதா? என்று வழக்கத்திற்கு மாறாக சற்றுக் கடுமையாகவே கேட்டான்.

''இன்னும் ஒரு பதினைந்து நாளில் பாரதி வேலை அநேகமாக முடிந்துவிடும்'' என்றேன் நான்.

ஆனால் நண்பன் தனக்கே உரிய அதிகாரத்தோடு என்னவோ சொல்லி என்னை அந்தப் பத்து நாட்களும் சுதேசமித்திரன் அலுவலகம் போகாமல் தடுத்து விட்டதோடு, அதன் விளைவாக நான் முதல் வகுப்பிலே தேர்ச்சி பெறவும் செய்துவிட்டான். தேர்வில் அளகிரிசாமியும், நானும் தமிழில் ஒரே அம்சம் பெற்று, சென்னை மாநிலத்திலேயே முதலிடம் பெற்றோம்.

தேர்வு முடிந்ததும் பலரும் அவர்கள் சொந்த ஊரை நோக்கித் திரும்பிவிட்டார்கள். நான் பாரதி வேலையை முடித்துவிட்டுத் தான் ஊரை நாடிச் சென்றேன். அப்பொழுது தொடங்கிய இருமல் இரண்டு மூன்று ஆண்டுகள் என்னை விடவில்லை.

ஒவ்வொரு நாளும் சுதேசமித்திரன் இதழ்களிலே மறைந்து கிடந்த பாரதியாரைக் காணக் காண எங்களுக்கு உற்சாகம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. உல்லாச சபை என்ற ஹாஸ்யக் கட்டுரையைப் பிரதி செய்து வந்தபொழுது அதை எதிர்ப்பட்டவர்களுக் கெல்லாம் படித்துக் காட்டிக் காட்டி இன்புற்றோம். தமிழ் என்ற கட்டுரை பாரதியாரின் கட்டுரைகளில் ஒரு மணி மகுடம். அதில் அவர் எழுதியுள்ளது உங்களுக்கு நினைவிருக்கிறதா? ஒரு பகுதியை இங்கு எடுத்துக்காட்டுகிறேன். ஸ்ரீயதுநாத சர்க்கார் என்ற வங்காள அறிஞர் தாய்மொழியிலே பாடங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று 'மாடர்ன் ரெவின்யூ' என்ற பத்திரிகையில் எழுதியிருந்ததை மறுத்து, திருநெல்வேலி ஹிந்து கல்லூரி சரித்திர ஆசிரியர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் அவர் ஆங்கிலத்தில் கற்றுக்கொடுப்பதே தமக்கு எளிதாக இருக்கிறதென்றும், மாணவர்களுக்கும் அதுவே நன்கு புரிகிறதென்றும் வாதம் செய்திருக்கிறார். அதைப்பற்றி பாரதியார் கூறுவதாவது:

''சொந்த பாஷையை நேரே பேசத் தெரியாதவர்கள் சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலே தான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!!'' மூன்று தடவை புதுமை. மூன்று தடவை ஆச்சரியக் குறிகள்!

''மேலும் இவர் தமக்குத் தாய்மொழி தெரியா தென்ற செய்தியை வங்கப் பத்திரிகைக்கு ஏன் எழுதப் போனார் என்பது எனக்கு அர்த்தமாகவில்லை. ஜப்பானியர், சீனர், நார்வேக்காரர், ஸ்விஸ் ஜாதியார், இத்தாலி தேசத்தார், ஹாலந்துக்காரர் முதலிய உலகத்து ஜாதியாரெல்லாம் நம்மை அறிவிலும், சாஸ்திரங்களிலும் பாஷைத் திறமையிலும் தாழ்வென்று நினைத்து வந்தார்கள். இப்போதுதான் ஹிந்து ஜாதியாராகிய நாம் காட்டு மனிதரில்லை, வாலில்லாத குரங்குகளில்லை. நமக்குப் பாஷைகள் இருக்கின்றன; நமக்குள்ளே சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கிறார்கள்; கவிகள் இருக்கிறார்கள் என்று நம்மவரிலே சிலர் வெளியுலகத்தார் தெரிந்து கொள்ளும்படி செய்து வருகிறார்கள். இதற்குள்ளே தமிழ் வகுப்பு மற்ற ஹிந்துஸ்தானத்து வகுப்புக்களைக்காட்டிலும்குறைவு பட்டதென்று நம்மிலே சிலர் முரசடிக்கத் தொடங்குவது எனக்கு நகைப்புண்டாக்குகிறது.

என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் சொல்லி விடுகிறேன்.

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம்சிகரம்போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப்போல் வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியில் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப் போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அதுவரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச்சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்க வேண்டும். இவ்வளவுதான் என்னுடைய வேண்டுகோள்.''

## முதன் முதலில்!

**1904-ல் பாரதியார் சென்னை வந்து சுதேசமித்திரன் அலுவலகத்திலே பணியாற்றிய சமயம். 'வங்க வாழ்த்துக் கவிகள்' என்ற அவருடைய பாடல் சுதேசமித்திரனில் 15-9-1905-ல் வெளியானது. சுதேசமித்திரனில் பாரதியார் எழுதிய முதற் கவிதை இதுவே எனக் கருதப்படுகிறது.**

**பாரதியாரின் கவிதை ஒன்று மதுரையிலிருந்து வெளியான 'விவேக பாநு' என்ற மாத இதழில் முன்பே வெளியாகியுள்ளது. 'தனிமை இரக்கம்' என்ற தலைப்புள்ள அக்கவிதை 1904 ஜூலை இதழில் வந்துள்ளது. இதுவே அச்சில் வந்துள்ள பாரதியாரின் முதற் கவிதை. இதை அவர் எட்டையபுரத்தில் இருந்தபோதே பத்திரிகைக்கு அனுப்பியுள்ளார்.**

**1908-ல் பாரதியார் 'ஸ்வதேச கீதங்கள்' என்ற நூலை வெளியிட்டார். பதினான்கு பாடல்கள் அடங்கிய இதுவே அவருடைய முதல் நூலென்று கொள்ளலாம். அந்நூலை அவர்தம் குருவாகிய நிவேதிதா தேவியாருக்கே சமர்ப்பணம் செய்திருக்கிறார். ''ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவ ரூபம் காட்டி ஆத்மநிலை விளக்கிய தொப்ப எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி ஸ்வதேச பக்தி யுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூல் ஸமர்ப்பிக்கின்றேன்'' என்று அவர் எழுதியுள்ளார்.**

இந்தக் கட்டுரை கிடைத்த நாளன்று எங்கள் குதூகலம் அளவு கடந்து பெருகிவிட்டது. நண்பர்களெல்லாரும் சேர்ந்து ஒரு ஆனந்தக் கூத்தே ஆடிவிட்டோம்.

பாரதியைத் தேடியதில் அவருடைய இலக்கியமும், தமிழும் அடைந்த பயனைவிட நான்தான் பெரிதும் பயனடைந்தேன்.

''தம்பி—உள்ளமே உலகம்.

ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே மேலே! நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி.

உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ. பற! பற! மேலே, மேலே, மேலே'' என்று நான் தேடிய பாரதிதானே எனக்கு உணர்ச்சி ஊட்டினார்!

இவ்வாறு நான் தேடி அரிதாகச் சேர்ந்த பாரதியாரின் கவிதை, கதை, கட்டுரைகளைச் சுமார் எழுநூறு பக்கம் கொண்ட ஒரு நூலாக 'பாரதி தமிழ்' என்ற பெயரில் வெளியிட்டேன். நான் செய்த சேவையைப் பாராட்டித் தமிழ் எழுத்தாளர் சங்கம் எனக்கு ஒரு பொற்பதக்கம் அளித்துச் சிறப்பித்தது. நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் நான் இந்தப் பணியை மேற்கொண்டிராவிடில் பாரதியாருடைய இலக்கியப் படைப்பில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் மறைந்தேபோயிருக்கும் என்பது பலருடைய கருத்தாகும்.

அன்று தமிழ் எழுத்தாளர்களின் சங்கத் தலைவராக விளங்கிய பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நான் வெளியிட்ட பாரதி தமிழைத் தம் மேஜையின் மேலேயே பல நாள் வைத்துக் கொண்டு அவரை நாடி வருபவர்களிடத்திலெல்லாம் அதைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்ததை நான் கேள்வியுற்றுப் பெரிதும் பூரிப்படைந்தேன்.

பாரதியின் இலக்கிய முதிர்ச்சியை ஆராய்பவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் பல கவிதை, கட்டுரை, கதைகள் வெளியான தேதியை 'பாரதி தமிழில்' குறித்துள்ளேன். ஆனால் அந்த நூல் மீண்டும் அச்சேறுவதற்கு வகையில்லாமல் மறைந்துவிடும் நிலையில் உள்ளது.

# பாரதியின் சாதனை!

—பேராசிரியர் அ. சீனிவாசராகவன்


தமிழ் இலக்கிய வரலாற்றில் இக்காலத்தை 'பாரதி சகாப்தம்' என்று குறிப்பிடலாம். இலக்கியத் துறைகள் பலவற்றில், பாரதி புதிய பாதைகள் வகுத்தார். அவர் காலத்துக்கு முன், முடக்குவாதத்தில் அடிபட்டதுபோல் நடக்க முடியாமல் திணறியது தமிழ் வசனம்.

'ஜகத் சித்திரம்', 'விடுதலை' போன்ற கவிதை நாடகத் துணுக்குகள், 'நவதந்திரக் கதை' என்ற நீதிக் கதைத் தொடர், 'ஞான ரதம்' என்ற வசன காவியம், 'வேத ரிஷிகளின் கதை', 'பகவத் கீதை', 'கற்பனையூர்' போன்ற அற்புதமான மொழி பெயர்ப்புக்கள் 'தராசு' என்ற தன்மயக் கட்டுரை, 'சந்திரிகை' என்ற நாவல்! பாரதி வழிகாட்டாத இலக்கியத் துறை ஏது? என்றாலும் அவருடைய சாதனையின் சிகரமாகவிளங்குவது அவருடைய கவிதையே!

கம்பருடைய காலத்திற்குப் பிறகு, பல நூற்றாண்டுகளுக்கு கவிதையைப் பொறுத்த மட்டில் தமிழ் இலக்கிய உலகம் வறண்டு கிடந்தது. இந்தக் காலத்தில் பல செய்யுள் நூல்கள் இயற்றப்பட்டன. உண்மைதான். ஆனால் அவை பெரும்பாலும் குட்டி ஜமீந்தார்களை வானளாவப் புகழ்ந்து தூபம் போட்ட புகைக் கால்கள்; காமக் களியைப் பச்சையாகப் பேசி பல் இளித்த தசைப் பேயின் நரகச் சிரிப்புக்கள்; செங்கற் சூளையிலிருந்து வெளி வரும் கற்களைப் போல, ஒன்று போல் ஆயிரமாகக் குவிந்த உயிரற்ற பிரபந்தப்பிரதிகள்; சித்திரக் கவி என்று தமிழைப் பொருளற்ற கூட்டில் அடைத்த சித்திரவதைகள். ஒரு சில நூல்கள்—பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க அடிகள் இவர் தம் பாடல்களைப் போன்ற ஒரு சில நூல்கள்—தமிழ் சாகவில்லை என்பதற்குச் சாட்சியாக நின்றன. ஆனால் இந்த வகை நூல்களிற் பெரும்பாலானவை, வாழ்க்கையிலிருந்து பார்வையைத் திருப்பி, ஸங்கேத பதங்களும், வறட்டுத் தத்துவப் பணியும் சிருஷ்டித்த தெளிவற்ற இருள் வெளியிலே கவிதைப் பெண்ணை 'நில்' என்று நிறுத்தி விட்டு எங்கேயோ நீள நடந்தன.

இந்தச் சூழ்நிலையில் பாரதி பிறந்தார். தமிழ்க் கவிதையைப் போலிப் புலமைக் கோணங்கியிலிருந்தும், திருகலிலிருந்தும் விடுவித்தார். தத்துவ விசாரம் என்ற தகுதியிலாப் பெயரால் குருடர் அமைத்த இருட்கோட்டையிலிருந்து அதைச் சிறை மீட்டார். இம்மண்ணுலக வாழ்க்கையின் நட்ட நடுவில் கேணியருகில், தென்னை மரக் கீற்றின் பட்டொளியில், இதய ஒலியின் அரவணைப்பில் கவிதையை வாழ வைத்தார். மனித வாழ்வின் இன்ப துன்பங்கள் என்ற அனுபவமாகிய உணவை ஊட்டினார். வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவமாகி நிற்கும் மெய்ப்பொருளைத் தொடவும் முயன்றார். யாப்பருங்கல வாய்ப்பாட்டுக்குப்பதிலாக, அனுபவத்தைக் கவிதைக் கருவியாக்கினார். சொல், அணி அடுக்குகளுக்குப் பதிலாக, உள்ளத் தொளியை வாக்கின் தெளிவாக்கும் வனப்பைக் கொணர்ந்தார். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைப் பேச்சிற்குப் பதிலாக உண்மைப் பாவலர்க்குத் தோன்றும் தன் மய தரிசனத்தைத் தனி முறையில் வகுக்கும் ஆற்றலைச் சமைத்தார். பொருளற்ற சொற் குவியல்களை வண்ணமும், ஒளியும் வீசும் கோலப் பாடல் மணிகளாகக் கடைந்தெடுத்தார். தமிழ் நாட்டிலே கவிதை தெளிந்த விழியோடு, ஆழ்ந்த உணர்வோடு ஆற்றலோடு புனர் ஜன்மம் எடுத்தது. இதுவே பாரதியின் சாதனை.

—பாரதியார் பெருமை என்னும் நூலிலிருந்து.....



# பாரதி வாழ்க்கை வரலாறு

அரிது அரிது மானிடராதல் அரிது. அதனினும், கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது, என்பதோடு மட்டும் ஔவை தனது பாடலை நிறுத்திவிட்டார்.

வளர்ந்துவரும் மனிதவாழ்க்கையில் ஒவ்வொருவரும், எடுக்கவும் கொடுக்கவும் கூடிய சமுதாய அமைப்பை இப்பொழுது பெற்று வருகிறோம். எனவே தானமும், தவமும் கூட எந்த ஒரு விதத்திலாவது செய்து விட முடியும்.

இத்தனைக்கு மேல் ஒருவன் கவிஞனாகப் பிறக்கிறான் என்றால் அது எத்தனையோ நூற்றாண்டுக்கு ஒரு முறை நிகழும் நிகழ்ச்சி என்றுதான் கூறமுடியும். கம்பனுக்குப் பின் தமிழ் மக்கள் உள்ளத்தில் நிலைத்து நின்று வரும் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஒருவரே!

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு எத்தனையோ தேசியத் தலைவர்களைப் பெற்றெடுத்த பெருமை உண்டு. வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, வாஞ்சிநாதன் போன்றவர்கள் அதே மாவட்டத்தில் பிறந்தவர்கள். எட்டையபுரத்தில் 1882-ஆம் ஆண்டு டிசம்பர் 11ந் தேதி சின்னச்சாமி அய்யருக்கும் லெட்சுமி அம்மாளுக்கும் பிறந்த குழந்தைதான் நமது சுப்பிரமணிய பாரதியார்.

அவர் இளமையிலேயே கவி பாடக் கூடிய திறமை பெற்றிருந்தார். பதினொரு வயது நிரம்பிய சுப்பையா என்று செல்லமாக அழைக்கப்பட்ட இவரை எட்டையபுரம் சமஸ்தானப் புலவர்கள் பற்பல சோதனைக்கு உட்படுத்தினர். அவைகளில் வெற்றி பெற்றதால் அந்தப் புலவர்கள் வியந்து அளித்த பட்டம் பாரதி,

அவர் 1894—1897 வரை திருநெல்வேலி இந்து கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாம் படிவம் வரை படித்தார். படிக்கும்போதே தமிழ்ப் பண்டிதர்களுடன் ஏற்பட்ட சொற்போர் காரணமாக படிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. பாரதியாரின் 15 வயதிலேயே அக்கால வழக்கப்படி திருமணம் நடந்தது. 7 வயது நிரம்பிய செல்லம்மா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.


1898—1902 வரை காசியில் தனது அத்தை குப்பம்மாள் அவர்களுடன் தங்கி இருந்தார். அப்போது அலகாபாத் சர்வகலாசாலையில் பிரவேசத்தேர்வு எழுதி வெற்றி பெற்றார். காசி இந்து சர்வகலாசாலையில் ஹிந்தியும், வடமொழியும் பயின்றார். அப்போதுதான் நமது பாரதியாருக்கு தலைப்பாகை கட்டும் பழக்கமும் மீசை வைத்துக் கொள்ளும் பழக்கமும் ஏற்பட்டதாக அறிகிறோம். மீண்டும் எட்டையபுரம் வந்து 1902 முதல் இரண்டாண்டு காலத்திற்குள் எட்டையபுரம் மன்னருக்குத் தோழனாக இருந்தார். அப்போதுதான், மதுரையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'விவேகபானு' என்ற பத்திரிகையில் இவரது முதல் பாடல் 'தனிமை இரக்கம்' அச்சாகி வெளியிடப்பட்டது.

1904-ம் ஆண்டு மதுரையில் உள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார்.

அதே ஆண்டு நவம்பரில் சென்னையிலிருந்து வெளிவரும் 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு உதவியாசிரியரானார்.

பின்பு 'சக்கரவர்த்தினி' என்ற பத்திரிகையின் ஆசிரியராக ஆனார்.

1905-ஆம் ஆண்டில் பாரதியார் அரசியலில் ஈடுபட்டு இருந்



பாரதியாரும் அவருடைய மனைவி செல்லம்மாளும்

தார். தீவிரமாக உழைக்க ஆரம்பித்தார்.

1906-ல் சென்னையிலிருந்து வெளிவந்த 'இந்தியா' என்ற வாரப் பத்திரிகை மூலம் தனது அரசியல் கருத்துக்களை இந்நாட்டு மக்களிடம் பரப்பினார். அப்போது திருமலாச்சாரியார், வ. உ. சி., சர்க்கரைச் செட்டியார் முதலியோரின் நட்புக் கிடைத்தது.

சூரத் காங்கிரசில் தீவிர வாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக காங்கிரசில் 1907-ல் பிளவு ஏற்பட்டது. பாரதியார், திலகர் போன்ற தீவிரவாதிகளின் பக்கம் நின்று பணியாற்றினார். அப்போது திலகர், லாலா லஜபதிராய், அரவிந்தர் முதலியோரைச் சந்தித்தார். கிருஷ்ணசாமி அய்யர் என்ற தேச பக்தர் பாரதியாரின் பாடல்களில் உள்ள வேகத்தின் தன்மையை உணர்ந்து 'சுதேச கீதங்கள்' என்ற தலைப்பில் அவரது பாடல்கள் பலவற்றை அச்சிட்டு இலவசமாக விநியோகித்தார்.

1908-ஆம் ஆண்டு, 'சுயராஜ்ஜிய தினம்' சென்னையிலும் தூத்துக்குடியிலும் கொண்டாடப்பட்டது. அதில் வ. உ. சி., சுப்ரமணிய சிவா போன்றவர்களுக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது. அந்த வழக்கில் பாரதியார் சாட்சியம் சொல்லியுள்ளார்.

அதே ஆண்டில், கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் வெளியிட்ட 'சுதேச கீதங்கள்' என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பு ஒன்றை பாரதியார் வெளியிட்டார்.

இது வெளிவந்த பின், பிரிட்டிஷ் அரசாங்கம் பாரதியார் மீது ஒரு கண்ணோட்டம் விட்டது. 'இந்தியா' பத்திரிகையின் சட்ட ரீதியான ஆசிரியர் கைது செய்யப்பட்டு, பாரதியார் மீது வாரண்ட் போட்டது. பாரதியார் தலைமறைவானார். புதுச்சேரி சென்றார். அங்கும் போலீஸ் தொல்லைகளுக்கு உட்பட்டார்.

அப்போது 'இந்தியா' பத்திரிகை 1910 வரை புதுச்சேரியிலிருந்து தனது தேசியத் தொண்டைத் துவக்கியது. எரிமலை வெடித்தது போன்ற எழுத்துக்களால் மக்களிடையே விடுதலை வேட்கையைப் பரப்பினார். இதனைக் கண்ட பிரிட்டிஷ் அரசு 'இந்தியா' பத்திரிகை வருவதைத் தடுத்தது. அத்துடன், பத்திரிகை, விற்பனைக் குறைவால் நின்று போயிற்று.

1911-ல் மணியாச்சியில் கலெக்டர் ஆஷ் துரை சுட்டுக் கொல்லப்பட்டபோது, புதுச்சேரியில் உள்ள தேசபக்தர்கள் மீது சந்தேகம்

## பாரதியாரும் பதினொன்றும்!

மகாகவி பாரதியாருக்கும், 11-ஆம் எண்ணுக்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும்.

பாரதியார் பிறந்தது 1882-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள்.

அவர் 'பாரதி' என்னும் பட்டம் பெற்றது, தம் 11-வது வயதில்!

அவர் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தது 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் நாளில்!

ஏற்பட்டு, அங்கு உள்ள தேச பக்தர்களுக்குத் தாங்கொணுத் துன்பத்தை ஆட்சியினர் கொடுத்தனர். மேலும் அவர்களை அங்கிருந்து வெளியேற்றவும் முயற்சிகள் நடைபெற்றன. பாரதியாரின் சீடர்கள் ஏராளமாயினர்.

பாரதியார் 1912-ல் கீதையை மொழி பெயர்த்தார். மேலும் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற 'காவியங்கள்' அவரால் எழுதப் பெற்றன. பாஞ்சாலி சபதம் வெளியிடப்பெற்றதும் இந்த ஆண்டில் தான்.

அடுத்த ஆண்டில் 'ஞானபாநு' என்ற பத்திரிகைக்குச் செய்திகள் சேகரித்துக் கொண்டிருந்தார். 1914-ல், முதல் உலகப் போர் துவங்கியதும் அங்கு உள்ள தேச பக்தர்களுக்கு ஏராளமான தொல்லைகள் ஏற்பட்டன.

பரலி சு. நெல்லையப்பர் அவர்கள் 1917-ல் 'கண்ணன் பாட்டு' முதற் பதிப்பைச் சென்னையில் வெளியிட்டார்கள். அதைத் தொடர்ந்து, 1918-ல் 'சுதேச கீதங்கள்', 'நாட்டுப் பாடல்' முதலியன வெளியிடப்பட்டன.

புதுச்சேரி வாழ்க்கையில் ஏற்பட்ட சலிப்பு உணர்வால் பாரதியார் 1918-ஆம் ஆண்டு நவம்பர் 20-ந் தேதி அங்கிருந்து வெளியேறினர். அப்போது கடலூருக்கு அருகே கைதுசெய்யப்பட்டு, சில நாட்கள் சிறை இருந்த பின்னர், விடுதலை செய்யப்பட்டார். விடுதலையானவுடன் கடையத்துக்குச் சென்றுர்.

1918 முதல் 1920 வரை கடையத்தில் வாழ்ந்து வந்த பாரதியார் எட்டையபுர மன்னனுக்குச் சீட்டுக் கவிகள் மூலம் தன் நிலைமையைச் சொல்லியும், எவ்விதப் பயனும் ஏற்படாததால் சென்னைக்கு வந்தார். சென்னையில் ராஜாஜி அவர்கள் வீட்டில் மகாத்மா காந்தியைச் சந்தித்தார்.

1920-ல் மீண்டும் 'சுதேசமித்திர'னுக்கு உதவியாசிரியரானுர். பாரதியாரின் எழுத்துக்கள் அப்போது நிறைய இடம் பெற்றன.

1921-ல் திருவல்லிக்கேணியில் கோயில் யானை ஒன்றுல் தூக்கி எறியப்பட்டு, அதிர்ச்சியுற்று, நோய் வாய்பட்டு 1921 செப்டம்பர் 11-ம் தேதி நள்ளிரவுக்குப் பின் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றுர். உலக வாழ்விலிருந்து விடுதலை பெற்ற பாரதியார், உலக மக்களின் உள்ளங்களிடையே இன்னும் வாழ்ந்து வருகிருர். வாழ்க மகாகவி பாரதியார்!

நன்றி: வானதி பதிப்பகம்.

# வருங்காலம்

## சுப்பிரமணிய பாரதியார்

உலகம் எவ்வளவு தீவிரமாக மாறிக்கொண்டு வருகிறதென்பதை தமிழ் நாட்டார் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். ஒவ்வொருவரும் சிற்சில விவகாரங்களில் மனத்தைப் பதியவைத்துக்கொண்டு வெளியுலகத்தின் மாறுதல்களிலே புத்தி செலுத்தாமல் அற்ப விருப்பங்களிலும், அற்பச் செய்கைகளிலும் நாளையெல்லாம் கழியவிட்டுக் கிணற்றுத்தவளைகளைப் போல் வாழ்வதிலே பயனில்லை.

வர்த்தகஞ் செய்வோர் கோடிக்கணக்கான பணப் புழக்கம் ஏற்படும்படி பெரிய வர்த்தகங்கள் செய்ய வழி தேட வேண்டும். படிப்பவர் அபாரமான சாஸ்திரங்களையும் பல தேசத்துக் கல்விகளையும் கற்றுத்தேர வேண்டும். ராஜ்ய விவகாரங்களில் புத்தி செலுத்துவோர் உலக சரித்திரத்தை நன்ருகத் தெரிந்துகொண்டு, மற்ற ராஜ தந்திரிகளும், மந்திரிகளும் கண்டு வியக்கும்படியான பெரிய பெரிய யோசனைகள் செய்து நிறைவேற்றிப் புகழ் பெற வேண்டும். கைத்தொழில்களின் விஷயத்திலே நாம் இப்போது காட்டி வரும் சோர்வும் அசிரத்தையும் மிகவும் அருவருப்புக்கு இடந் தருகின்றன.

திருஷ்டாந்தமாக, நேர்த்தியான சித்திரங்களும், வர்ணங்களும் சேர்த்துப் பட்டிலும் பஞ்சிலும் அழகான ஆடைகள் செய்யவல்ல தொழிலாளிகள் நமது நாட்டில் இருக்கிருர்கள். இவர்களுக்குப் படிப்பில்லை. வெளியுலக நிலை தெரியாது. கையிலே முதற் பணமுமில்லை. நம்முள்ளே கல்வியும் செல்வமும் உடையோர் கூடி ஆராய்ச்சிகள் செய்து வெளி நாடுகளில் ஆவலுடன் வாங்கக் கூடிய மாதிரிகள் ஏவை என்பதைக் கண்டுபிடித்து அவற்றை நமது தொழிலாளிகளைக் கொண்டு செய்வித்தால் மிகுந்த லாபமுண்டாகும்.

இரும்புத் தொழில் உலகத்திலே வலிமையும் செல்வமும் கொடுப்பது. எல்லாவிதமான கைத்தொழில்களும் தற்காலத்தில் இரும்பு யந்திரங்களாலே செய்யப்படுகின்றன. ஆதலால், நமது தேசத்துக் கொல்லருக்கு நாம் பலவிதங்களிலே அறிவுவிருத்தியும் ஜீவன ஸௌகர்யங்களும் ஏற்பாடு செய்து கொடுத்து இடத்துக்கிடம் இயன்ற வரை இரும்புத் தொழில்களை வளர்க்க வேண்டும்.

இனி, வர்ணப்படம், தையல்வேலை,.....மைத் தொழில் முதலிய சித்திர வேலைகளில் நமது ஜனங்களின் அறிவு மிகவும் சிறந்தது. கொஞ்சம் சிரமப்பட்டால், இந்தத் தொழில்களை மறுபடி உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வந்துவிடலாம். சிறிது காலத்துக்கு முன்பு சீனத்திலிருந்தும் ஜப்பானிலிருந்தும் பல சித்திர வேலைகளைக் கொண்டுபோய் அமெரிக்காவில் காட்டியபோது, அங்கே அவற்றிற்கு மிகுந்த புகழ்ச்சியும் பிரியமும் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

வெளிநாட்டுக்குக் கப்பலேறிப் போங்கள், புறப்படுங்கள், புறப்படுங்கள். தொழிலாளிகளே, வியாபாரிகளே, வித்வான்களே, புத்திமான்களே, எப்படியேனும் யாத்திரைச் செலவுக்குப் பணம் தயார் செய்து கொண்டு அன்னிய தேசங்களைப் பார்த்து விட்டு வாருங்கள். நமது தொழில்களுக்கும், கலைகளுக்கும், யோசனைகளுக்கும் வெளி நாடுகளில் ஏராளமான உதவி கிடைக்கும், சந்தேகப்பட வேண்டாம்.

(பாரதியார் எழுதிய கட்டுரை)

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட*
*11,116 பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| | முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. 1,00,000 |
| 5 | இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 50,000 |
| 10 | மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 20,000 |
| 100 | நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 5,000 |
| 1,000 | ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 500 |
| 10,000 | ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*

*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.*

*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்,**
**தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,**
**சென்னை-600 002.**



# மகாகவியும் மகாத்மாவும்

—சுத்தானந்த பாரதியார்

புதுச்சேரி இன்று புதுயுகச் சேரியாக விளங்குகிறது. அன்று சேரி என்ருல், ஏதோ ஓர் இனம் ஒதுக்கமாக வாழும் இடம். இன்று ''சேரி'' என்ருல் உலகெல்லாம் சாதி மத நாடு நிறவேறுபாடில்லாமல் சேர்ந்து வாழும் இடம். புதுச்சேரியில் இன்று மேற்கும் கிழக்கும் கைகோத்து உலாவுகிறது. ஆரோவில்-என்ற உலக-நகர் எழுந்து கொண்டிருக்கிறது. இந்த அற்புதத்தைச் செய்தது ஸ்ரீ அரவிந்த சக்தி.

புதுச்சேரியில் முதன்முதல் புகுந்து புகலடைந்தவர் கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரே. பாரதியார், சென்னையில் இந்தியா பத்திரிகை ஆசிரியராயிருந்தார். அவர் படபடப்பும், துடிதுடிப்பும், பாசமும், பாய்ச்சலுமாயிருப்பார். பாரமெல்லாம் பாரத பராசக்தியிடம் வைத்தார் அவர். ''வேண்டுமடி எப்போதும் விடுதலை'' என்று பராசக்தியிடம் உரப்பாகக் கேட்பார். ''என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்' என்று ஏங்கித் தவிப்பார். அவர் உறக்கத்தில் கூட ''சுதேசம், சுதந்திரம்'' என்று நெட்டுயிர்ப்பார். பாரதியார் அருள்பெற்ற அமரகவி. அவர் உள்ளத்துடிப்பிற்கேற்ற ''இதழ்'' அமையவில்லை. சுதேசமித்திரனில் தலையங்கம் எழுத முடியவில்லை. வீறு பெற்ற அவரது பேனா, விடுதலை தேடிப் படபடத்தது.

விவேகானந்தருக்குச் சென்னையில் அணுக்கத் துணைவராயிருந்தவர் அளசிங்கப்பெருமாள். அவர் ஒரு ரசாயன ஆசிரியர். அவருடைய உறவினர்கள் மண்டபம் திருமலாச்சாரியாரும் ஸ்ரீநிவாசாச்சாரியரும் கூடி 'இந்தியா' பத்திரிகையை நடத்தி வந்தனர். பாரதியார் அதன் ஆசிரியராகி, வேட்டு நடையில் விடுதலைக் கனல் கக்கினர். பாரதியார் எழுத்து, தமிழுக்குப் புதிய எழுச்சியைத் தந்தது. பிரிட்டிஷ் ஒற்றர் வரிவரியாகப் படித்து, கத்தை கத்தையாக மேலே எழுதிவிட்டனர். வங்கத்தில் 'வந்தே மாதரம்', பம்பாயில் 'கேசரி', சென்னையில் 'இந்தியா'-இம் மூன்று பத்திரிகைகளும் வீரசுதந்திரப் பேரிகை முழக்கின. 'இந்தியா'வை அதிகார வர்க்கம் ஒடுக்கி அடக்கச் சட்டம் போட்டது. பாரதியாரைக் கைது செய்ய 'வாரண்டு' பிறப்பித்தது.

''பாரதியாரோ, ''உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' என்று திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் மண்டபத்திலிருந்து குரலெடுத்துக் குதித்தார்.

டாக்டர் ' நஞ்சுண்ட ராவ் அவரை அழைத்து, ஆபத்தை விளக்கி, அன்றிரவே புதுச்சேரிக்கு வண்டியேற்றி விட்டார்.

புதுச்சேரியில் பாரதியார் பட்டபாடு, அந்தக் காலத்தில் பிரதாபசிங்கன் நாடு இழந்து, போரிழந்து, வறுமையுழன்று, அரவலி மலைக் கணவாயில் பட்ட துன்பங்களுக்கே இணையாகும். இரண்டு நாள் இடம் கொடுத்த குப்புசாமி, ''கிளம்பும்!'' ஒற்றர் தொல்லை வருகிறது'' என்று துரத்தினர். பாரதியார் எப்படியோ தர்மராஜாகோவில் தெருவில் ஒரு வீடு பிடித்துக் குடியேறினர். அந்த வீட்டைச் சுற்றி ஒற்றர். வெளியே சென்ருல் ஒற்றர்!

பாரதியார் தலை நிமிர்ந்தே நடந்தார். ''செல்வோம் சுதேச வீரர்-நம் கீர்த்தி பெருகிடு நாளே'' என்று பொருள்படும் பிரெஞ்சு தேசிய கீதத்தைப் பாடிக் கொண்டும், சீழ்க்கையடித்துக் கொண்டும், கடற்கரைப் பாலத்தில் நடை போட்டார். வீட்டில் உணவிராது, மனைவி மக்கள் கவலைப் படுவர், நோய் நொடி வரும். ஆனல், பாரதியாரின் தேச பக்திக்கு என்றும் நோய் நொடி வந்ததில்லை. அவர் நாட்குறிப்புகளில் எழுதுகிருர்; ''கடன்காரன் வந்து நிற்கிருன். எத்தனை நாள் சாக்குச் சொல்வது! உடல் படுக்கிறது-என்னையே நம்பியிருக்கும் மனைவி, கவலைப் படுகிருள்-வீட்டுக்கு வந்தால், கவலை-கடற்கரை சென்ருல் விடுதலை! பராசக்தி! உன்னையே நம்பியுள்ளோம்; நீ வழி காட்டாவிட்டால்...... ஹூம்ம்... ''தேடியுன்னைச் சரணடைந்தேன் தேச முத்துமாரியம்மா...தேச முத்து மாரி''...ஆனந்தக் களியாட்டம்! கவலை பறந்து போகும்.

ஸ்ரீ அரவிந்தர் உறவினல் பாரதியார் வேதப் பொருளை ஆராய்ந்து, யோக வழியிற் சென்ருர். அவர் எழுத்தில் புதிய ஆவேசம் பிறந்தது. அரவிந்தரின் அமரக் கனவுகள் பாரதி வீணையில் கமகங்களுடன் மீட்டப்பட்டன. புதுவையில் மீண்டும் 'இந்தியா' எழுந்தது; சர்க்கார் அதையும் அடக்கி விட்டது. சென்னைக்கு 'இந்தியா' வரக் கூடாது என்று சட்டம் போட்டு ஆணியடித்து விட்டது. பாரதியார் 'கண்ணன் பாட்டும்', 'குயில்

பாட்டும்', 'பாஞ்சாலி சபதமும்' பாடி தமது கவியார்வத்தைக் காலம் உள்ளளவும் விளங்கச் செய்தார்.

**1910**-ல் வீர விளக்கு வ.வே. சு. ஐயரும் புதுவையில் புகலிடம் கொண்டிருந்தார். கவி, யோகி, வீரக் கலைஞர்-இம் மூவரும் புதுச் சேரிக்குப் புதுமையளித்து, அதைப் புனிதமான யாத்திரைத் தலமாக்கினர். திலகரும், அர விந்தரும் விட்ட அரசியல் வானில் மகாத்மா காந்தி எழுந்து பளிச் சிட்டார்.


தென்னாப்பிரிக்காவில் கறுப்புச் சட்டத்துடன் போராடி ஒருவாறு வெற்றி பெற்ற காந்திக்கு, இந்தியாவில் 'ரௌலெட்' சட்டம் காத்திருந்தது. **1917**-ல் இந்தச் சட்டம் உருவானது. உருவாக்கினவர்கள் ரௌலெட்டு, குமாரசாமி சாஸ்திரி, சந்திரமித்தர் ஆகிய மூவர்.

இந்தச் 'சதிச் சட்ட' அறிக்கையில் சாவர்கார், வ. வே. சு. ஐயர், அரவிந்தர், பரீந்திரர், திலகர், வாலாஜி முதலிய தேச பக்தர்களின் புரட்சி வரிசைகளை இராமாயணமாக எழுதித் தீர்த்தது பிரிட்டிஷ் அதிகார வர்க்கம். ஐந்து பேர் கூடிப் பேசக் கூடாது! 'தேசம்' என்றால், சிறைவாசம்! 'விடுதலை என்றால், விலங்கு'. எதிர்த்தால், எமலோகம். ஒற்றர் விழிகள் குற்றங் காணப் புலிப் பார்வையுடன் சுற்றுகின்றன.

பதிதபாவனனாக எழுந்தார் காந்தி மகான். வல்லபாய் படேல் 'அவசரம், முன்செல்வோம், துணிந்து எதிர்ப்போம்'' என்றார். காந்தி தீவிரமாகச் சிந்தித்தார். ''ஹர்த்தால்'' என்ற மருந்தைக் கண்டு பிடித்தார். ஹர்த்தால் என்றால் வேலை நிறுத்தம். நமது இந்தியப் பண்பாட்டுடன் ஒட்டிய சாதனையே அது. ஸ்ரீராம நாம பஜனை செய்து, உபவாசமிருந்து, விரதம் செய்து, ''தேசத்தைக் காக்கத் தெய்வத்தைத் தொழும் நாள் அதுவே.

மகாத்மா காந்தி அந்தச் சமயம் சென்னை, மதுரை முதலிய இடங்களில் அன்பர்களைப் பார்த்து விட்டுப் புதுச்சேரிக்கு வந்தார். அரவிந்தரைத் தரிசிக்க முயன்றார். முடியவில்லை. வீரக் கலைமணியான வ. வே. சு. ஐயரைப் பார்த்தார். காந்தியைக் கண்டதும் ஐயர் உள்ளம் உருகிவிட்டது பேச முடியவில்லை. நாக்கு தழதழத்தது.

ஐயர்: நமஸ்தே மகாத்மாஜி! நாங்கள் தேச விடுதலைக்காகத் துடிக்கிறோம். கண்ணீர் வடிக்கிறோம். துப்பாக்கி பிடிக்கிறோம்.



வ. வே. சு. அய்யர்.

காந்தி: துப்பாக்கி பயன் படாது. அன்னியர் அதைக் கொண்டுதான் நம்மை அடக்கி வைத்திருக்கிறார்கள். நாம் அதை விடத் தீவிரமான ஆயுதத்தைக் கையாள வேண்டும். பிரிட்டிஷ் பீரங்கியை நமது கள்ளத் துப்பாக்கி எதிர்க்க முடியாது. அந்த நினைப்பே வேண்டாம்.

ஐயர்: துள்ளும் வீர உள்ளத்திற்கு வழியென்ன? நாம் ஏன் கரிபால்டி, நானாசாகேப் போன்று படை சேர்த்துப் போராடக் கூடாது?

காந்தி : கரிபால்டி தனது படைகளுக்கு முன்னும் பின்னும் ஒன்று சொன்னான். அதுவே ''தியாகம்'' நமக்கு அது போதும் சத்தியாக்கிரகமே சமயத்திற் கேற்ற ஆயுதம். பகைவனைப் பகையோம்; அவனைச் சுடோம்; இரத்தம் வடியோம்! நமது இரத்தத்தைக் கொடுப்போம்; நமது அச்சத்தைச் சுடுவோம். ராமநாம பேரி கொட்டி, ரண களத்தைத் தூண்டுவோம். ஆத்ம தீரத்தை விளக்குவோம். இப்போது 'சதிச் சட்டம்' வந்திருக்கிறது. அதை மறுத்து நாடு முழுதும் எழுந்து ஹர்த்தால் நடத்துவோம்....ஐயரே, துப்பாக்கியைக் கடலில் எறிந்து விட்டு வாரும். அச்சமற்ற தியாகத்தை அணிந்து வாரும். வெற்றி நமதே

ஐயர்: மஹாத்மாஜி! அன்று கண்ணன், விஜயனுக்கு ''பகைவரைக் கொல்'' என்றான். இன்று தாங்கள் ''அச்சத்தைக் கொல்லு; ஆத்ம சக்தியால் வெல்லு'' என்கிறீர்கள். இதோ திரிகரண சுத்தியுடனே தங்களைப் பின்பற்றுகிறேன்....எனது நண்பர் கவி பாரதி இருக்கிறார். அவரையும் அழைக்கிறேன்.

ஐயர், சுபத்திராவைப் பாரதி வீட்டிற்கு அனுப்பினார். பாரதியார் இன்னும் வீட்டுக்கே வரவில்லை என்ற தகவல் வந்தது. ஐயர் வருத்தப்பட்டார். காந்தி விடைபெற்று, வண்டியேறி விட்டார். ஐயர் அவரை அனுப்பி விட்டுத் திரும்பி வந்ததும், பாரதியாரும் வந்து சேர்ந்தார்.

பாரதி : எங்கே காந்தி? எங்கே எம்மான்!

ஐயர் : அடடா! பாரதி, அவர் இப்போதுதான் வண்டியேறினார். வண்டி புறப்பட்டு விட்டதே. நீர் எங்கே சென்றீர்? சுபத்திராவை அனுப்பினேன். நீர் வீட்டில் இல்லையாமே!

பாரதி : அடடா! பிழை செய்தேன். கிருஷ்ணபிள்ளை தோட்டத்தில் இயற்கையின்பத்தில் சுற்றித் திரிந்தேன். நல்ல வாய்ப்பை நழுவ விட்டேன்...... ஹஹ்ஹா! எப்போது காண்பேனோ எம்மானை!

ஐயர், காந்திக்கும் தமக்கும் நடந்த பேச்சைச் சொன்னார். அப்போதே ''வாழ்க நீ எம்மான் காந்தி'' பாரதியின் மனத்தில் உருவாகி விட்டது. காந்தி வழியே சாந்தி!

பாரதியாருக்கு ஒரே இடத்தில் இருக்கப் பிடிக்காது. மனம் போன போக்கில் பாடிக்கொண்டு இங்கும் அங்கும் வட்டமிட்டுக் கொண்டிருப்பார். புதுச்சேரியில் எத்தனை நாள் அடைந்து கிடப்பது? ''அச்சமில்லை...அச்சமில்லை நான் அமரன்...அமரன்'' என்று ஒருநாள் கிளம்பினார். வீரநடை போட்டுக் கடலூருக்கு வந்துவிட்டார். ஒற்றர் அவரைப்பிடித்துச் சிறையிட்டனர். ''காரணத்தைச் சொல். பிறகு கைது செய். நீயும் இந்திய மகன், நானும் இந்திய மகன். நமது நாட்டுக்கு விடுதலை வேண்டாமா? சொல்லடா.....''

போலீசுக்கு மிகவும் மகிழ்ச்சி. நெடுநாள் முயன்றது கைகூடியது; தந்தி பறந்தது. சென்னை சர்க்கார் 34 நாள் பாரதியாரைக் காவலில் வைத்தது. 'சுதேச

மித்திரன்' ஆசிரியர் அரங்கசாமி ஐயங்காரும், துரைசாமி ஐயரும் முயன்று, 'அரசியல் பேசுவதில்லை' என்ற உறுதிபெற்று, பாரதியாரை விடுவித்துச் சென்னைக்கு அழைத்துச் சென்றனர். பாரதியார் இரண்டு ஆண்டுகள் கடயம், எட்டையபுரம் முதலிய இடங்களில் சுற்றித் திரிந்து, சென்னைக்கு வந்து சுதேசமித்திரனில் அமர்ந்தார்.

1920-மார்ச்சு மாதம் மகாத்மா காந்தி சென்னைக்கு வந்தார். சென்னையில் காந்தி ஒரு மாணிக்க வாசகரைக் கண்டு பிடித்திருந்தார். அவர்தான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.

சென்னை வந்தபோது, காந்தி ராஜாஜி வீட்டிலேயே தங்கினார். ராஜாஜியுடன் சிந்தித்த வண்ணம் இருந்தார்.

அந்தக் காலத்தில் பாரதியார், பார்த்தசாரதி கோயில் மண்டபத்திலோ திலகர் கட்டத்திலோ கூட்டம் போட்டு சுதந்திர நாதம் செய்து வந்தார்.

காந்தி வந்திருக்கிறார் என்பதைப் பத்திரிகையில் பார்த்ததுமே, ''கடற்கரையில் கூட்டம் போடுவோம்; நாம் பேசுவோம். காந்தி தலைமை வகிப்பார்'' என்று தமது நண்பருக்குச் சொல்லிவிட்டு, நேராக ராஜாஜி வீட்டிற்கு வந்துவிட்டார். தொண்டர் அவரது வீராவேசப் புயலுக்கு வழிவிட வேண்டியிருந்தது. நேராக காந்தியிடம் போய், வெகுநாள் பழகிய நண்பன்போல அருகே மண்டியிட்டு அமர்ந்து ''மிஸ்டர் காந்தி....'' என்று தொடங்கினார். காந்தி, மூக்குக் கண்ணாடியில் ஊடுருவி ஆளைப் பார்த்தார்.

ராஜாஜி : இவரே தமிழ் நாட்டுக் கவி-பாரதி.

பாரதி : மிஸ்டர் காந்தி! இன்று கடற்கரையில் கூட்டம். தாங்கள் விஜயம் செய்து தலைமை தாங்கி, நடத்திக்கொடுக்க வேண்டும்.

காந்தி (மகாதேவ தேசாயிடம், நமது நிகழ்ச்சி நிரல் என்ன? மாலையில் வேறிடம் கூட்டம் உண்டா?

தேசாய் : பல நிகழ்ச்சிகள் உள்ளன. இன்று நேரமில்லையே!

காந்தி: கூட்டம் பற்றி மகிழ்ச்சி; இன்று வேறு அலுவல் உள்ளதே!

பாரதி : திருவுள்ளம் நடக்கட்டும் காந்திஜி-தங்கள் சத்திய இயக்கம் வாழ்க-வெற்றி கூறுகிறேன்.

பாரதியார் எழுந்தார். கிறிக்கிக் கட்டின் வால் அப்படியிப்படி அசைந்தது. காந்தியை ஒரு நிமிஷம் பார்த்தார். 'நமஸ்தே' என்றார். சிட்டாகப் பறந்து சென்றார். கோவில் மண்டபத்தில் அமர்ந்தார். அப்போது மாலை வழிபாட்டு மணி அடித்தது. சங்கு முழங்கியது. பாரதி வாணியும் சங்கு ஒலித்தது. அற்புதமான பாசுரம் வெளிவந்தது.

ஊதுமினோ சங்கம்
ஒலிமினோ பேரிகைகள்
வேதனையோ இனியில்லை
விடுதலையோ திண்ணமே.

சங்கு பேரிகைக்கு மேல் ஸ்தாயி ஷட்ஜமத்தில் வீறிட்டது பாரதி குரல். கூட்டம் கூடிவிட்டது. ''பெருமக்களே; காந்தி வந்துவிட்டார். கண்டோம்; களிகொண்டோம்; இனிக் கவலையில்லை; மகாத்மா காந்தி வாழ்க!'

'எல்லோரும் வாழ்க' என்று மூன்றுதரம் வாழ்த்திய பின் புறப்பட்டது காந்தி பஞ்சகம், தூய பாசுரம்.

வாழ்கநீ எம்மான் காந்தி
வையத்து நாட்டில் எல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி,
விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க வாழ்க!

ஹே, மகாத்மா! நீ புவிக்குள்ளே முதன்மை பெற்றாய். இந்தியா உலகத் தலைமை வகிக்க வழி காட்டினாய். அந்நியருக்கு அடிமை என்னும் வெய்ய பிணி வருத்தும் நாடு உய்யச் செய்தாய். நாகபாசத்தை மாற்ற சத்தியாக் கிரக மூலிகை கொணர்ந்தாய். கொலைப்போர் கொதிக்கும் அரசியலில் அறவழி புகுத்தினாய். மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதுதல், உயிர்க் கூட்டத்தைக் கடவுள் வடிவமென மதித்தல், ஆத்ம பலத்தால் பகையை வெல்லுதல் ஆகிய வழியினைக் காட்டினை! ஒத்துழையாமை என்ற சஞ்சீவியைத் தந்தாய். அதன் பயன் நெருங்கி வருகிறது.

நெருங்கிய பயன்சேர் ஒத்துழை
யாமை
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில்
மறந்து
வையகம் வாழ்க நல் லறத்தே

காந்தி சென்னையை விட்டு, பம்பாய் சேர்ந்ததும் அவருக்கு எல்லைச் சிறை வந்தது. ஜாலியன் வாலா படுகொலை நடந்தது. நாடு, வீறுகொண்டெழுந்தது. விடுதலைக்கு வேகமான வழி துவங்கியது. காந்தியின் உள்ளத்தைக் கவி, தெள்ளத் தெளிய விளக்கினார்.

[நன்றி: ஆனந்த விகடன்]


## கேட்டதும் கொடுத்தவர்!

பாரதியாரை வ. உ. சிதம்பரனார் சந்தித்து உரையாடுவது வழக்கம். அப்போது பாரதியார் தமது கவிதைகளை வ. உ. சி. அவர்களுக்குச் சொல்லுவார். இதாலி நாட்டைச் சேர்ந்த தேச ஊழிய இளைஞர் சங்கத்தின் உறுப்பினர்கள் செய்து வந்த ஆங்கிலமொழியில் வெளியிடப்பட்டிருந்த சூளுரைப் பாடலை வ. உ. சிதம்பரனாரிடம் படித்துக் காட்டினார் பாரதியார். அதனைக் கேட்ட வ. உ. சி. சொக்கிப் போனார். அவர், அந்தப் பாடலைத் தமிழ்ப் பாட்டாகத் தருமாறு பாரதியாரிடம் வேண்டினார். உடனே, அதைத் தமிழ்க் கவிதையாக மொழி பெயர்த்தார். அதுதான் 'மாஜினியின் சபதம்' என்ற தலைப்பில் 'பேரருட் கடவுள் திரு வடி யாணை' எனத் தொடங்கும் பாடல் ஆகும்.

## மழைமீது மோகம்!

பாரதியார் செயல்வீரர். மழையில் நனைந்து குளிப்பது நல்லது என்று சொல்லுவார்; சொல்லியது போல் செய்யவும் செய்வார்.

ஒருநாள் கடற்கரைக்கு பாரதி சென்றிருந்தபோது நல்ல மழை பெய்துவிட்டது. மழையில் நனைந்தபடியே இல்லம் திரும்பிக் கொண்டிருந்தார் அப்போது அவரது நண்பர்கள் இருவர், மழைக்குப் பயந்து ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருந்தனர். அதைப் பார்த்துவிட்ட பாரதியார், ''என்னடா ஒதுங்கிப் பதுங்கி நிற்கிறீர்கள்? தூய-தெள்ளிய நீரை ஆண்டவன் கொட்டுகிறான். அதில் செல்லவா அச்சம்? வாருங்கள் போகலாம்'' என்று சொல்லியவாறு நண்பனின் கரங்களைப் பற்றி இழுத்துச் சென்றார். பாரதியாரும் நண்பர்களும் சொட்டச் சொட்ட மழையில் நனைந்து சென்றார்கள்.



பாரதியார் புதுவையில் வசித்த முதல்வீடு



சென்னை திருவல்லிக்கேணியில் பாரதியார் வசித்த வீடு




மகாகவியின் மனதைக் கவர்ந்த மடு.

பாரதியாரும், குவளைக் கண்ணனும் அன்றாடம் காலையில் குளித்த தியாகராஜப் பிள்ளை மடு. இம்மடுவிற்குச் செல்லும் வழியில் பாடப்பட்டதே ''பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி'' என்னும் பாடல்.



குயில்பாட்டு உதயமான தோப்பு.



பாரதியார் குடும்பம்
உட்கார்ந்திருப்பவர்கள் : புதல்வி சகுந்தலா ('பாப்பா'), மனைவி செல்லம்மாள்.
நிற்பவர்கள் : புதல்வி தங்கம்மா, நண்பர் ராமு, நண்பர் விஜயராகவன், பாரதியார்.

பாரதியாரின் சீடர் : வ.ரா.




பாரதியாரின் சீடர்: பாரதிதாசன்.




பாரதியாரால் பூணூல் அணிவிக்கப் பெற்ற அரிசனச் சீடர் கனகலிங்கம்.






பாரதியாருக்கு
உதவியளித்த
செல்வந்தர்
ஆறுமுகம் செட்டியார்.



கலவை சங்கர செட்டியார்



ஏழ்மையிலும் உதவிய சுந்தரேச அய்யர்

தமக்கு அதிக வருவாய் இல்லாத போதும், தம் மனைவியின் நகைகளை அடகு வைத்துக்கூடப் பாரதியாருக்குப் பணம் உதவியவர்.



பாரதியாரிடமும் அவரது குடும்பத்தாரிடமும் மிகுந்த பாசம் கொண்டிருந்த பணிப்பெண் அம்மாக்கண்ணு.



பிரம்ம ராய அய்யர் என்று பாரதியாரால் அழைக்கப்பட்ட பேராசிரியர் சுப்பிரமணிய அய்யர்.

# வரவே இல்லை!

—கி. வா. ஜகந்நாதன்.

"நான் ஒரு ஸ்ரீவைஷ்ணவன் ; வைதிக ஆசாரங்களில் தவறாத குடும்பத்திலே பிறந்தவன். ஜாதியென்றும் மதமென்றும் பிரிவு செய்யும் கொடுமையிலே கொக்கரிக்கும் சமூகக் காற்றைச் சுவாசித்தவன். பாரதியாருக்கு ஜாதியில்லை. சமயமில்லை. வரம்பில்லை; வழியில்லை. அவர் வைத்தது சட்டம்; போனது வழி. குடும்பத்திலே அவர் ராஜா. அவர் உருட்டலும், மிரட்டலும் குடும்பத்தைக் கதிகலங்கச் செய்யும். அடுத்த நிமிஷத்தில் நாய்க் குட்டிபோல் பணிந்துவிடுவார். அவரோடு என் வாழ்க்கை இணைந்து நின்றது எனக்கே ஆச்சரியத்தை உண்டாக்குகிறது".

இவ்வாறு அவர் சொன்னார். அவர் வேறு யாருமல்ல; குவளைக் கிருஷ்ணமாச்சாரியார் தாம்; "**குவளைக் கண்ணன்**" என்ற பெயரால் பாரதியார் தமிழ்ப் பாட்டிலே பதித்துவைத்த பெரியார் அவர்.

பெரியவரென்று சொல்லும்போது அவருடைய உருவப் பெருமை, உள்ளப் பெருமை எல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றன. வாழ்க்கையின் சாரமற்று யமனோடு போராடிக் கொண்டிருந்த கடைசிக் காலத்தில் அவர் பேசிய பேச்சு, பாரதியாரைப் பற்றியதுதான்.

"எனக்குத் தெரிந்தவரை சொல்லிவிடுகிறேன். நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும். தமிழ்நாட்டில் பாரதி விழா எல்லாரும் கொண்டாடுகிறார்கள். ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். பாரதியாரோடு பழகிய நான் அவர் வாழ்க்கையோடு இணைந்து வாழ்ந்தவன். நல்ல வஸ்து நெடுநாள் உலகத்தில் தங்குவதில்லை. அவர் போய்விட்டார். எனக்கு ஏதாவது பொருளுதவி செய்தால், பாரதியார் விழாவில் ஒரு சிறந்த கடமையை நிறைவேற்றினதாக இருக்கும். இதை நாலு பேரிடம் சொல்லிப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்ய வேண்டும்" என்று அவர் சொன்னார். அந்த விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை. அதற்குள் அவர் பாரதியாரைத் தேடிக் கொண்டு போய்விட்டார்.

பாரதியாரைப் பற்றி யார் விசாரித்தாலும் அன்போடு அவர் பழைய ஞாபகங்களைச் சொல்லுவார்; சொல்லும்போது இன்னும் பாரதியார் அருகில் இருப்பதாகப் பாவித்துக் கொள்வார்போல் இருக்கிறது. இல்லாவிட்டால் அவருக்கு அந்தச் சாமாசாரங்களை விவரிக்கும் போதெல்லாம் அவ்வளவு உத்ஸாகம் இருக்க நியாயமே இல்லை.

அவர் தொண்டையிலே ஒருவிதமான கரகரப்பு. தொண்டைக்குள்ளே ஏதோ அடைத்துக்கொண்டது போல இருக்கும். அதனோடே அவர் பாரதியார் பாடல்களைப் பாடுவார். அவர் பாட்டிலே ராகம் இராது; இனிமை இராது; பாவம் இராது. ஆனால் ஒருவகையான ஜீவன் மாத்திரம் இருக்கும். பாரதியார் பாடிப் பாடிக் கேட்டு அதிலே ஊறி ஊறிப் பழகி, அன்போடு தாமும் பாடிப் பாடி இன்பமடைந்தவர், அவர். காலம் பாரதியாரையும் அவர் பழக்கத்தையும் மறைத்துவிட்டது. 'குவளைக் கண்ண'னுக்கும் வயசாகி விட்டது. அடிக்கடி பாடச் சந்தர்ப்பமும் இல்லை. ஆயினும் அந்தப் பழைய அன்பு, அந்தப் பழைய இன்பம், பாரதியாரது பாடலைச் சொல்லும் போது அவருக்கு இருந்தனவென்பதை அவரிடம் பாடல்களைக் கேட்ட யாவரும் எளிதில் தெரிந்து கொண்டிருக்கலாம்.

புதுச்சேரியிலே பாரதியாரை ஊன்றவைத்ததற்கு மூலமாக இருந்தவர் குவளைக் கிருஷ்ணமாச்சாரியார். அவருக்கு எப்போதும் உற்ற தோழருமாக இருந்தார். கிருஷ்ணமாச்சாரியாருக்கு இளமை முதலே சாமியார்களைக் கண்டால் அதிகப் பிரியமாம். பல சாமியார்கள் அவருக்குப் பழக்கம். அவர்களை ஒவ்வொருவராகப் பாரதியாருக்கும் பழக்கம் செய்து வைத்தாராம். கோவிந்தசாமி, குள்ளச்சாமி, யாழ்ப்பாணத்துச்சாமி—இந்தச் சாமிகளெல்லாம் குவளைக் கண்ணனால் கிடைத்தவர்கள்.

"கிருஷ்ணா" என்று அன்புடன் ஒருமையிலே கூப்பிடுவாராம் பாரதியார்.

* * * *

கிருஷ்ணமாச்சாரியார் ஆங்கிலம், பிரெஞ்சு இரண்டிலும் அறிவு வாய்ந்தவர். 1922-ஆம் வருஷம் 'ராலி' கம்பெனியிலிருந்து உத்தியோகம் தருவதாகக் கடிதம் வந்ததாம். அதைக் கிருஷ்ணமாச்சாரியார் பாரதியாரிடம் கொண்டு போய்க் காட்டினார். அந்த மனுஷ்யர் சிறிதேனும் தயா தாட்சண்யமின்றி அதைக் கிழித்துப் போட்டு விட்டாராம். திருவண்ணாமலையில் அந்தக் கம்பெனியார் சில வேலைகளை நடத்தி வந்தபடியால் அங்கே வரும்படி கிருஷ்ணமாச்சாரியாருக்கு உத்தரவு வந்திருந்தது.

பாரதியார் உத்தரவைக் கிழித்துப்போட்டவுடன் கிருஷ்ணமாச்சாரியார், "என்ன இப்படிச் செய்துவிட்டீர்களே?" என்றார்.

"கிருஷ்ணா, நீ திருவண்ணாமலைக்குப் போய்விட்டால், எனக்கு இங்கே யார் துணை?" என்று பாரதியார் கேட்டார்.


"வாஸ்தவம். நமக்கு இவர் துணை ; இவருக்கு நாம் துணை" என்ற திருப்தியோடு அவர் இருந்துவிட்டார்.

# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்!
# நியாயமான விலைகள்!




கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,
அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்
படுக்கை விரிப்புகள்,
மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள், உங்களுக்கு சொகுசு அளிப்பவை!




கோ-ஆப்டெக்ஸ்
லுங்கிகள்,
வசதியானவை
நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

கோ-ஆப்டெக்ஸ்
துவாலைகள்,
தூய்மையான
துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

''பாரதியார் என்னை முதலியார்கள் வீட்டிலெல்லாம் சாப்பிடச்சொல்வார். முதலில் நான் மறுத்தேன். எங்கள் வீட்டுக்குத் தெரிந்தால் தலைபோய்விடுமென்று சொன்னேன். நாளாக நாளாகப் பாரதியாருடைய பழக்கம், சிறிது நேரம் அவரைப் பிரிந்திருப்பதுகூடப் பெரிய துன்பமென்று தோற்றச் செய்விட்டது. அதனால் சில ராத்திரிகளில் மாதா கோவில் வீதியிலுள்ள லோகநாத முதலியார் வீட்டில் அவரோடு சாப்பிட்டிருக்கிறேன்.''

''உங்கள் வீட்டிற்கு இந்த விஷயம் தெரியாமலே இருந்ததா?'' என்று நான் கேட்டேன்.

''குறிப்பாகத் தெரியும். தெரிந்து என்னை என்ன செய்ய முடியும்? என்னை ஒரு 'தத்தாரி' என்று நினைத்துவிட்டார்கள். பாரதியாரையே அப்படி நினைத்தவர்கள் எவ்வளவு பேர்? அவருடைய தோழனுக்கு மாத்திரம் அந்தக் கௌரவம் வருவது கூடாதா?''

குவளைக் கிருஷ்ணமாச்சாரியாரைக் கடைசி முறையாகக் கண்டபோது அவர் மிகவும் மெலிவாக இருந்தார். ''நான் இன்னும் இரண்டு நாளில் ஆஸ்பத்திரி போகப் போகிறேன். பாரதியாரோடு போய்ச் சேருங் காலம் வந்துவிட்டதென்று தோன்றுகிறது. ஏதாவது பத்திரிகையில் வெளிவந்தால் ஆஸ்பத்திரிக்கு அனுப்புங்கள்'' என்று மேல்மூச்சு வாங்கிக்கொண்டு அவர் சொன்னார். எனக்கும் உடனிருந்த நண்பருக்கும் வயிற்றைஎன்னவோ செய்தது.

'' 'யோக சித்தி' பார்த்திருக்கிறீர்களா?''

''படித்திருக்கிறேன்''.

''ஒரு விஷயம் சொல்லுகிறேன்; கேளுங்கள்.''

''ஐயோ! உங்களுக்கு மேல்மூச்சு வாங்குகிறது. உங்கள் உடம்பு சௌக்கியமாகி வந்த பிறகு சாவகாசமாகக் கேட்டுக் கொள்ளுகிறேனே.''

''அவகாசம் எங்கே கிடைக்கப் போகிறது? இப்பொழுதே மெல்லச் சொல்கிறேன்'' என்று அவர் வற்புறுத்தினார்.

எங்களுக்குக் கேட்பதில் ஆசைதான்! ஆனால் அவர் இருந்த நிலையில் அவரைப் பேச அனுமதிப்பது பெரும்பாவமாகத் தோற்றியது. அவரோ சொல்லித்தான் தீருவாரென்று தெரிந்தது. பாரதியார் பேச்சை மூச்சிருக்கு மட்டும் பேச வேண்டும் என்று சங்கற்பம் செய்து கொண்டவரைப் போலக் காணப்பட்டார்.

''புதுச்சேரியிலே வீராசாமி பிள்ளை தோப்பு என்று ஒரு பெரிய தோப்பு இருக்கிறது; நாலு ஐந்து ஏக்கரா பூமி விஸ்தீரணமுள்ளது. அங்கே ஒரு குளமும் பங்களாவும் உண்டு. பாரதியார் அடிக்கடி அந்தஇடத்திற்குப்போய் உல்லாஸமாக இருந்து வருவார். ஒருநாள் சில நண்பர்களுடன் சேர்ந்து அங்கே காலையில் போனார். நானும் போயிருந்தேன். அந்தக் குளத்திலே ஸ்நானம் செய்தோம். சாப்பாட்டையும் முதலியார் வீட்டிலிருந்து அங்கேவருவித்து விட்டார். எங்கள் எல்லோருக்கும் சேர்த்து வருவித்தார்.



குவளைக் கண்ணன்

முன்பின் பழக்கமில்லாத புதுவையில் நெருக்கடியான நிலையில் முதன்முதலாக பாரதியாரின் உதவிக்கு வந்தவரும், பிற்காலத்தில் திருவல்லிக்கேணியில் யானையின் காலடியில் கிடந்த பாரதியாரைக் காப்பாற்றியவருமான குவளையூர் கிருஷ்ணமாச்சாரியார். பாரதியார் பாடல்களில் மிகவும் பாராட்டப் பெற்றவர்.

''நான் முதலியார் வீட்டில் ராத்திரி வேளையில் சாப்பிடுவது உண்டு. ஆனால் அப்போது அவ்வளவு பேருக்கு நடுவில் அந்த உணவைச் சாப்பிடுவதற்குச் சிறிது லஜ்ஜையாக இருந்தது; 'கிருஷ்ணா, நீ சாப்பிடத்தான் வேண்டும்' என்றார் பாரதியார்; 'வேளாளன் கொடுக்கிற அரிசி உதவும்; சோறு உதவாதா?' என்று கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார். எனக்கு அவரோடு வாய் கொடுக்கத் தைரியம் இல்லை; பேசாமல் நானும் சாப்பிட்டேன்.''

நடு நடுவே அவர் பெருமூச்சு வாங்கிக் கொண்டே சொன்னார். அவர் சாப்பிட்ட கதையை முடித்தவுடன், ''போதும்; பிறகு பேசிக்கொள்ளலாம்; சிரமமாக இருக்குமே'' என்றேன்.

''இந்த விஷயம் அவ்வளவு முக்கியம் அல்ல; நான் சொல்ல வந்த சமாசாரமே வேறு'' என்றார் அவர்.

''கொஞ்சம் சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்களேன்''.

''அதற்காகத்தான் இதைக் கேட்கச் சொல்கிறேன். பாரதியார் அன்றைக்கு யோக சித்தியை பாடிக் காட்டினார். ஆஹா! எத்தனை உத்ஸாகம்!''

எங்களைப் பார்த்துப் பேசிக்கொண்டு இருந்த குவளைக் கிருஷ்ணமாச்சாரியார்

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
# பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால் தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன: —

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18 | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும் உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1167

தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். ஒரு நிமிஷ நேரம் அப்படி இருந்துவிட்டு மறுபடியும் எங்களை நோக்கும்போது கண்ணைத் துடைத்துக் கொண்டார். அவர் உணர்ச்சி வசப்பட்டபோது இப்படிச் செய்வதைப் பல முறை பார்த்திருக்கிறேன்.

துக்கம் தொண்டையை அடைத்தது; ஒரு மிடறு எச்சிலை விழுங்கிக் கொண்டார்.

விண்ணு மண்ணுந்தனி ஆளும்—எங்கள்
வீரை சக்திநின தருளே—என்றன்
கண்ணுங் கருத்துமெனக் கொண்டு—அன்பு
கசிந்து கசிந்துகசிந் துருகி

என்று பாட ஆரம்பித்துவிட்டார்.

''என்ன இது? பாட அல்லவா ஆரம்பித்து விட்டீர்கள்? உங்களுக்குச் சக்தி இல்லையே! வேண்டாம். நிறுத்துங்கள்.''

**''பாரதியார் பாட்டைச் சொல்லும்போது உயிர் போனால் போகட்டுமே; அதைக் காட்டிலுமா வேறு ஆனந்தம் இருக்கப்போகிறது?''**

அந்த வார்த்தைகளிலேதான் எத்தனை ஆர்வம்! பாரதிப் பித்துக்குளித் தனத்துக்குத் தான் எத்தனை வன்மை?

அவர் பதினைந்து நிமிஷம் யோகசித்தியிலிருந்து பல பாடல்களைச் சொல்லித்தான் நிறுத்தினார். அவர் எங்களுக்காகவா சொன்னார்? இல்லை, இல்லை, தமக்காகவே, தமது இன்பத்துக்காகவே, அந்தப் பழையகாட்சிகளை உள்ளத்திலே கண்டு அனுபவிப்பதற்காகவே அவர் பாடினார்.

''நான் ஏழை, அறிவில்லாதவன். அவர் எனக்கும் தமது செய்யுட்களிலே ஒரு ஸ்தானம் கொடுத்திருக்கிறார். 'கிருஷ்ணு, பொருட் செல்வம் அழிந்து விடுமடா; கவிச் செல்வம் தருகிறேன் உனக்கு' என்று சொல்லி யிருக்கிறார். இந்த வார்த்தைகளைக் குவளைகிருஷ்ண மாச்சாரியாரோடு பழகிய யாவரும், ஒரு முறையல்ல, பல முறை கேட்டிருப்பார்கள்; இந்த வார்த்தைகளை அவர் சொல்லும்போது அவருக்கு இருந்த சந்தோஷத்துக்கு ஈடும் உண்டோ?

''சரி, போய்வாருங்கள்; உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லி அவரை ரிக்ஷாவில் ஏற்றினேன்.

''இந்தச் சரீரமே அநித்தியமென்றால் அதை ஒட்டிய அவஸ்தைகள் நித்தியம் ஆகுமோ? என்று பாரதியார் அடிக்கடி சொல்வார். நான் போய் வருகிறேன்.''

அவர் போவார்; வரமாட்டாரென்று எங்களுக்குப் பட்டது; அவர் உடம்பு, மலை போல இருந்த சரீரம், கரைந்து தளர்ந்து போனதிலிருந்து அப்படி நினைக்க வேண்டியிருந்தது. நாங்கள் நினைத்தபடியேதான் நடந்தது; அவர் ஆஸ்பத்திரிக்குப் போனார்; பிறகு வரவே இல்லை. பாரதியார் வந்தால் வருவார்.

**(கலைமகள் காரியாலயம் வெளியிட்டுள்ள 'ஒரு சாண் வயிறு' என்னும் நூலிலிருந்து...)**

## பாரதியின் வாழ்க்கையை மாற்றிய நிகழ்ச்சி!

**1905**-ம் வருஷம் காசியில் காங்கிரஸ் மகாசபை கூடிற்று. தெரிந்த பழைய ஊரான காசியை மீண்டும் பார்க்கலாம் என்றுதான் பாரதியார் போனாரோ என்னவோ, தெரியாது.

காசியிலிருந்து திரும்பும்போது கல்கத்தா அருகிலுள்ள டம்டம் என்ற இடத்துக்குச் சென்று, அங்கே ''விவேகானந்தரின் தர்மபுத்திரி'' நிவேதித்தா தேவியை தரிசித்தார். பாரதியின் வாழ்க்கையையே அடியோடு மாற்றிவிட்டது இந்தச் சந்திப்பு!

நிவேதித்தா தேவி ஆங்கில மாது. பூர்வத்தில் மார்கரட் இ. நோபிள் என்ற பெயர்கொண்ட அவர், ஸ்வாமி விவேகானந்தரின் வீர முழக்கம் கேட்டு, பழம் பெரும் புனித பூமியான பாரத நாட்டுக்குத் தொண்டு புரியவென இங்கே வந்த இளம் மாது. விவேகானந்தரின் ஆசி பெற்று சந்நியாஸ மார்க்கம் ஏற்று, ராமகிருஷ்ண மிஷனின் முதல் சந்நியாஸினியாகத் தொண்டு புரிந்தார், அவர். நிவேதித்தா தேவி பேச்சிலும் செயலிலும் அக்னி ஸ்வரூபமானவர். தேச பக்தியே தெய்வ பக்தியாய்க் கொண்டவர் அவர். முப்பது கோடி மக்களும் தெய்வங்களென வணங்கிய அவர், அயர்வறியாத் தொண்டர்.

இந்தப் புனிதவதியைப் பாரதியார் தரிசித்த போது, நிவேதித்தா தேவி, ''மகனே உன் மனத்தில் பிரிவுணர்ச்சியை நீக்கு. ஜாதி, மதம், குலம், கோத்திரம் என்ற அநாகரிகமான வித்தியாசங்களை விடு. அன்பை மட்டும் அகத்தில் கொள். பிற்காலத்தில் நீ ஒரு தீரனாக, சரித்திரப் பிரசித்தி பெற்ற தேவனாக வருவாய்'' என்றுரைத்தாராம்.

*(—சித்திரபாரதி என்னும் நூலிலிருந்து)*



காதி கிராப்ட்
ஏராளமான சத்து
என்னிடம் உண்டு
தாராளமாய்
என்னைப் பயன்
படுத்துவீர் – ''பனை''
இனிமைக்குப் பனஞ்சீனி,
பனை வெல்லம், பனங்கற்
கண்டு, சாக்லெட்கள்,
ஜாம், பழரசங்கள்.
குளிர்ச்சிக்குப் பதநீர்,
பாம்ஓ குளிர்பானங்கள்
எழிலுக்குப் பனை ஓலைப்
பொருட்கள்.
பதநீர்
JAM
துப்புரவிற்குப் பனம்
தும்பு பிரஷ்கள். தரமான
மலிவான, இவை
வாங்கிடத் தமிழக
மெங்கும் 180 காதி
கிராப்ட்.
காதி கிராப்ட்
தமிழ்நாடு கதர்,
கிராமத் தொழில்வாரியம்,
'குறளகம்',
எஸ்ப்ளனேடு,
சென்னை-600 001
KK/380 TAM

# அமரகவி பாரதியார்

திருமதி சகுந்தலா பாரதி

[பாரதியின் மகளார் அண்மையில் காலமாகிய திருமதி சகுந்தலா பாரதி அவர்கள் பாரதியாரின் கவிதைகள் குறித்தும், அவரது கவிதை பிறந்த கதை குறித்தும் இரண்டாண்டுகளுக்கு முன்னர் அளித்த பேட்டிக் கட்டுரை]



சென்னை தியாகராய நகர் கிரிபித் சாலையிலுள்ள 5-ஆம் எண்ணுள்ள இல்லம்.

'பாரதி' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட அந்த இல்லத்தினுள் நுழைகிறோம். முகம் மலர நம்மை வரவேற்பவர், அமரகவி பாரதியாரின் திருமகள் திருமதி சகுந்தலா பாரதி அவர்கள்.

வீட்டு முகப்பில் பாட்டுக்கொரு புலவன் பாரதியின் திருவுருவப் படமொன்று பெரிய அளவில் கம்பீரமாய்க் காட்சியளிக்கிறது. அமைதியான அந்த வீட்டைச் சுற்றிலும் உள்ள அழகான தோட்டம் நம்மைக் கவர்கின்றது.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்' என்பார்கள். திருமதி சகுந்தலா பாரதிக்கும் கவிபாடும் ஆர்வமும் ஆற்றலும் சிறு வயது முதற் கொண்டே இருந்து வருகிறது. 'ரசிகா' என்ற புனை பெயரில் இவர் பல கவிதைகளை எழுதிப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 'கவிஞர் பெருமன்றம்' என்ற அமைப்பைத் தொடங்கியிருந்தார். அந்த மன்றத்துக்குப் பெரும் புலவர்களெல்லாம் வருவார்கள். அவர்களுக்கெல்லாம் இவரை அறிமுகம் செய்து வைத்து, 'சகுந்தலா நன்றாகக் கவிதை பாடுவாள்' என்று சொல்லி மகிழ்வாராம்.

திருமதி சகுந்தலா பாரதி தமது ஐந்தாவது வயது அனுபவத்தைக் கூறுகிறார்.

''எனக்குச் சுமார் ஐந்து அல்லது ஆறு வயதிருக்கும்போது, 'நாமும் அப்பாவைப் போல் பாட்டுக் கட்ட வேண்டும்' என்று ஆசை தோன்றியது. அப்போது சரியாக எழுதப் படிக்கக் கூடத் தெரியாது. என்றாலும் ஓயாமல் கவிதைகளின் நடுவே பழகுவதால் பாட்டுக் கட்டுவது அத்தனை சுலபமாகத் தோன்றியது. உடனே, ஒரு பாடலை எழுதினேன். அதை என் தாயிடம் பாடிக் காண்பித்தேன்.

'மாணிக்க மேடையில் மான்விளையாடையில்
—சகியே
நாமிருவரும் செல்வோமே!

குயில்கள் மயில்கள் எல்லாம் குடியிருக்கும்
சோலையில்
மகிழ்ந்து நாமிருவரும் மலர் கொய்யப்
போவோம்.

ஆண்களில்லாக் காட்டில் பெண்கள் அரசாட்சி
யில்—சகியே
நாமிருவரும் செல்வோமே!''

''நான் பாடிய இந்தப் பாடலைக் கேள்விப்பட்டதும் என் தந்தையார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவரது உற்ற நண்பர் பாரதிதாசன் போன்றோரிடம் எல்லாம் சொல்லிப் பெருமைப்பட்டார்.''

ஒரு நாள் காலை.

பாரதியார் சகுந்தலாவிடம் 'பாப்பா நீயும் நானும் சேர்ந்து ஒரு பாட்டு எழுது

வோம்!' என்றாராம். தன் அருமை மகள் சகுந்தலாவை அவர் செல்லமாகப் 'பாப்பா' என்றே அழைப்பாராம். சகுந்தலாவும் 'சரி' யென்று சொல்லவே இருவரும் பாட்டு எழுத மாடிக்குச் சென்றனர். பாட்டை எப்படி எழுதுவது?

முதலில் பாப்பா சொல்ல வேண்டியது. பிறகு அப்பா பாட்டு அமைக்க வேண்டியது. இப்படியே பாட்டு வளர்ந்தது. அந்தப் பாட்டுதான் 'காலைப் பொழுது' என்ற பாடலாய் மலர்ந்தது. "அது தவறுதலாகக் 'காதற் பாட்டுக்கள்' என்ற தலைப்புடன் வெளியிடப் பட்டிருக்கிறது'' என்கிறார் திருமதி சகுந்தலா.

இப்படிஎழுதியகையெழுத்துப்பிரதிகளில் பாரதியார் மறக்காமல், 'சகுந்தலா பாப்பாவும் சுப்ரமணிய பாரதியும் எழுதியது' என்று குறிப்பிடுவாரென்றால் அவர் தம் மகள் மீது வைத்துள்ள பேரன்பினை நன்கு அறியலாம்.

குழந்தைகள், பள்ளியில் எழுத்துக்களைக் கூட்டி வார்த்தை சேர்க்கும் விளையாட்டு விளையாடுவதை நாம் பார்த்திருக்கிறோம். அதைப் போல் பாரதியாரும், ஒரு நாள் தம் மகளையும், மற்ற மாணவர்களையும் அழைத்து 'பாட்டுச் சேர்க்கும்' விளையாட்டைக் கற்றுக் கொடுத்தாராம்.

ஒருவர் ஒரு பதம் சொல்ல, அதை பாரதியார் வரிசைக் கிரமமாகப் பொருள் தோன்றும்படி பாட்டிசைத்துத் தருவார். உதாரணமாக:

முதலாமவர் : சக்தியை
இரண்டாமவர் : கொண்டாடு
மூன்றுமவர் : தினந்தோறும்
பாரதியார் : சக்தியை நித்தம் கொண்டாடு.

முதலாமவர் : கவலையில்லாமல்
இரண்டாமவர் : சக்தியின்பாதங்களில்
மூன்றுமர் : முத்துமாலைகள்
நான்காமவர் : ரத்தின ஆரங்கள்
ஐந்தாமவர் : வைத்துப் பணிந்திடு.

இந்தப் பதங்களை வைத்துப் பாரதியார் பாடிய பாட்டு இதோ :

''சக்தியை நித்தம் கொண்டாடு
சஞ்சலம் நீக்கி—சக்தியை
முத்துமாலைகள் ரத்னஹாரங்கள்
சக்தி பதத்தில் அணிந்து பணிந்திடு —
சக்தியை'

குழந்தைகள் என்றால் பார்த்த பொருளைக் கேட்டு அடம் பிடிப்பர் : ஆனால் சிறுமி சகுந்தலாவோ எந்த விளையாட்டுச் சாமான்களையும் கேட்டுத் தொந்தரவு பண்ணியதில்லை. அவர் கேட்ட பொருளெல்லாம் நல்ல நல்ல கதைகள், பாட்டுக்கள்தாம்!

பாரதியார் புதுச்சேரியில் இருந்தபோது தன் அருமை மகளை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குப் போவது வழக்கம். அங்கே, அலைகடலின் ஓரத்திலே சகுந்தலா அப்பாவிடம் 'அப்பா! அப்பா! கிளிஞ்சல் கதை சொல்லேன். அதோ ஓடுகிறதே அந்த நண்டுக் கதை சொல்லேன்!' என்று வற்புறுத்துவாராம்,

அப்போது கிளிஞ்சலைப் பற்றியோ, நண்டைப்பற்றியோ ஒரு கதை வந்து விடும் அல்லது கவிதை பிறந்துவிடும் பாரதியாருக்கு.

பாரதியாரின் சொந்த ஊர் எட்டையபுரம் என்று நமக்குத் தெரியும்.

எட்டையபுரம் மன்னருக்கும், சிறுவன் சுப்பையாவுக்கும் (பாரதிக்கும்) நெருங்கிய தொடர்பு இருந்தது. தமிழார்வமுள்ள மன்னர், சிறுவன் பாரதியிடம் தம் சிந்தையைப் பறிகொடுத்தார் என்றே கூறவேண்டும். அவ்வளவு ஏன், அருட்கவி பாரதியின் பாடல்கள் முதன் முதலில் விரும்பப்பட்ட இடமே அந்த எட்டையபுரம் மன்னரின் அரண்மனை தானே?

பாரதியாரின் தாத்தா திரு. இராமசாமி சிவன் கிராம முன்சீப்பாக இருந்தவர். அவரிடம் தேவாரம், திருவாசகம் எல்லாம் சிறுவன் பாரதி கற்றுக் கொண்டான். இதனால் சின்னஞ் சிறிய வயதிலேயே பாரதிக்குத் தமிழார்வம் வளர்ந்தது.

இவர் தமிழார்வம் மேலும் வளர்வதற்கு தூண்டுகோலாய் இருந்தது, எட்டையபுரம் அரண்மனையின் புலவர் அவை.

## மிஸ்டர் C. சுப்பிரமணிய பாரதி!

**பாரதியார் முதலில் மிஸ்டர் C. சுப்பிரமணிய பாரதி என்று தம் பெயரை வெளியிட்டிருக்கிறார். பின்னால் காளிதாஸன், சக்திதாஸன் என்ற புனைபெயர்களில் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். தம் உண்மைப் பெயரிலேயே எழுதும்போது ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி என்று குறித்திருக்கிறார்.**

இளம் பாரதிக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும். பெரும் புலவர்களெல்லாம் அரண்மனையில் வந்து பல்வேறு விஷயங்களைக் குறித்து விவாதிப்பார்களாம். சில சமயங்களில் விவாதம் காரசாரமாகக் கூட முடிவதுண்டு. இந்தக் கூட்டங்களுக்கெல்லாம் தவறுமல் போவார் பாரதி.

ஒருசமயம் வழக்கம்போல் புலவர்கள் அவைக்கு வந்தனர். ஒரு புலவர் எழுந்து, 'அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து போல் யாராவது பாட முடியுமா?' என்று உரக்கக் கேட்டார். சிலர் 'முடியும்' என்றும், சிலர் 'முடியாது' என்றும் வாதிட்டனர். இதைக் கேட்டு அவையில் இருந்த பாரதியார் கேலியாகச் சிரித்தார். உடனே ஒரு புலவர் சினம் மிகுந்தவராய், 'பாட முடிந்தவர்கள் நேரே அவைக்கு வந்து பாடலாம்!' என்றாராம்.

மறுநாள் எட்டையபுரம் மன்னர், முந்தைய நாள் புலவர்கள் விவாதித்ததை அறிந்து எல்லாப் புலவர்களுக்கும் அழைப்பு விடுத்தார். அனைவரும் அவைக்கு வந்தனர். மன்னர் புலவர்களைப் பார்த்து, 'நம்ம சுப்பையா ஒரு பாடலை எழுதிக் கொண்டு வந்திருக்கிறான்.

நீங்கள் கேட்ட அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து போல் இந்தப் பாடல் அமைந்திருக்கிறது' என்று சொல்லி அந்தப் பாடலைப் புலவர்கள் மத்தியில் அரங்கேற்றினார். அது மட்டுமா? சிறுவன் சுப்பையாவின் கவி ஆற்றலை உணர்ந்து 'பாரதி' (சரசுவதி) என்ற பட்டத்தையும் அளித்துச் சிறப்பித்தார். அப்போது பாரதிக்கு வயது எத்தனை தெரியுமா? பதினொன்று!

பாரதி பாடிய அந்தக் காவடிச் சிந்து இதுதான்:

'பச்சைத் திருமயில் வீரன்
அலங் காரன் கௌமாரன்—ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன்—அடி
பணி சுப்பிர மணியர்க் கருள்
அணி மிக்குயிர் தமிழைத் தரு
பக்தர்க் கெளிய சிங் காரன்—எழில்
பண்ணு மணிசலத் தூரன்'

என்று கணீரென்று இனிமையாகப் பாடுகிறார் திருமதி சகுந்தலா பாரதி.

சிறுமி சகுந்தலாவுக்கு அப்போது ஐந்து வயது இருக்கும்.

பாரதியார் தம் வீட்டு மாடியில் தம் மகளை மடி மீது உட்கார வைத்துக் கொண்டு கதைகள் பல சொல்லிக் கொண்டிருந்தார். சகுந்தலாவின் தாய் மாடி மீது வந்த பிறகுதான், தாம் ஒரு பொருளை மறந்து வைத்து விட்டதை உணர்ந்தார். உடனே தந்தை மடி மீது உட்கார்ந்து கதை கேட்டுக் கொண்டு இருந்த சகுந்தலாவைப் பார்த்து, தாம் மறந்து வைத்து விட்ட அந்தப் பொருளை எடுத்து வரும்படிச் சொன்னாராம்.

சுவாரசியமாகக் கதை கேட்டுக் கொண்டிருந்த சிறுமி சகுந்தலாவுக்கு அம்மாவின் கட்டளை ஆத்திரத்தை உண்டாக்கியது. உடனே 'நான் எடுத்து வர மாட்டேன் போ!' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாராம்.

இதைக் கண்ட பாரதி உடனே 'தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!' என்றாராம்.

சிறுமி சகுந்தலாவின் மனத்திலோ, அப்பாவுக்கு உள்ள பெரும் புகழும் அம்மாவுக்கு இல்லையே! அம்மா என்ன வெறும் சமையல் தானே செய்து போடுகிறாள்? என்ன இருந்தாலும் அம்மா மட்டம்தான் . . ." என்ற தவறான எண்ணம் புகுந்து கொண்டிருந்தது!

அந்த எண்ணத்தைப் போக்க பாரதியார் பெரும்பாடுபட்டார். தாய் எத்தனை உயர்ந்தவள் என்பதைப் பிஞ்சு மனத்தில் பதியும் வண்ணம் உபநிடத்திலிருந்து குரங்கு, பூனைக் கதைகள் முதலானவற்றை இனிமையாக எடுத்துச் சொன்னார் பாரதி. தாய்நாடு, தாய் மொழி என்றெல்லாம் தாயை முன்வைத்தே சொல்கிறோம். எனவே, தாய்க்கு உள்ள உயர்ந்த இடத்தை உணர்த்துகின்ற வகையில் பல நீதிக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, உடனே சிறுமி சகுந்தலா, 'அப்படியானால் நான் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும். அதைச் சொல்லுங்கள் அப்பா' என்று கேட்டாராம். அப்போது பிறந்தது தான் 'ஓடிவிளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!' என்று தொடங்கும் 'பாப்பாப் பாட்டு' என்னும் புகழ்வாய்ந்த பாடல்! 64 வரிகளுள்ள இந்தப் பாட்டில்,

'சோம்பல் மிகக் கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா'

என்ற வரிகள் வருவதைக் கவனிக்க வேண்டும்.

இன்னொரு இடத்தில்,

'பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்லலாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா!'

என்ற அடிகள் இவர் மனத்தில் ஆழப் பதிந்திருக்கின்றன.

ஐந்து வயதில் நடந்த சம்பவம் ஒன்று இன்று அறுபதுக்கு மேற்பட்ட வயதிலுங்கூடப் பசுமையாக நினைவு இருக்கிறது இவருக்கு. அந்தச் சம்பவத்தை மிக அழகாகக் கூறுகிறார் திருமதி சகுந்தலா பாரதி.

## நோய்க்கு இடங்கொடேல்!

நோயென்றால் பாரதி யாருக்குப் பயம் அதிகம். நோய்க் கிருமிகள் அணுகக் கூடாதென்று நிரம்பவும் எச்சரிக்கை எடுத்துக் கொள்ளுவார். வெளியிலிருந்து வீட்டிற்குள் நுழையுமுன்னே யாராயிருந்தாலும் காலை அலம்பிச் சுத்தம் செய்து கொண்டுதான் வரவேண்டுமென்று கடுமையான உத்தரவு செய்திருக்கிறார். ஹோட்டல்களிலிருந்து ஏதாவது வாங்கி உண்ணக் கூசுவாரம். "ஓயாமல் வியர்தி பயம் கொண்டு உளைகின்ற நெஞ்சமே! தூ! தூ! தூ! கோழை" என்று அவர் தம்மைப் பற்றிச் 'சித்தக் கடலில்' எழுதியிருக்கிறார்.



''எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது ஒரு சமயம் கடுஞ் சுர நோய் கண்டது. காய்ச்சலின் வேகத்தால் நாக்குழறிவிட்டது. என் தந்தையின் உண்மைச் சிநேகிதருள் ஒருவரும், என் வளர்ப்புத் தந்தையாக நான் கருதியருவமான திரு. பொன்னு. முருகேசம் பிள்ளை அவர்கள் என்னைப் பார்க்க வந்திருந்தார்.

'என் தந்தை ''பாப்பா! யார் வந்திருக்கிறார்கள் பார்!'' என்றார். முருகேசம் பிள்ளை என்று சொல்ல எண்ணிய எனக்கு சுரவேகத்தால் நாக்குழறிப் போயிற்று. ''முருகேழ பிள்ளை'' என்று சொன்னேனும். என் தந்தை சுவரில் மோதிக் கொண்டார், புலம்பினார்.

'பாப்பா! கடற்கரை மேடையிலிருந்து சிங்கம் கர்ஜிப்பது போலப் பிரசங்கம் செய்யப் போகிறாய் என்று எண்ணியிருந்தேனே! என்ன, குற்றம் செய்ததனால் குழந்தைக்கு இக் கதி நேர்ந்தது? தாய், தந்தையரின் செய்கைகள் மக்களைப் பாதிக்கின்றன. சரீர வாதனையைத் தான் அனுபவிப்பதைவிட்த் தன்னில் இனியார் தம் மக்கள் அனுபவிப்பதைப் பார்ப்பது பதின் மடங்கு கொடியது! நான் என்ன குற்றம் செய்தேன்? என்னிடமுள்ள கெட்ட பழக்கம் நான் புகையிலை போட்டுக் கொள்வது ஒன்று தான். அதையும் இன்றுடன் விட்டேன்'' என்று சபதங் கூறினார்.

'காய்ச்சல் டைஃபாயிட் சுரமாதலால் குணமாக மூன்று மாத காலமாயிற்று. கொஞ்சம் குணம் தெரிந்தவுடன் என் தந்தையார் என் தாய் செல்லம்மா பாரதிக்காக எழுதிய பாட்டுத்தான்—

பக்தியினாலே—இந்தப்

பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடீ' என்ற பாட்டு.

'இந்தப் புவிக்கே—இங்கோர் ஈசனுண்
டாயின்

அறிக்கையிட்டேனுன்றன்
கந்தமலர்த்தாள்—துணை காதல் மகவு
வளர்ந்திட வேண்டும் என் சிந்தை யறிந்தே
அருள் செய்திட வேண்டும்
என்றால் அருளெய்திடும்! (பக்தியினாலே)

எட்டையபுரத்தில் பாரதி படித்துக் கொண்டிருக்கும்போது இவரோடு படித்த காந்திமதி நாதபிள்ளை என்ற மாணவர் சற்று ஆணவமுள்ளவர். அவர் தாம் தமிழ் படித்திருக்கிறோம் என்ற கர்வத்தில் பாரதியிடம், 'பாரதி சின்னப்பயல்' என்ற சொற்களைக் கடைசி அடியின் முடிவாக வைத்து ஒரு வெண்பாவைப் பாட முடியுமா'? என்று கேட்டார். அருட்கவியான பாரதிக்கு இது என்ன பிரமாதம்? அவர் ஆணவத்தை அடக்கும் வகையில்,

'காரதுபோல் நெஞ்சிருண்ட காந்திமதி
நாதனைப்
பார்அதி சின்னப் பயல்!''

என்றாரே பார்க்கலாம்!

—பேட்டி: பி. வி. கிரி.

நன்றி: கல்கி.

# பாரதியாரும் விளக்கெண்ணெய்ச் செட்டியாரும்!

''வாரும் விளக்கெண்ணெய்ச் செட்டியாரே'' என்றார் பாரதியார். எவ்வளவு வரவேற்பு அளித்தாலும், செட்டியாரின் உடம்பு பட்ட பாட்டை நான் எவ்வாறு வர்ணிப்பது? செட்டியார் யார் தெரியுமா? பாரதியார் குடியிருந்த வீட்டுக்கு உடையவர். அவருக்கு வாடகைப் பணம் பாக்கி என்றாலும், கேட்பதற்கு நடுக்கம்! விளக்கெண்ணெய்ச் செட்டியார் என்பது பாரதியார் கொடுத்த செல்லப் பெயர்!

''செட்டியாரே! என்ன அவசரம்! நல்ல பதவிக்காக, ஜன்மம் ஜன்மமாய்ப் பிறக்கலாம் என்ற ஹிந்து பரம்பரையிலே பிறந்து வளர்ந்த உமக்கு, ஏன் வாடகைக்கு அவசரம்? இன்னும் பத்து வருஷத்துக்குள் சுயராஜ்யம் வரப்போகிறது. அந்த ராஜாங்க கஜானாவுக்கு ஒரு 'செக்' கொடுக்கிறேன், வாங்கிக்கொள்ளுமே!'' என்று சொல்லிவிட்டு, வெண்கலத்தை இடைவிடாமல் தட்டியது போலக் கலகலவென்று சிரித்தார். தரித்திரத்தை நிந்தனை செய்யும் நகைப்பு!

செட்டியார் என்ன செய்கிறார் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ''மகான்! உங்கள் உண்டியல் ஏன் செல்லாது? கூசாமல் கொடுங்கள். வாங்கிக் கொள்கிறேன்'' என்று செட்டியார் முணுமுணுத்தார். ''செட்டியாரே, உமக்கு நூறு வயது. போம். பணம் வந்தவுடன் ஒரு வினாடி கூடத் தாமதிக்காமல் அனுப்பி வைக்கிறேன்'' என்றார். செட்டியார் வணக்கத்துடன் மறைந்தார்.

—வ. ரா.

# நான் கண்ட பாரதியார்!

—திருமதி யதுகிரி அம்மாள்





ஒரு வெள்ளிக்கிழமை சாயங்கால வேளையில் சுவாமிநாத தீட்சதரின் பெண் மீனாவும், நானும் (யதுகிரி அம்மாள்) ஈசுவரன் தர்மராஜா கோயில் தெருவில் இருக்கும் பாரதியாரின் வீட்டிற்குப் போனோம். எப்பொழுதும்போல் செல்லம்மாள், (பாரதியாரின் மனைவி) கலகலப்பாக இருக்கவில்லை. மாதக் கடைசி.

நாங்கள் எல்லோரும் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தோம். மணி ஆறு ஆனதும் மீனா வீட்டிற்குப் போய்விட்டாள். பின்னர் பாரதியாரும் வெளியே போய்விட்டார். வீட்டில் இருந்தவர்கள் நானும் செல்லம்மாவுமே. இருவரும் சிறிது நேரம் பேசாமலே இருந்தோம். ஐந்து நிமிஷம் பொறுத்துப் பேச ஆரம்பித்தேன்.

நான்: செல்லம்மா, உடம்பு சரியாக இல்லையா? எப்படியோ இருக்கிறீரே?

செல்: உடம்புக்கு ஒன்றும் இல்லை. யதுகிரி, மனத்திலே புழு அரிப்பதைப் போல் அரிக்கிறது. யாரிடமாவது சொன்னால்தான் இம்சைதீரும்போல் இருக்கிறது. நீ குழந்தை. உன்னிடம் சொல்லி என்ன பிரயோசனம்?

நான்: பரவாயில்லை. என்னவென்று சொல்லுமே! நான் பாரதியாரைக் கேட்கிறேன். 'பெண்கள் விடுதலையை வாயால் கொண்டாடுகிறீரே; காரியத்தில் இப்படிப் பண்ணலாமா?'' என்று கேட்டுவிடுகிறேன்.

## குருவிக்கு அரிசியைப் போட்டார்!

செல்லம்மா சொன்னார்: ''ஐயோ, குழந்தை! உன் உள்ளம் ஒன்றும் அறியாதது. இப்போது மாதக் கடைசி. போன மாசப் பாக்கியைப் பால்காரனுக்கு இன்னும் கொடுக்கவில்லை. அவன் நேற்று வந்து கேட்டான். வருகிற மாசம் கொடுப்பதாகச் சொன்னேன். அவன் முடியாது என்றான். நான் ஏதோ சமாதானம் சொல்லி அனுப்பினேன்.

''இவர் பார், இன்றைக்குச் 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு அனுப்ப வேண்டிய கட்டுரையை அனுப்பவே இல்லை. அவன் எப்படிப் பணம் அனுப்புவான்? இன்று காலையிலே குளித்து, காப்பி குடித்து, வெற்றிலை பாக்கு எல்லாம் கிரமமாக ஆனபிறகு எவ்வளவோ சொல்லி மேஜை மேல் காகிதம், பேனா, இங்கி புட்டி எல்லாவற்றையும்கொண்டு போய் வைத்துவிட்டு, அரிசியைப் பொறுக்கி வைத்தேன். பிறகு மடி உடுத்திக்கொள்ளப்போனேன். இவருக்கு எழுத முடியவில்லை. முறத்தில் இருந்த அரிசியில் ஒரு பங்கை எடுத்து முற்றத்தில் இறைத்துவிட்டு அதைத் தின்ன வரும் குருவிகளைக் கண்டு பாடிக் கொண்டிருந்தார்.

''அரிசியைக் களைந்து உலையில் போடுவதற்காக வெளியில் வந்து பார்க்கிறேன்; அரிசியில் கால் பங்கு இல்லை. எனக்கு அழுகை வந்துவிட்டது. இதைப் பார்த்த அவர், 'வா செல்லம்மா, இந்தக் குருவிகளைப் பார்! எவ்வுளவு சந்தோஷமாக இருக்கின்றன! நாமும் அதைப் போல் 'ஏன் இருக்கக் கூடாது? நீயும் சதா தொந்தரவு செய்கிறாய்; நானும் எப்பொழுதும் எரிந்து விழுகிறேன். நமக்கு இந்தக் குருவிகள் ஒற்றுமை கற்றுக் கொடுக்கின்றன. நாம் அதைக் கவனியாமல் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறோம். நம்மைக் காட்டிலும் மூடர்கள் உண்டா?'' என்றார்.

''எனக்குப் பொறுக்கவில்லை. 'என் கோபத்தை ஏன் கிளப்புகிறீர்கள்? குழந்தைகள் அண்ணியம்மா (பொன்னு முருகேசம் பிள்ளையின் மனைவி) வீட்டிலிருந்து வருகிற வேளைக்குள் சமைத்து விடலாம் என்று அடுப்பை மூட்டினால் பொறுக்கின அரிசியைக் குருவிக்குப் போட்டு விட்டீர்களே! திரும்பப் பொறுக்கப் பத்து நிமிஷம் ஆகும். உங்களுக்குப் பணம் வர இன்னும் எவ்வளவு நாள் ஆகுமோ! நீங்களோ இன்னும் கட்டுரை எழுதியாகவில்லை. பால்காரன் மானத்தை வாங்குகிறான். வேலைக்காரி இரண்டு நாளாய் வரவே இல்லை. நீங்கள் இதை யோசிக்க வேண்டாமா? என்னைக் குருவியைப் போல் சந்தோஷமாக இரு என்கிறீர்களே. கடவுளுக்குக் கண்ணே இல்லை. இந்தக் குழந்தைகளைக் கொடுத்து வதைக்கிறார்'' என்று சொல்லிக் கொண்டே போய் ஒருவிதமாகச் சமையல் வேலையைச் செய்து முடித்தேன்.

''வெளியே வந்தால் இவர் சகுந்தலா பாப்பாவுக்கு 'விட்டு விடுதலையாகி' என்று துவங்கும் பாட்டைப் பாடிக் காட்டிக் கொண்டிருக்கிறார். குழந்தை சந்தோஷத்தால் குதிக்கிறாள்! இவர் பாட்டு ஆனந்தத்தால் மெய்ம்மறந்திருக்கிறார். குருவிகளோ அரிசியைக் கொத்தித் தின்ற வண்ணமாய் இருக்கின்றன. தங்கம்மா பேசாமல் உட்கார்ந்திருக்கிறாள்.

''இந்த வீட்டில் எல்லோரும் சந்தோஷமாக இருக்கும்பொழுது நம்மால் ஏன் நிம்மதி கெட வேணும்?'' என்று நானும் உட்கார்ந்துவிட்டேன்.

''ஆட்டம், பாட்டு எல்லாம் முடியப் பன்னிரண்டு மணி ஆயிற்று. சகுந்தலா, 'அப்பா பசிக்கிறது. வா,. சாப்பிடலாம்' என்றது. அவரும் எழுந்து வந்து பேசாமல் சாப்பிட உட்கார்ந்தார். என்னைப் பார்த்து, 'செல்லம்மா, இன்னும் கோபம் போகவில்லையா? இதோ பார், இந்த குருவிப் பாட்டையே அனுப்பப் போகிறேன். முதல் தேதி உன் கையில் பணம் வந்துவிடும். பயப்படாதே' என்றார்.

''அவர் நல்லவர். கள்ளம் கபடு இல்லை. கையில் இருந்தால் வஞ்சகம் இல்லை. ஆனால் அவர் சரியாகக் கட்டுரை அனுப்பாவிட்டால் பத்திரிகைக்காரன் சும்மா பணம் அனுப்புவானா? அதுதான் எனக்குப் பிடிக்கிறதில்லை.''

நான் ஒரு பதிலும் சொல்லவில்லை. என்னால் என்ன சொல்ல முடியும்? ஆனாலும் சமாதானமாக ''இன்றைக்குத் தபாலில் ஒன்று போயிருக்கிறதே! பாட்டானால் என்ன, கட்டுரையானால் என்ன?'' என்றேன்.

''நீயும் அவருக்குச் சரியான பெண்தான்! அவர் எதைச் செய்தாலும் சரி என்று சொல்வாய். உன்னிடம் சொல்லியதால் கொஞ்சம் இம்சை குறைந்தது. அதுவே போதும்'' என்றார் அந்த உத்தமி.

* * * *

## பாம்பாட்டிக்கு வேட்டியைக் கொடுத்தார்!

புதுச்சேரியில் 'சுதேசி'களெல்லாம் ஞாயிற்றுக்கிழமை சமுத்திர ஸ்நானத்துக்குப் போவது வழக்கம். காலை ஏழு மணிக்குப் போனால் பத்து மணிக்குத்திரும்புவோம். என் தகப்பனார், பாரதியார், ஐயர், திருமலாச்சாரியார் முதலியோரைத் தவிர நாகசாமி என்ற ஒருவரும் எங்களுடன் வருவார். நாகசாமி, முதலில், பாரதியை ஆசிரியராகக்கொண்டு என் தகப்பனார் நடத்திய 'இந்தியா' வாரப் பாத்திரிகையின் காரியாலயத்தில் இருந்தார். ஐயர் புதுவைக்கு வந்த பிறகு அவருடன் அவர் வீட்டில் இருந்தார்.

பெரியவர்களுடன் குழந்தைகளான நாங்கள் நாலைந்து பேருமாகப் புறப்படுவோம். எங்களுக்கு ஒரு பர்லாங்கு தூரத்தில் 'உடுப்பு இல்லாத போலீஸ்காரர்கள் ஐந்துபேர் வருவார்கள். இப்படி ஒரு நாள் நாங்கள்போய்க் கொண்டிருக்கையில் கௌர்ள



வீதியில் ஒரு பாம்பாட்டி நிலத்தில் ஒரு பாம்பை விட்டு வேடிக்கைக் காட்டிக்கொண்டிருந்தான். வெள்ளைக்காரன் ஒருவனது வீட்டு வேலைக்காரன் அவனுக்குக் காலணா போட்டுவிட்டுப் போகச் சொல்லிக் கொண்டிருந்தான். ''பாம்புக்குப் பால் வார்க்கக் காலணா ஆச்சு. எனக்கு ஒரு பிடி அரிசி போடு துரையே!'' என்று பாம்பாட்டி கத்தினான். இந்தச் சமயம் நாங்கள் அந்த இடத்தை நெருங்கினோம்.

எங்களைக் கண்டதும் பாம்பாட்டி மறுபடி குழலை ஊத ஆரம்பித்தான். பாம்பும் சந்தோஷமாக ஆடிற்று. நாங்கள் எல்லோரும் நிற்காமல் போவதைக் கண்ட பாம்பாட்டி, "ஐயா தர்மவான்களே! குளிர் தடுக்க முடியவில்லை. சாதம் கண்டு இரண்டு நாள் ஆயிற்று. கண் இருண்டு வருது. புண்ணியம் உண்டு!'' என்று கெஞ்சினான்.

எங்கள் தாய், ''சமுத்திரம் ராஜா, வெறுங்கையுடன் போய் அதில் குளிக்கக் கூடாது'' என்று எங்கள் ஒவ்வொருவர் கையிலும் ஒரு மஞ்சள் பொட்டணமும் காலணா காசும்கொடுத்திருந்தாள். என் அண்ணன் தன் காலணாவைப் பாம்பாட்டிக்குப் போட்டான். என் கையிலும் காசு இருப்பதைப் பார்த்த பாம்பாட்டி, ''அம்மா, அதையும் கொடேன். காலணா இட்லி வாங்கிச் சாப்பிடுகிறேன்'' என்றான். நான், ''இல்லை அதைச் சமுத்திரத்தில் போடும்படி எங்கள் அம்மா சொல்லியிருக்கிறாள்'' என்று சொல்லிவிட்டு முன்னால் நடந்தேன்.

எல்லாருக்கும் முன்னால் வந்து கொண்டிருந்த பாரதியாருக்கு என்ன தோன்றியதோ, மேல் வேஷ்டியை அரையில் உடுத்துக் கொண்டு அரை வேஷ்டியைப் பாம்பாட்டிக்குக் கொடுத்துவிட்டார்!

எல்லாரும் முன்போல் ஒன்றுகச் சேரும்பொருட்டு நாங்கள் ஒரு மூலையில் நின்றோம். பாரதியாருடைய கொள்கை எங்களைத் திகைக்கச் செய்தது. முதல்நாள் வாங்கிய புதிய வேஷ்டியைத் தெருவில் போகும் பிச்சைக்காரனுக்குக் கொடுப்பது அவ்வளவு சரியென்று எனக்குத் தோன்றவில்லை. அந்தப் பாம்பாட்டியோ அவரை மனமார, வாயார வாழ்த்திக்கொண்டு போனான். என் மேல் அவனுக்குக் கோபம்; காலணாவைக் காட்டிவிட்டுக் கொடுக்கவில்லை என்று.

* * * *

நான்: அது சரி. நீர் என்ன, புதிய வேஷ்டியைக் கொடுத்துவிட்டீரே! செல்லம்மா பார்த்தால் என்ன சொல்லுவார்? மேலே இருந்த கிழிசலைக் கொடுத்தால் போதாதா?

பாரதி: எனக்கு நாலுபேர் கொடுப்பார்கள். அவனுக்கு யார் கொடுக்கிறார்கள்? நானே யோசிக்கவில்லை; உனக்கென்ன யோசனை?

## எல்லாம் எனக்கு அவள்தான்!

பாரதி: காலையில் எழுந்த வேளை நன்றாக இல்லை. இரண்டு பேருடன் சண்டை!

நான்: வேறு யாருடன் சண்டை போட்டீர்?

பாரதி: வேறு யார்? பெண்டாட்டிதான்.

நான்: நீர் பாட்டில் பெண் விடுதலையைக் கொண்டாடுகிறேன் என்று பெண்டாட்டியோடு சண்டை போட்டால் என்ன பிரயோசனம்?

செல்: சொல்லு யதுகிரி. இன்று இவர் பண்ணியது நியாயமா கேள்?

பாரதி: நீ சொல்லியது சரி. ஆனால் சில வேளைகளில் சொல்லக் கூடாது.

நான்: என்ன விஷயம் சொல்லுமே!

செல்: இவர் தலையில் துணி போட்டுக் கொண்டு போனால், எனக்குப் போக வழி இல்லையா?

நான்: உம்மைப்போலத்தானே செல்லம்மாவும்? ஏன் போகமுடியாது? அங்கு விடுதலை இல்லையா?

பாரதி: நீ குழந்தை. உனக்குப் புரியாது. முரட்டு மாட்டை விட்டுத்தான் பிடிக்கவேணும். ஒரே அடியாக இழுத்தால் ஓடிப் போய் விடும். நான் ஒரு வேளை போனாலும் போவேன்; செல்லம்மாளால் போகமுடியாது. விடுதலை இருந்தாலும் பொறுப்புப் பெரியது.

நான்: நீர் புதிர் போட்டாற் போல் சொன்னால் எனக்கு எப்படித் தெரியும்? விவரமாகச் சொல்லுமே.

பாரதி: செல்லம்மா, நீயே சொல். உன் மனத்தின் பாரம் குறையும்.

செல்லம்மாள் நடந்ததைச் சொன்னார்.

நான்: குழந்தைகளைக் கண்டாடால் உமக்குத்தான் அபிமானம் செல்லம்மாவுக்கு இல்லையா?

பாரதி : இருவரும் ஒன்றே. ஆனால் அவள் போஷிப்பவள். நான் ஸம்பாதிப்பவன். இருவரிடையே அதிகாரக் கட்டளை அவசியமில்லை.

நான்: சரி செல்லம்மா. உமக்கு இஷ்டம் வந்தபோது சமையல் செய்யலாமே!

பாரதி : அப்படியல்ல. வேலை செய்ய வேண்டியதைக் கிரமமாகவும் வகையாகவும் செய்யவேண்டும். ஆனால் மனிதனும் வகையறிந்து போனால் நல்லது.

செல்: நான் வகை அறியாதவள்.

பாரதி: நீ கொடுத்த சூட்டின் மகிமை எவ்வளவு தூரம் சென்றது தெரியுமா? கதையை அச்சிடக் கொடுத்து விட்டு வந்தேன்.

செல்: கணவன்மேல் அவதூறு சொல்பவர்களைக் கண்டாலே எனக்கு மிகவும் கோபம் வரும். பிடிக்கவே பிடிக்காது. ஆனால் பொறுக்க முடியாமல் போனால் கதவுடனாவது சொல்லிக் கொள்ளலாம் போலாகிறது.

பாரதி: காலையில் தூண்டின தூண்டல் முடிந்து வேலையும் முடிந்தது. யதுகிரி, நீயும் வா, கடற்கரைக்குப் போகலாம்.

கடற்கரைக்கு எல்லாரும் புறப்பட்டோம். அப்பொழுது அவர் சொன்ன வார்த்தைகளைத் தமிழுலகம் முழுவதும் அறிய வேண்டும் என்பது என் ஆவல்.

பாரதியார், ''நீங்கள் வீட்டில் உடம்பை ஒடித்து வேலை செய்கிறீர்கள். உங்களை அலட்சியமாய் காண்பது பாவம். குழந்தைகளை வளர்க்கிறீர்கள். குழந்தைகளுக்குக் காலத்தில் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யச் சொல்லுகிறீர்கள். இது முன் காலமல்ல. பொறுப்புத் தெரியாமல் இருந்தால் பொறுப்பை வற்புறுத்திக் காட்ட வேண்டும். நிர்ப்பந்தம் செய்யக்கூடாது. ஆனால் செல்லம்மா சொல்லியது சரி. என் கவிதையின் பைத்தியம் என்னை இழுத்துச் சென்றது. அந்தச் சூட்டில் இரண்டு பேச்சு நடந்தது. நம் வீட்டில் தங்கக் கிளிகள் போல் குழந்தைகள். ஆனால் நாம் கொடுத்து வைக்கவில்லை. அவைகளுக்குத் தங்கத்தால் கவசம் பண்ணிப் போடலாம். புலவர் வறுமை புராணப் பிரசித்தம். தமிழுக்குச் செல்வாக்கு இல்லை. தமிழ்க் குழந்தை லக்ஷ்மியை நானாவிதமாகக் கொண்டாடினால் கிருபை வரும். வீட்டின் தலைவி எல்லாவற்றையும் திருத்திக் கொண்டு போனால் தலைவன் கவலையில்லாமல் நோயில்லாமல் இருக்கலாம். தலைவியின் பேச்சைத் தட்டாமலும் இருக்கலாம். தலைவிக்கு முக்கியமாக வேண்டியது பணம். பணம் இருந்துவிட்டால் என் செல்லம்மா உலகத்தையே ஆண்டு விடுவாள். அது இல்லாததால் என்னைக் கட்டுப்படுத்துகிறாள்; கேட்கிறாள்; சண்டை பிடிக்கிறாள். எனக்கு வருந்திச் சாதம் ஊட்டுகிறாள். இதை உலகம் அறிய வேண்டும். நம் கஷ்டம் விடிய வேணும். சென்று போன விஷயத்தை யோசிப்பவன் மூடன். தினமும் நம் துணியை வெளுத்து உலர்த்துவதைப் போல் நம்முடைய அழுக்குகளை, தொல்லைகளைத் தினம் கழுவிவிட வேணும். புதிதாகச் சூரியன் வருவதைப்போல் புதிய புதிய விஷயங்களைப் பார்த்து மகிழவேணும். என் செல்லம்மா முக்கியப் பிராணன்! என் செல்வம்! எல்லாம் எனக்கு அவள்தான். அவள் பாக்கிய லக்ஷ்மி!'' என்றார்.

**பாரதியார் சொல்லிய புத்திமதி!**

''யதுகிரி, நான் சில புத்திமதிகள், சொல்லுகிறேன், மறக்காதே! பெண்களுக்கு மிக முக்கியமானது கற்பு. அது உயிரைக் காட்டிலும் முக்கியமானது கற்பு. அதை உயிரைக் காட்டிலும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றுவது முதற் கடமை. அதற்காகக் கூண்டுக்கிளிபோல் அடைபட்டுக் கிடக்க வேண்டாம். உலகத்தில் கணவன் ஒருவன் தவிர பாக்கிப் புருஷர்களெல்லாம் அண்ணன், தம்பிமார்கள். எல்லாருக்கும் பதுங்கி அஞ்ச வேண்டியதில்லை. முக்கியமாகக் கூச்சம், வெட்கம் இரண்டும் அநாவசியமான சரக்குகள். நீ பேஷாக எல்லாருடனும் பேசலாம். கணவனிடம் முதல் முதல் வெட்கம். பழகப் பழக அதுவும் வேண்டியதில்லை. அச்சம், நாணம், பயிர்ப்பு என்று புத்தகப் பாடத்தை உருப்போட்டு நம் நாட்டுப் பெண்கள், புருஷர்கள் எல்லாரும் அடிமை வாழ்வில் முழுகி இருக்கிறார்கள். நீங்கள் தைரியமாக இருந்தால் தான் உங்கள் வயிற்றில் பிறக்கிற குழந்தைகள் தைரியமாக இருக்கும். கோழைத்தனம் இந்தியாவின் மேன்மையை நாசம் செய்து விட்டது. அதோடு காலமும் உதவி செய்தது.

''நீ புக்ககத்திற்குப்போனாலும் தைரியமாக இரு. பயப்படாதே. ஒட்டுக் கேட்காதே. பிறர் கடிதங்களை உடைத்துப் பார்க்காதே. மனத்தில் உள்ளதை நேரில் சொல்லிவிடு. மனத்தில் வைத்து உருகுவதைவிட வாயினால் சொல்லிவிடுவது நல்லது. உன்னால் முடிந்த அளவு அவர்கள் சொற்படி நட. உன்னால் முடியாவிட்டால் விஷயத்தைச் சுத்தமாகச் சொல்லிவிடு. மறைக்காதே! அதில் நன்மை உண்டு. உன்னை விலை கொடுத்து அவர்கள் வாங்கவில்லை. அவர்கள் வீட்டை நன்றாக விளங்க வைத்து விருத்தி செய்யப் போகிறாய். அந்த வீட்டில் உனக்குப் பூரண உரிமை உண்டு. பணம் காசு விஷயங்களில் தலையிடாதே! அதைப் பெரியவர்களுக்கு விட்டுவிடு. வேலை செய்யப் பின் வாங்காதே! சக்தி மீறிச் செய்யாதே! செய்வதை உன் மனம் ஒப்பச் செய். படிப்பை விடாதே. உன் தாய் தகப்பனார் எவ்வளவோ கஷ்டப்பட்டு முக்கியமான, சாசுவதமான விஷயங்களைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். முடிந்தால் அபிவிருத்தி செய்; முடியாவிட்டால் இருப்பதை மறக்காதே.

''நான் ஐயரைப் போல் துறவு போதிக்க மாட்டேன், உலகத்தில் பிறந்து எல்லா சுகங்களையும் அநுபவித்து உலகத்திற்கு உபகாரியாக வாழ வேணும். இரத்த வெள்ளம் பெருக்கி அதனால் சுக

மடையலாம் என்பது என் எண்ணத்திற்கு நேர் விரோதம்.

''நீ இரண்டு வீட்டிற்கும் விளக்கைப் போல் பிரகாசிக்க வேண்டும். இரண்டு குடும்ப வாழ்க்கை கலப்பது முதலில் கஷ்டமாக இருக்கும். பழகிய பின் வழக்கமாய்விடும். கேவலம் அடிமைத்தனத்திற்கு ஒத்துக் கொள்ளாதே. உனக்கு உரிமை உண்டு. புத்தி உண்டு. ஸ்வதந்தரம் உண்டு. தலை நிமிர்ந்து நட. உன் இருபுறமும் உள்ள இயற்கையைக் கண் குளிரப் பார். நேர்ப் பார்வையில் பார். கடைக் கண் பார்வையில் பார்க்கத் தகுந்தவன் கணவன் ஒருவனே. தந்தை, சகோதரர்கள், பிள்ளைகள் முதலியோரை நேராக நிமிர்ந்து பார். இவர்களைக் கடைக் கண்ணால் பார்க்காதே. நிமிர்ந்து உட்கார். பேசுவதை ஸ்பஷ்டமாகப் பேசு. தைரியமாகப் பேசு. இதில் கற்பு கெடுவதில்லை. மேலுக்கு வேஷம் அவசியம் இல்லை.''

## பாரதியார் பட்டபாடு!

செல்: யதுகிரி சின்னக் குழந்தையின் விளையாட்டைப் பார்த்து ரொம்ப நாள் ஆகிவிட்டது. அதனால் இது செய்வதெல்லாம் புதுமையாக இருக்கிறது அவருக்கு.

பாரதி: அது விளையாடினால் நமக்குச் சந்தோஷமாகிறது. நோயாய்ப்படுத்தால் சகிக்க முடிவதில்லை.

செல்: போன வருஷம் பட்ட பாட்டை நினைத்தால் பயமாக இருக்கிறது யதுகிரி. இவ்வளவு வீரம் பேசுகிறாரே, இவர்கூடப் புழுவாய்த் துடித்துவிட்டார். அம்பாள்தான் காப்பாற்றினாள். எந்த எந்த விதமாகப் பாடினாலும் மனத்தின் துடிப்பு நிற்கவில்லை.

பாரதி: இந்தச் செல்லம்மா இப்பொழுது சொல்கிறாள் யதுகிரி. அப்பொழுது நிற்கவே மாட்டாள். சதா முகத்தைத் தொங்கவிட்டபடி இருப்பாள். ''இந்தக் குழந்தையின் ஜுரம் எனக்கு வரட்டும் ஸ்வாமி!'' என்று புலம்புவாள். பாப்பாவோடு இவளைக் காப்பாற்றும் பொறுப்பும் எனக்கு விழுந்தது.

செல்: இவர் காத்தது ரொம்பத்தான்! பாப்பாவைத் தொட்டுவிட்டுக் கையைக் கழுவாவிட்டால் உள்ளே போக விடமாட்டார். ஏதோ ஒரு மருந்தை ஒரு பாத்திரத்தில் வைத்து அதில் கையைக் கழுவு என்பார். எதைத் தொட்டாலும் அந்த மருந்தின் நாற்றம்! நான் மாட்டேன் என்றால் மல்லுக்கு நிற்பார். பாப்பாவோ, ''செல்லம்மா, செல்லம்மா என்று நிமிஷத்திற்கு நிமிஷம் அழைக்கும். போது போதும் என்று ஆகிவிடும் என் பாடு. எல்லாம் கனவுபோல் இருக்கிறது இப்பொழுது.

பாரதி: சரி. அதில் கைகழுவாவிட்டால் பூச்சிகள் எப்படிச் சாவது? டாக்டர் நூறு தடவை சொல்லியிருக்கும்போது செல்லம்மா குழந்தையைத் தொட்டுவிட்டுக் கைகழுவ மாட்டேன் என்பாள். அந்த ஜுரம் விஷ ஜுரம்.

செல்: இரண்டாம் வாரம். ஜுரம் கண்மூடிக் கொண்டு காய்கிறது. இரவு எட்டு மணி இருக்கும். இவர் காய்ச்சல் குச்சியை வைத்தார். ஐந்து நிமிஷம் கழித்து எடுத்துப் பார்த்தால் அளவு மீறி இருந்தது. மறுபடி வைக்கலாம் என்று உதறினார். அது கை நழுவிக் கீழே விழுந்து சுக்கல் சுக்கலாக ஆகிவிட்டது. கை நடுக்கம்! மனத்தில் பயம்! என்ன செய்வது? வேலைக்காரியை டாக்டர் வீட்டிற்கு அனுப்பினேன். அவர் வந்து பார்த்து, ''இன்றிரவு கழிய வேண்டும். பயப்பட வேண்டாம்'' என்றார். பிறகு, ''உங்களிடம் தர்மாமீட்டர் கொடுப்பது தவறு'' என்று கூறி ஓர் இஞ்ஜக்ஷன் கொடுத்து விட்டுப் போனார். நினைவில்லாத ஜுரம். குழந்தை பேச முடியாமல் தவிக்கிறது. நான் கல் பொம்மை போல அதனிடம் உட்கார்ந்து கிடந்தேன் இவர் துயரம் சகிக்காமல் வாய்விட்டு அழலானார்; ''பாப்பா, நீ பெரிய சபைகளில் லெக்சர் கொடுக்கப் போகிறாய்; பெரிய பண்டிதையாகப் போகிறாய் என்று இருந்தேனே! உன் நாக்குப் புரள்வதில்லையே!'' என்று சுவரில் மோதிக் கொண்டார். நான் எழுந்து போய்ச் சமாதானம் செய்தேன். இரவெல்லாம் தூங்காமல், 'சக்தி, சக்தி' என்று கதறினார். காலையில் ஜுரம் சற்றுக் குறைந்தது. பணம் இல்லை. நோயின் கொடுமை வேறு. எப்படிச் சகிப்பது?

பாரதி: உண்மையில் அந்த இரண்டு மாதமும் தவியாய்த் தவித்தோம் யதுகிரி. முன்பு தங்கம்மாவுக்கு நிமோனியா கண்டிருப்போது இப்படி இல்லை; நஞ்சுண்ட ராவ் தம் குழந்தையைப் போல் பார்த்தார். ஸ்வர்ணம் இருந்தாள். எனக்கு இவ்வளவு தவிப்பு இல்லை.

## கடமையைச் செய்!

பாரதி: உன் குழந்தையை நினைத்துச் சதா அழாதே, யதுகிரி. பக்தியுடன் மன்றாடு. விடியற்காலையில் குளித்து சக்தி ஜபம் செய். உனக்கு நன்மையாகும். சின்ன வயதிலேயே கிழவிப்போல் புலம்பாதே. கீதை படித்ததன் பயன் என்ன? கை தப்பியதை மன்றாடிப் பெறுவதுதான் தீரத்தனம். புலம்புவது கையிலாகாதவர் வேலை. 'உனக்கு வந்தால் தெரியும்' என்று உனக்குச் சொல்ல உரிமை உண்டு. ஆனால் மறுகி மறுகிக் கரைவது நல்லதல்ல. மனத்தைத் திடப்படுத்த வேணும்.

செல்: நீங்கள் புருஷர்கள். பெற்ற வயிறு துடிக்கும்போது கீதையும் வேதாந்தமும் என்ன செய்யும்? அவள் என்ன சக்தியை மன்றாடி ஜபம் செய்தாலும் இறந்த குழந்தை கைக்கு வருமா? சங்கடம் போகுமா?

பாரதி: நம் கடமையை நாம் செய்தால் தெய்வம் எந்த வழியைக் காட்டுகிறதோ, அதே நம் வழியென்று நாம் திடப்படுத்திக் கொள்ள வேணும். மீறும் வரையில் கைச்சக்திக்கு மீறிச் செய்யலாம். மீறி விட்டால் அதோடு நாம் மடிவது முட்டாள் தனம். துக்கம் வந்தபோது அழுதுதான் குறைய வேணும். ஆனால், எப்போதும் அழுது அழுது முகத்தின் ஒளியைப் போக்கடித்துக் கொள்வது தப்பு. 'துக்கத்தில் தனக்கு மேலானவர்களைப் பார்த்துத் தேறு; பணத்தில் தனக்குக் கீழானவர்களைப் பார்த்துத் தேறு' என்பது பொன் எழுத்தில் பொறிக்க வேண்டிய நீதி மொழி. சிலர் சின்ன வயதில் பல கஷ்டத்தில், துக்கத்தில் உழலுகிறார்கள். சிலர் கிழ வயதில் பல கஷ்டங்களில் உழலுகிறார்கள். இனி யதுகிரிக்கு எடுத்ததெல்லாம் ஜயம் என்று வைத்துக் கொள். நினைத்து நினைத்து ஏங்காதே. வரும் நன்மைகளை எதிர்நோக்கி சக்தி ஜபம் செய்!

[ஆதாரம்: திருமதி யதுகிரி அம்மாள் அவர்கள் எழுதிய 'பாரதி நினைவுகள்' என்ற நூல்.]

நன்றி: அமுத நிலையம், சென்னை.



# பாரதி கூறிய ஒற்றுமையும் ஒருமைப்பாடும்

'அரசியல் விடுதலை முழுமை அடைய வேண்டுமாயினும் சரி, பொதுவுடைமைப் புதிய சமுதாயம் காண வேண்டுமாயினும் சரி, அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூட்டைபோல் சிதறி, 'நவக்கிரகங்கள்' போல் திசைக்கொன்றாகத் திரும்பி நிற்கும், வேண்டாத நிலைமை கூண்டோடு ஒழிய வேண்டும் என்று உறுதி கொண்டான் பாரதி.

இந் நாட்டின் சாபத் தீயே ஒற்றுமைக் குறைவுதான் என்பதை உணர்ந்த பாரதி,

''ஒற்றுமைக்குள் உய்யவே
ஒரு பெரும் செயல் செய்யத்'' துணிந்தான்.

''ஒற்றுமை வழி ஒன்றே வழி யென்ப
தேர்ந்திட்டோம்—நன்கு—தேர்ந்திட்டோம்''

என்று பாருலகதிரப் பறைசாற்றி, வெள்ளை அதிகார வர்க்கமும், கொள்ளை ஏகாதிபத்தியங்களும் 'கிடுகிடுக்க' வைத்தான் :

''சொந்தச் சகோதரர்களை'' நோக்கி பாரதி,

''ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால்பின் நமக்கெது வேண்டும்?''

என்று யாருக்கும் எளிதில் புரியும் விதத்தில் ஒற்றுமையின் அவசர அவசியத்தையும், எல்லையில்லாத வலுவையும் விளக்க ஆணித்தரமாக அழகாக ஒரு கேள்வியைக் கேட்கிறான்.

இந்தியாவில்—குறிப்பாகத் தமிழகத்தில்—ஒற்றுமை மெய்யாகவே உருவாக வேண்டுமானால், சாதி முறை ஆணிவேர், பக்க வேர், சல்லி வேரோடு ஒழிந்தாக வேண்டும் என்பதை மிக மிகத் தெளிவாகக் கண்டான் பாரதி. மொழி, இன அடிப்படைகளில் அமையும் நாடுகளின் ஒற்றுமையே, எதிர்காலத்தில் இந்திய ஒற்றுமையாக நிலைபெற முடியுமென்பதையும் கண்டான்.

## பாரதி படம் பிடித்துக் காட்டிய பாரத யூனியன்

பாரத நாட்டின் மணிக்கொடிக்கு வணக்கம் செலுத்த எல்லோரையும் அழைக்கிற பாடலில் கொடி வணக்கக் காட்சியைப் பாரதி சித்திரிப்பது கூர்ந்து கவனிக்கத் தக்கது.

செந்தமிழ் நாட்டுப் பொருநர், சேரன்றன் வீரர் (மலையாளிகள்), சிந்தை துணிந்த தெலுங்கர், ''தாயின் சேவடிக்கே பணி செய்திடு துளுவர்'', கன்னடர், போரிற் காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர், இந்துஸ்தானத்து மல்லர், ''மறைவரும் கீர்த்திகொள் ரஜ்புத்ர வீரர்'', ''பஞ்சநதத்துப் பிறந்தோர்'' (பஞ்சாபியர்) துஞ்சும் பொழுதினும் தாயின் தொண்டு நினைத்திடும் வங்கத்தினர் (வங்காளிகள்)—இத்தகைய தேசிய இனத்தார்களைத் திரட்டி, அணியணியாகக் கொடியின் கீழ் கொண்டு வந்து நிற்க வைக்கிறான்.

''நம்பற்குரியர் அவ்வீரர்—தங்கள்
நல்லுயிரீந்தும் கொடியினைக் காப்பார்''

என்று அவர்களை அறிமுகப்படுத்துகிறான்.

''சேர்ந்ததைக் காப்பது காணீர்—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க''

என்று தேசிய இனங்களின் ஐக்கியத்தையும், அவர் சிந்தையின் வீரத்தையும் வாழ்த்துகிறான்.

இவ்வாறு ஏற்படும் புதிய 'பாரத தேசத்தின்' (இந்திய யூனியனின்) வெற்றிச் சாதனைகளைக் கற்பனைத் திறனோடு விளக்குகிறான். பரஸ்பர நல்லுறவால் தேசிய இனங்கள் நலன் பல தழுவுவதைப் பூரிப்புடன் படம் பிடித்துக் காட்டுகிறான்.

1. ''வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்''

2. ''சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்''

3. ''கங்கை நதிப்புரத்துக்கோதுமைப்பண்டம்
காவிரி வெற்றிலைக்குமாறுகொள்ளுவோம்''

4. ''சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்''

5. ''காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்''

6. ''ராசபுதானத்து வீரர்தமக்கு
நல்லியல் கன்னடத்துத் தங்கம் அளிப்

இப்படியிப்படிப் பலப்பல சாதனைகள், தேசிய இனங்களின் ஒற்றுமையில் ஏற்படும் லாபத்திற்கு பாரதி காட்டும் எடுத்துக்காட்டுக்கள்.

தமிழ்நாடு, பாரத நாடு, தேசிய இன ஒற்றுமை, இந்திய யூனியன் உணர்ச்சிகளை வளர்த்தான் பாரதி. தேசிய இன அடிப்படையில் மலரும் நாடுகளின்கூட்டாட்சியாக இந்திய யூனியன் அமையும் பொழுது வேற்றுமைப் பேய்கள் இருந்த இடம் தெரியாமல் மறையுமென்றும், அப்பொழுது

''பாரத தேசமென்று பெயர் சொல்வார்—மிடிப்
பயங்கொல்லுவார் துயர்ப்பகைவெல்லுவார்''

என்றும் எத்துணைத் தீர்க்க தரிசனத்தோடு பாரதி சொல்லுகிறான், ஆஹா!

நெருப்புக்கிரையாகி,சாம்பலான பாஞ்சாலத்தையும், டில்லியையும், நவகாளி, பீகார், எல்லைப் புறங்களையும் நினைத்தால், இன அடிப்படையில், ''ஒற்றுமை வழி ஒன்றே வழி'' என்ற பாரதி சொல், பெருமையிற் பெருமை அடைகிறதல்லவா?

('பாரதி வழி' என்னும் நூலிலிருந்து......)

[நன்றி: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-2.]



# உலககவி பாரதியார்

கவிஞர் எஸ். டி. சுந்தரம்

பாரதியார் எத்தகைய பேராற்றல் என்பதனைப்
பாவேந்தர் தம்பாட்டில் பேசுகிறார் பெருமையுடன்
''**பாரதியார் உலககவி** அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!

ஒரூருக்கு ஒருநாட்டுக்கு உரித்தான ஓட்டைச்சாண்
உளமுடையாரல்லார் மற்றும்
வீரர்அவர் மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும்என்பார்!

சீருயர்ந்த கவிஞர்பால் செறிந்துவாழும்
செல்வநலம் எல்லாம்நாம் அவர்பாற்கண்டோம்''-என்று
பூரித்துப் பூரித்துப் புதுவைநகர்க் கவியரசன்
புகழாரம் கேட்டபின்னும் புலம்பிடுவார் சிலபேர்கள்!

பேரறிவின் சிகரத்தின் பெருவிளக்கை
புதுச்சுடரைப் பார்க்கவே அஞ்சுவார்கள்
பாரெல்லாம் மதித்தாலும் பார்க்கமாட்டார்!
பயனற்ற கேள்விபல கேட்பார் நம்மை!

''பாவலனோ? பாரதியா? பழம்புலமைப் பண்டிதனோ?
யாரந்தப் பேராளன்? என்ன இனம்? யாதுகுலம்?
பாவம் அவன்செய்த பாவினங்கள் எத்தனையோ?
யாவும் நல்யாப்பில் யாம்புகழ யாத்தனனோ?

நாவுக்குச் சுவையாக நாற்கவியில் அலங்காரக்
கோவை யுலாபாடிக் கோவேந்தர் அவையினிலே,
தேவைக்குப் பண்பாடி தேவகவி ஆயினனோ?''
என்றே கடாவுகின்ற எம்மவர்க்குக் கூறிடுவோம்!

''கேளீரோ ஏட்டறிவின் மூட்டையீரே!
கூளப்பன் காதலுக்குக் கொடிபிடித்துப்
பாழடிக்கும் படுக்கைகளைப் பாடமாட்டான்!
வாழப்பண் பாடவந்த வாழ்க்கைச் சிற்பி!

வீணடித்து நேரத்தைக் கொள்வோன்அல்லன்
வீணர்களும் உரம்பெறவே பாடவந்தான்!
வாழைமரம் போல்சரிந்த வாழ்வைநல்ல
வான்மகிழும் ஆலமரம்போல் வளர்த்தான்!



கண்ணீரால் சுதந்திரத்தின் பயிரைக் காத்தான்
காலமழை போல்வந்த கவிதைமன்னன்!
பன்னீரும் பனிநீரும் புனுகும் நாறும்
விலைமாதர் பெருமைகளை பஜனைபாடும்

மன்னர்களின் மகிழ்ச்சிக்கே பதங்கள்பாடும்
மலிவான புலவனல்ல எமது வேந்தன்!
பண்ணரசன் வருமுன்னர் பரதநாட்டின்
மண்ணிதனில் நிலைகொஞ்சம் எண்ணிப்பார்ப்போம்

அப்போதும் இம்மண்ணில் கலைகள் உண்டு
அணிசெய்யும் காவியங்கள் கோடியுண்டு!
தப்பின்றிப் பாடுகிற புலவருண்டு
தடையின்றிப் பேசுகின்ற திருடருண்டு!

ஒப்பில்லா மதவாதத் திமிருமுண்டு
உயிரான ஒன்றுமட்டும் ஆங்கே இல்லை!
செப்பரிய சுதந்திரமாம் சோதியில்லை
செயலற்ற பிண்டம்போல் விழித்தோம் அந்நாள்

சுப்ரமணிய பாரதியார் என்ற சோதி
செங்கதிர்போல் செந்தமிழ்வான் சிகரந்தோன்றி,
நற்புதுமை மின்சார ஒளிவெள்ளத்தை
நந்தமிழின் இனிமையிலே சேர்த்தான் ஆங்கே,

வில்லுதைத்துக் கணப்போதில் இலக்கைத்தாக்கும்
வானவெளி விசைகள்எனக் கவிகள் கொட்டிக்
கொல்லுவித்த கொடுமையெனும் அடிமைப்பேயின்
குற்றுயிரும் இற்றுவிழப் போர்தொடுத்தான்!

பாரதியை தமிழனைப் பிணிவிலங்கை
பார்த்தவனும் பதறினான், கலைமான்ஒன்று,
பேரதிர்ச்சி கொண்டோடிப் புலியைத் தாக்கும்
பெருவீரம் கொண்டதென உணர்ச்சிமானம்,

பாரதிரப் பெருக்கினான் பாய்ந்துவீரப்
பரணிப்போர்க் களங்கண்ட வீரர்கோமான்!
மார்தட்டி எம்மானம் காத்தவீரன்
மறைத்தமிழன் வழிவந்த மாண்கவிஞன்!

வானப்பன் நாதமெல்லாம் வந்து மண்ணில்
ஞானப் பொன்னோடையெனப்பாய்ந்துகோடைக்
காலத்தில் கொடும்பாலை அடிமைநாட்டில்
ஆலத்தை அமுதாக்கும் அறிவைத் தந்தான்!

காரிருளை அச்சத்தை அடித்துக் கொன்றான்
கனகமணிக் காந்தமழைக் கவிபொழிந்தான்!
கொடுமைகளின் நடுவினிலே குணமாய் வந்தான்!
குரங்குகளில் மத்தியிலே குன்றாய் நின்றான்!

காடுபுகை மத்தியிலே கதிராய் வந்தான்
காளான்கள் குப்பையிலே கனற்பிழம்பு!
கோடுமலை நீடருவி ஊடே துள்ளி
ஓடிவரும் வெள்ளமதை எதிர்த்துச் சிந்து

பாடுகின்ற படகோட்டி பயந்துச் செத்த
பெட்டையரும் புதுவீரம் கொண்டுதுள்ள
சாடிவந்து பயம்என்ற பேயடித்து
தேடிவந்து நம்முதுகை நிமிர்த்தவீரன்!

நாட்டடிமை ஓட்டவந்த நாதன், பெண்மை
மீட்டடிமை மீட்கவந்த வீரன்; நாட்டை
பாட்டினிலே மீட்டியநல் வீணை
ஏட்டடிமைத் தனமீட்ட ஏந்தல், மற்றும்

வெண்டைக்காய் வில்லர்களை வீரர்என்று
விண்தமிழில் பொய்புகலும் வறுமையல்ல!
சுண்டைக்காய் வத்தல்களை சூரர்என்று
சுண்டலுக்குத் தமிழ்விற்கும் சுப்பன் அல்ல!

சுப்ரமணிய பாரதியார் சொக்கத் தங்கம்!
சுடர்த்தமிழின் சோலைமலை; கலையின்சாரம்!
வெங்காயம் கத்தாழை விளக்கெண்ணெய் வேப்பங்காயில்
வளவளத்த கவியல்ல; வேங்கைப்பாய்ச்சல்!

சுட்டெரிக்கும் சரவிழிகள் சுரக்கும்வீரம்
பட்டெரிக்கும் பகல்உமிழும் படைவாளேந்தும்
அட்டதிக்கும் இடியதிர முரசு கொட்டி
நட்டகொடி ஏற்றுவித்த நாதன் எம்கோ!

சிங்கத் தமிழன் என்று சீறிவிட்டால் போதாது
சீக்காளிப் பயல்கூட சிங்கமெனப் பொய்சொல்வான்!
நாக்காளர் கூட்டத்தை நன்னாக்குப் பூச்சிகளை
நோக்கிவிடில் நம் கவிஞன் நாவடக்கிப் போவார்கள்!

அவனன்றோ வீரகவி, ஆசாரக் கவியல்ல!
சிவனே எனக்கெஞ்சும் செத்தகவி அவனல்ல
‘மகனே எழுந்திருடா! பாவிகளை சங்கரிக்கும்
தவசங்கரா’என்று சத்திதரும் செங்கவிஞன்!

காலையிலே ஒருகவிதை;கடும்பகலில் மறுகவிதை
மாலை மயக்கத்தில் மாயக் கிழவிகளின்
சேலைக்கு ஒருகவிதை;சண்டைக்கு ஒருகவிதை;
வாலைச் சிறுசுகளை வம்புசெய்யும் மனுசருக்கு!

கோலக்கவி எழுதிக் கோதானம் பெற்றுவரும்
தூலக்கவிஞனல்ல தூயஒளிகண்டகவி!
இரங்கற்பா கூட்டத்தில் இனிப்பாகப் பாடுதற்கு
இருநூறு வெண்காசு இன்றே அனுப்பிடணும்!

சிரங்கப்பன் பெண்ணுக்குச் சீக்கிரமாய்க் கவிபாட,
அரங்கப்பன் ஐநூறு அச்சாரம் தரவேணும்!
உறங்கப்பண்பாடுதற்கு ஓராயிரம் வேணும்!
இப்படியெல்லாம் இங்கு, இந்த கவிச்சந்தையிலே!

தரம்கெட்ட மந்தையெலாம் தடுமாறும் காலத்தில்
அறங்காத்து மறங்காத்து அதிநாணயங்காத்து
புறங்காத்து அகங்காத்துப் பொல்லாத வறுமையிலும்
தரங்காத்த ஞானகுரு தனிமனிதமாமேதை!

தித்திக்கும் கவிதைகளைக் குயில்கள்பாடும்
தத்திவரும் கிளிக்கூட்டம் தமிழ்தான்பேசும்!
சித்திரமாம் செந்தமிழை குழந்தைகாணும்!
யுத்தஜெய பேரிகையை வீரர்கேட்பார்!

வெத்துமர விறகைப்போல் எரிந்தநம்மை
வித்தைமிகு வீணைகளாய் மீட்டிவிட்டான்!
பாஞ்சாலி சபதத்தைக் கேட்டுவிட்டால்
பேடிமகன் கூடபல பீமனாவான்!

மாஜினியின் ஆணையது மனம்புகுந்தால்
மாறாத துரோகிகளும் மனிதராவார்
பாப்பாவின் பாட்டினிமை கேட்டுவிட்டால்
பெற்றறியா மலடிகளும் அன்னையாவாள்!

பாரதப்போர் முடித்திட்ட வீரக்கண்ணன்
பாரதியார் வீட்டினிலோர் வேலைக்காரன்!
பாகுதமிழ்க் குயில்பாட்டின் பெருமைகூற
பாரதிதாசன் மீண்டும் பிறக்க வேண்டும்!

வாழ்களம் உலககவி உதயஜோதி!
வாழ்க நற்புதுவுலகம் வாழ்கவாழ்க!

# பாரதியின் தத்துவ ஞானம்

—ப. ஜீவானந்தம்

"உணவு, உடை, உறைவிடம், கல்வி, தொழில், உண்மை, அழகு, இன்பம்—இவை மனித வாழ்வின் முதல் பெருந் தேவைகள். மற்றவை எல்லாம் இரண்டாந்தரமான தேவைகள் அல்லது தேவையற்றவைகள்."

வேறு எது இருப்பினும் இல்லாவிடினும் மனிதன் வாழ முடியும். ஆனால் மேலே கூறிய எட்டுப் பொருள்களும் இல்லாவிட்டால், மனிதன் மனிதனாக வாழ முடியாது.

நேற்றும், இன்றும், நாளையும் வாழ்க்கைப் பெரும் தத்துவ ஞானம் (The Great Philosophy of Life) இதுவே!

பாரதி இலக்கியம் முழுவதையும் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் இந்தத் தத்துவஞானம் பலபடி ஊடுருவிக் கிடப்பதைக் காணலாம்.

இசைக் கருவிகளில் வீணை, ஈடு இணையற்றதல்லவா? ஆயிரம் நரம்புகளைக் கொண்ட யாழ் செய்து நுண்ணிய இசையின்பத்தைச் சுவைத்தவன் தமிழன் என்று சொல்லுகிறார்கள். இந்த வழி வழியில் வந்தவன் பாரதி.

வாழ்விலேயே சிறந்த மனித வாழ்வை எண்ணுகிறான். அதனைப் பொருத்தமாக உவமிக்க "நல்லதோர் வீணை" நினைவுக்கு வருகிறது அவனுக்கு. வீணை, அதிலும் "நல்லதோர் வீணை", சிந்திக்க வேண்டும். மனித வாழ்வு, அதிலும் பெறற்கரிய மனித வாழ்வு, சிந்திக்க வேண்டும்.

வீணை எதற்கு? ஒரு பயனுமின்றிக் குப்பை மேட்டில் தூக்கி எறிவதற்கா? அல்ல! பின் எதற்கு? வாசித்து உலகத்தை எல்லாம் இன்பக் கடல் ஆட்டுதற்கு; தானும் இன்பக் கடலாடுதற்கு. மனித வாழ்வு எதற்கு? வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவதற்கா? அல்ல. பின் எதற்கு? உலகத்தைப் பயனுள்ள வாழ்வு வாழச் செய்து, உலகம் முழுவதும் இன்பம் அடைவதில் தன்னுடைய இன்பத்தைக் காண்பதற்கு.

பாரதிக்கு முன்பிருந்த தமிழ்ச் சான்றோர்கள் மட்டுமல்ல, உலகச் சான்றோர்கள் எல்லாருடைய கண்ணோட்டத்தின் அடிச்சரடும் இதுதான். பாரதியின் வாழ்க்கைப் பார்வை அவர்களுடைய சீரிய கண்ணோட்டங்களை எல்லாம் காலத்திற்கு ஏற்ற மெருகு கொடுத்துப் பிரதி நிதிப்படுத்துகின்றன.

இந்தப் பார்வையை பாரதி, சக்தியினிடம் வரங் கேட்கும் ஒரு பாடலில் மிக அழகாகக் காட்டுகிறான்!

"நல்லதோர் வீணை செய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி!—எனைச்
சுடர்மிகும் அறிவுடன்படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ?—இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி—நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?"

சோற்றுக்குச் செலவும், பூமிக்கு பாரமுமாக எனக்கு வாழ்வு வேண்டாம். மனித வர்க்கத்தின் விடுதலைக்கும், நல்வாழ்வுக்கும் பெரும்பணி புரிவதற்காகவே எனக்கு வாழ்வு வேண்டும்.

பாரதியின் வாழ்க்கைப் பெருநோக்கைப் பார்த்தீர்களா?

**பாரதி கேட்ட வரம்**

செயலுக்கு ஏற்ற உணர்வை மக்களிடம் தூண்ட, தனக்கு ஒப்பற்ற பாடல் திறமை அருள வேண்டும் எனக் கேட்கிறான்.

மேலும் கேட்கிறான் :

"கல்லை வயிரமணி யாக்கல்—செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்—வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல்—பன்றிப்
போத்தைச் சிங்கவே றாக்கல்—மண்ணை
வெல்லத் தினிப்புவரச் செய்தல்—என
விந்தை தோன்றிட இந்நாட்டை—நான்
தொல்லை தீர்த்துயர்வு கல்வி—வெற்றி
சூழும் வீரம் அறிவாண்மை

கூடுந் திரவியத்தின் குவைகள்—திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள்—
இவை
நாடும் படிக்குவினை செய்து—இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கும் ஓங்கக்—கலி
சாடுந்திறன் எனக்குத் தருவாய்:"

எத்தகைய திறனெல்லாம் கேட்கிறான்? என்ன செய்யக் கேட்கிறான்? யாருக்காகக் கேட்கிறான்? என்ற கேள்விகளைக் கிளப்பி பாரதி வரம் கேட்பதைத் துருவினால்தான், அவனுடைய கண்ணோட்டத்தை நாம் கண்டு கொள்ள முடியும்.

''நாட்டோர் கீர்த்தியெங்கும் ஓங்கக்—கலி
சாடும் திறன்''

வேண்டுமென்று கேட்கிறான். சுவைத்துச் சுவைத்துப் பாருங்கள். அவனுடைய பெரிய பார்வை நமக்கு விளங்கும்.

இன்னும் மேலே போய், பாரதி, சக்தியிடம் வரங் கேட்கிறான் :

''. . . . . . . . . . . . . . . . . . இனி
வையத் தலைமைஎனக் கருள்வாய்''

என்று கேட்கிறான்.

விண்ணகத்தை மண்ணில் கொண்டு வர வேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்—அதுதானே பாரதியின் பெரும் பார்வை!

## பாரதியின் கிருதயுகம்

பாரதியின் வாழ்க்கைப் பார்வையில் ஒரு புரட்சி நிகழ்ச்சி ஒரு ''யுகப் புரட்சி''யைக் காட்டுகிறது. ''கலி'' இடிபட்ட சுவர்போல விழுகிறான். ''கிருத யுகம்'' எழுகிறது.

அவனுடைய ''பொதுவுடைமைப் பார்வை''யில், ''உலகத்துக்கொரு புதுமை'' நடக்கிறது. ''எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் விலை, எல்லோரும் ஓர் நிறை'' என்ற சூழ்நிலை உருவாகிறது. அங்கு ''எல்லோரும் மக்கள், எல்லோரும் மன்னர்''களாக வாழ்கிறார்கள்.

## பாரதியின் தத்துவஞானம்

''நான் ஜாதி பேதத்திற்கு நண்பன் அல்லேன். இந்தியர்கள் எல்லோரும் இந்துக்கள், எல்லோரும் ஒரே ஜாதி என்ற சாதாரண இங்கிலீஷ் படிப்பாளிகள் கொள்கையை நான் அனுசரிக்கவில்லை. உலகத்து மனிதர்கள் எல்லோரும் ஒரே ஜாதி. ''வஸுதைவ குடும்பம்'' என்ற பர்த்ருஹரியின் கொள்கையைத் தழுவியுள்ளேன். மனித ஜாதியும் மற்ற ஜந்து சமூகங்களும் ஒரே குடும்பம் என்ற டார்வின் என்ற ஆங்கில விஞ்ஞானியின் கருத்தைப் பின்பற்றுகிறேன். எல்லா உயிர்களும் கடவுளுடைய அம்சம் என்ற பகவத் கீதையின் பரமோபதேசத்தைக் கடைப்பிடித்து நிற்கிறேன்''.

பாரதி 1921 மார்ச் 15-ஆம் தேதி எழுதிய ஒரு கட்டுரையின் ஒரு பகுதி இது. மறைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னால் வெளியிட்ட கருத்து இது. எனவே மேற்படிக் கருத்துக்கள், பாரதியின் தத்துவ முதிர்ச்சியில் விளைந்த கருத்துக்கள் என்பது உறுதி.

## உலகத்து மக்களெல்லாம் ஒரே ஜாதி

பாரதியின் கருத்து பழைய உண்மையும் புதிய உண்மையும் இரண்டறக் கலந்து இருபதாம் நூற்றாண்டின் மெருகும் ஏறி, தமிழகத்தில் வெடித்துக் கிளம்பிய கருத்து. பகவத் கீதை—பர்த்ருஹரி—டார்வின்—பாரதி பல்வேறு காலத்து உரமும் நீரும் ஊட்டி வளர்த்துள்ள கொள்கை—உலகத்து மக்களெல்லாம் ஒரே ஜாதி; உலகத்து உயிர்களெல்லாம் ஒரே குடும்பம்; உலகத்து உயிர்களெல்லாம் கடவுளின் அம்சம் என்ற கொள்கை.

பின்னும் ஐந்து மாதங்களுக்கு அப்பால் இந்தத் தத்துவத்தை மேலும் வளர்த்து வேறொரு விதமாக வெளியிடுகிறான். அது இது :

''எல்லாப் பொருள்களையும் ஒரே பொருளாகக் காண்பவனுக்கு மருட்சி இல்லை; துயரமில்லை. எல்லாம் ஒரே பொருள் என்று கண்டவன் எதனிடத்தும் கூச்சமோ, வெறுப்போ, அச்சமோ கொள்ள மாட்டான். அவன் எல்லாப் பொருள்களிடத்தும் அன்பும், ஆதரவும், மகிழ்ச்சியும், பக்தியும் செலுத்துவான். எந்தப் பொருளிலிருந்தும் மன நிறைவு பெறுகிறவன், எப்பொழுதும் நிறைவோடிருப்பான், இங்ஙனம் மாறாத இன்ப நிலையே முக்தி நிலை என்றும் அமர பதம் என்றும் கூறப்படுகிறது. இதனை மனிதன் பயிற்சியாலும் நம்பிக்கையாலும் இந்த உலகத்திலேயே எய்திவிட முடியும். இதுதான் வேத ரகசியம்.''

இந்தக் கருத்தை 1921 ஆகஸ்டு 25-ஆம் தேதி எழுதிய ''ஸ்ரீ ரவீந்திர திக்விஜயம்'' என்ற கட்டுரையில் ''காளிதாசன்'' என்ற புனை பெயரில் பாரதி குறிப்பிடுகிறான். இதை ரவீந்திரர் இந்தியாவின் பிரதிநிதியாக உலகத்திற்கு அருளிய உபதேசம் என்று குறிப்பிடுகிறான். இதுதான் பாரத நாட்டுக்குப் பூலோக குரு என்ற பெருமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறதென்று குறிப்பிடுகிறான்,

''வியனுல கனைத்தையும் அமுதென நுகரும்
தேவ வாழ்வை''

இங்கு தத்துவக் கனியாகப் பழுக்க வைத்து அருளுகிறான்.

இந்தத் தத்துவத்தை பாரதி நடைமுறைக் கொள்கையாக்க விரும்புகிறான். அதன் பொருட்டு உலக முழுவதிலும் ஒரு கண்ணோட்டம் செலுத்துகிறான். அதே ஓட்டத்தில் ஒரு வட்டத்தைத் தமிழகத்திலும் செலுத்துகிறான். சில முடிவுகளுக்கு வருகிறான்.

1. எல்லா மக்களும் ஏற்றத் தாழ்வு பாராட்டாமல், சரிநிகர் சமானமாக வாழ வேண்டும்.

2. எல்லா மக்களும் உலக இன்பம் முழுவதையும் சம உரிமையோடும் சமவாய்ப்போடும் அனுபவிக்க வேண்டும். நமது பழம் பெரும் பண்பாட்டையும், மனித வர்க்கத்தின் புத்தம் புது இலட்சியங்களையும் இரண்டறக் கலந்து, மேற்கூறிய முடிவுகளுக்கு வருகிறான்.

முடிவுகளை நடைமுறையாக்குவது எப்படி? நோயின் அளவுக்குத் தக்கபடியும் ஆளின் அளவுக்குத் தக்கபடியும் மருந்து கொடுக்க வேண்டுமென்று உணர்கிறான்.

யதார்த்தச் சூழ்நிலையை உள் நுழைந்து கணக்கில் எடுக்கிறான். மக்கள், ஜாதிமத வாழ்விலும், தத்துவஞானக் கோட்பாடுகளிலும் அழுந்திக் கிடப்பதைப் பார்க்கிறான். புதிய வாழ்வு மலர வேண்டுமானால், ஜனயுகம் தோன்ற வேண்டுமானால், புதுமை வாய்ந்த ஒரு சமய-தத்துவ ஞானக் கண்ணோட்டத்தை உருவாக்கி, பொது மக்களுக்குக் கொடுக்க வேண்டியது மிக மிகத் தேவை என்று அவனுக்குப்படுகிறது.

[நன்றி : நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-2.]

# மாமனும் மருகனும்



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யும், கவிதை பாடிய புலவன் சுப்பிரமணிய பாரதியும் மாமன் மருகன் உறவோடு தோளோடு தோள் நின்று நாட்டு விடுதலைக்காகப் பாடு பட்டவர்கள்,

**வ.உ.சி.யின் வீரச் செயல்:**

வ.உ.சி.யின் வீரச் செயல்கள் குறித்துக் கவி பாரதியார் பல பாடல்கள் பாடியுள்ளார்:

(வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று) :

நாட்டி லெங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய்:-கனல்-மூட்டினாய்;
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டு வேன்:-வலி-காட்டுவேன்.
(நாட்டி)

கூட்டம் கூடிவந்தே மாதரமென்று
கோஷித் தாய்;-எமைத்-தூஷித்தாய்;
ஓட்டம் நாங்க ளெடுக்க வென்றே கப்பல்
ஓட்டி னாய்;-பொருள்-ஈட்டினாய்
(நாட்டி)

கோழைப் பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறி னாய்;-சட்டம்-மீறினாய்;
ஏழைப்பட் டிங்கு இறத்தல் இழிவென்றே
ஏசி னாய்;-வீரம்-பேசினாய்.
(நாட்டி)

அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கி னாய்;-புன்மை-போக்கினாய்;
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டி னாய்;-ஆசை-காட்டினாய்.
(நாட்டி)

தொண்டொன் றேதொழிலாக் கொண்டிருந்
தோரைத்
தூண்டி னாய்;-புகழ்-வேண்டினாய்;
கண்கண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டி னாய்;-சோர்வை-ஓட்டினாய்.
(நாட்டி)

எங்கும் இந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவி னாய்;-விதை-தூவினாய்;
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்
செய்ய வோ?-நீங்கள் உய்யவோ?
(நாட்டி)

சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திச்
சொல்லுவேன்;-குத்திக் கொல்லுவேன்
தட்டிப் பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன்;-பழி-கொள்ளுவேன்.
(நாட்டி)

(தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி):

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்-இனி-அஞ்சிடோம்;
எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்
ஏற்குமோ?-தெய்வம்-பார்க்குமோ?

வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்து வோம்;-முடி-தாழ்த்துவோம்;
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈன மோ?-அவ-மானமோ?

பொழுதெல்லாம் எங்கள் செல்வங் கொள்ளை
கொண்டு
போகவோ?-நாங்கள்-சாகவோ?
அழுதுகொண்டிருப் போமோ? ஆண்பிள்ளைகள்
அல்லமோ?-உயிர்- வெல்லமோ?

நாங்கள் முப்பது கோடி மக்களும்
நாய்க ளோ?-பன்றிச்-சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்களோ? இது
நீத மோ-பிடி-வாதமோ?

பார தத்திடை அன்பு செலுத்துதல்
பாப மோ?-மனஸ்-தாபமோ?
கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்ற மோ?-இதில்-செற்றமோ!


ஒற்றுமை வழி யொன்றே வழியென்பது
ஓர்ந்திட் டோம்;-நன்கு-தேர்ந்திட்டோம்
மற்று நீங்கள் செய்யுங்கொடு மைக்கெல்லாம்
மலைவு றோம்;-சித்தம்-கலைவுறோம்.

சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன்
னெண்ணம்
சாயுமோ?-ஜீவன்-ஓயுமோ?
இதயத் துள்ளே இலங்கு மஹாபக்தி
ஏகுமோ?-நெஞ்சம்-வேகுமோ?

அடக்குமுறை காரணமாக அந்நாளில் 'வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று', 'தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி' என்னும் தலைப்புகளில் வெளியான இரு கவிதைகள் அடிமைப் பட்டுக் கிடந்த மக்களை விடுதலை வேள்வியில் குதிக்குமாறு ஒளியூட்டின என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

இளைஞர்களிடத்தே தேசபக்திக் கனல் கொழுந்து விட்டெரிய அந்நாளில் இவ்விரு கவிதைகளும் தூண்டின என்று மறைந்த மாபெரும் தேசபக்தர் திரு. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள் மேடை தோறும் முழங்குவதுண்டு.

''நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ?'' என்ற பாடல் கேட்டுக் கல் மனமும் கரையும்.




**முதல் சந்திப்பு :**

முதன் முதலாக வ. உ. சி. அவர்கள் கவிஞர் பாரதி அவர்களை 'இந்தியா' பத்திரிகை அலுவலகத்தில்தான் சந்தித்தார். முன்பே எந்தையாரின் நாட்டுப் பணிகள் பற்றி நன்கு அறிந்திருந்த பாரதியார் அவர்கள் முதல் சந்திப்பிலேயே ஆரத் தழுவி வரவேற்றதாக வ.உ.சி. அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்.

**இரு கரங்கள் :**

சூரத் காங்கிரசில் லோகமான்ய பால கங்காதர திலகர் அவர்களுக்கு இருகரங்களாக விளங்கியவர்கள் தமிழ்நாட்டிலிருந்து சென்ற வ.உ.சி.யும், பாரதியும் தாம் என்று அறிந்து நாம் பெருமை கொள்ளலாம்.

சூரத் காங்கிரசில் குழப்பமேற்பட்டு திலகர் மீது சில குண்டர்கள் நாற்காலிகளைத் தூக்கி எறிந்தபோது ஒருபுறம் வ.உ.சி.யும், மறுபுறம் பாரதியும் அரணாக நின்று அவரைக் காப்பாற்றினார்கள்.

மாநாடு குழப்பத்தில் முடியவே, தமிழகப் பிரதிநிதிகள் எல்லாம் அரவிந்தர் மாளிகையில் தங்கியிருந்தபோது, விடுதலைப் போராட்டத்திற்குக் குரல் கொடுக்கத் தீவிரவாதிகளுக்கு ஒரு நாள் ஏடு வேண்டுமென்று பாரதியார் யோசனை கூறினாராம். ஆனால் வ.உ.சி.யோ ஒரு ஏடு மட்டும் போதாது. பலமொழிகளில் பதினான்கு ஏடுகள் நடத்தினால்தான் வெள்ளையர்களை விரட்டுவதற்கு மக்கள் விழிப்படைவார்கள் என்று கூறியிருக்கிறார்.

**வ.உ.சி.யின் வேண்டுகோள் :**

தேச பக்தர்களுக்கு உதவி செய்வதற்காகவே வ.உ.சி.யின் வேண்டுகோளின் பேரில் கவிஞர் பாரதியார் புதுவையில் குடியேறி விடுதலைப் போராட்டத்திற்குப் பெரும் தொண்டாற்றினார். இல்லாவிடில் பாரதியாரின் பல இலக்கியப் படைப்புகள் நமக்குக் கிடைத்திருக்க மாட்டா.

மதி இழந்த கரியின் காலில் மாமா (பாரதியார்) மிதியுண்டு சின்னாளில் மறைந்த செய்தி கேட்டு மருகர் (வ.உ.சி.) அடைந்த துயரம் மலையெனப் பெரிது.

—திரு. வ. உ. சி. சுப்பிரமணியம் அவர்களைப் பேட்டி கண்டு எழுதியவர்: பி. வி. கிரி.

## வற்றல் குழம்புப் பிரியர்

ஒருமுறை சொந்த அலுவலின் காரணமாக, மதுரைக்குச் சென்ற பாரதியார் ஓர் உணவு விடுதிக்குச் சென்றார். இலையின் முன் அமர்ந்து பதார்த்த வகைகளைப் பற்றி உரிமையாளரிடம் கேட்டார். ''பூசணிக்காய் கறி, பூசணிக்காய் சாம்பார்' என்று உரிமையாளர் சொல்லவே, பாரதியார் முகவாட்டத்துடன் இலையைவிட்டு எழுந்துவிட்டார். வெளியே புறப்பட முனைந்தார். அவரைப் போகவிடாமல் தடுத்த முதலாளி, ''தங்களுக்கு என்ன கறி, என்ன சாம்பார் பிடிக்குமென்று சொல்லுங்கள். பத்தே நிமிடத்தில் தயார் செய்கிறேன்! நம்ம கடையில் நுழைஞ்சவர் சாப்பிடாமல் எழுந்து போறதாவது!'' என்று சொல்லிப் பாரதியை அமர்த்தினார்.

''எனக்கு மணத்தக்காளி வற்றல் குழம்பு தயாரித்துக் கொடுங்கள்'' என்று கேட்ட பாரதியார், தாம் யாரென்பதையும் உரிமையாளருக்குத் தெரிவித்தார்.

வந்திருப்பவர் பாரதியார் என்பதையறிந்தவுடன், உரிமையாளர் தலை கால் புரியாத அளவுக்கு மனமகிழ்ச்சியடைந்தார். தாமே வற்றல் குழம்பு தயாரித்தார்; பாரதியாருக்குப் படைத்தார். அத்துடன் 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்னும் பாட்டைப் பாடுமாறும் கேட்டார். பாரதி பாடினார். பின்னர் உரிமையாளரிடம் பாரதியார் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.






''இன்று வெள்ளிக்கிழமை; இனி ஒவ்வொரு வெள்ளியன்றும் எனது நினைவாக சாப்பாட்டில் மணத்தக்காளி வற்றல் குழம்பு போட வேண்டும்'' என்று வேண்டினார் பாரதியார். உரிமையாளரும் அதற்குச் சம்மதித்து, கடைசி வரை வெள்ளிக்கிழமை தோறும் வற்றல் குழம்பு போட்டுவந்தார்.

உணவு உண்ண வருபவர் எல்லாருக்கும் வற்றல் குழம்பு கிடைக்க வேண்டும் என்று எண்ணிய பாரதி, ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்'' என்ற கொள்கையுடையவர் என்பதில் ஐயமில்லை.


வளமான
வாழ்விற்கு....
நாடு நலம் பெற
வீடு வளம் பெற
அரிய பெரிய திட்டங்கள்
அரசு நிதம் தீட்டுகிறது.
திட்டங்களின் இனிய பலன்
எட்டிடவே எல்லோர்க்கும்
அளவான குடும்பம்
அமைவதுதான் சிறப்பாகும்!
பிறந்ததைக் காப்போம்!
பிறப்பதைத் தவிர்ப்போம்!!
குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676



## விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!

| | பெரியவர் கூலி ரூ. பை. | சிறியவர் கூலி ரூ. பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | — |

வேலை நேரம் : உழவு—5 மணி நேரம். பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!



வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு, செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.


பாரதியாரும்
புதிய சமுதாயமும்
கா. திரவியம், ஐ.ஏ.எஸ்.,

# பாரதியாரும் புதிய சமுதாயமும்

கா. திரவியம், ஐ. ஏ. எஸ்.,

வெளியீடு :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

தமிழ்நாடு அரசு.

# பதிப்புரை

தேசிய ஒருமைப்பாட்டை மையமாக வைத்து ''பாரதியாரும் புதிய சமுதாயமும்'' என்ற தலைப்பின் கீழ், இலக்கியப் பேருரை நிகழ்ச்சியில், ஒரு மணி நேரம் பேச வானொலி நிலையத்தார் அழைத்ததற்கு இணங்க திரு. திரவியம் அவர்கள் நிகழ்த்திய உரை இது. எழுதி வைத்துப் படிக்காமல், நேரடியாக ஒரு மணி நேரம் பேச ஏற்பாடு செய்யும் ஒரு புதிய முயற்சியை, அண்மைக் காலமாக வானொலி நிலையம் மேற்கொண்டுள்ளது. அந் நிகழ்ச்சியில் பேசப்பட்ட பேச்சின் ஒலிப்பதிவிலிருந்து தயாரிக்கப்பட்டு, இந்நூல் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

குறிப்பிட்ட தலைப்பையொட்டி பேசப்பட்ட பேச்சு ஆதலாலும், ஒரு மணி நேரத்திற்குள் பேச வேண்டிய பேச்சு ஆதலாலும், பாரதியார் கவிதையின் மற்ற பல அம்சங்கள் இப்பேச்சில் இடம் பெறவில்லை. இப்பேச்சு இளம் தலைமுறையினருக்கும்,

பொது மக்களுக்கும் பயன்படும் என்ற நம்பிக்கையில் வானொலி நிலையத்தாரின் அனுமதியைப் பெற்று, நூல் வடிவில் வெளியிடப் படுகிறது. அனுமதியளித்த வானொலி நிலையத் தாருக்கு எங்கள் நன்றி.

திரு. திரவியம் அவர்கள் தமிழக அரசில் வருவாய்த்துறை உறுப்பினராகவும், உணவுத் துறைச் செயலாளராகவும் பணியாற்றிவரும் ஐ. ஏ. எஸ். அதிகாரி. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்று பாரதப் பிரதமரின் தாமரைப் பத்திரம் பெற்றவர். 'தேசியம் வளர்த்த தமிழ்' என்ற நூலின் ஆசிரியர். 'டாக்டர் இராதா கிருஷ்ணன் பேருரைகள்', மீராபென் எழுதிய 'ஆன்மாவின் யாத்திரை' உள்பட பல ஆங்கில நூல்களைத் தமிழிலும், ஜெயகாந்தன் கதைகளைத் தமிழிலிருந்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தவர்.

"பாரதியாரும் புதிய சமுதாயமும்"—என்ற இந்நூல், 'தமிழரசு' 16-9-1976 இதழுடன் இலவச இணைப்பாக வழங்கப் பெறுகிறது.

இயக்குநர்,

சென்னை-600 009 செய்தி—மக்கள் தொடர்புத்துறை,

11—9—1976 தமிழ்நாடு அரசு.

# மக்கள் மனச்சான்றுக்குக் குரல் கொடுத்த மாபெருங்கவி !

'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' என்று கவிக் குயில் தேசிக விநாயகம் பிள்ளை பாரதியாருக்கு மனமுவந்து அஞ்சலி செலுத்தி உள்ளார்கள். இசையும் இனிமையும் நிறைந்த பாட்டுக்களை இயற்றியவர் மட்டுமல்ல, பாரதி யார்; தேசீய உணர்வும், தேசீய எழுச்சியும் கொந்தளிக் கும் பாட்டுக்களை, நாட்டில் கிளர்ச்சிக்கு மட்டுமல்ல, வளர்ச்சிக்கும் ஏற்றதொரு திட்டத்தைத் தருகின்ற பாட்டுக்களை, பாடிய பாரதியாரை, 'பாட்டுக்கொரு புலவன்' என்று கூறுவது மட்டுமல்ல, 'நாட்டுக்கொரு புலவன்' என்று கூறுவதும் பொருந்தும். பாரதியாரின் பாட்டைக் கேட்டு 'கிறுகிறுத்து போனேனடா' என்று தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் தொடர்ந்து பாடுகின் றார்கள். கேட்டுக் கிறுகிறுத்து, களிப்புற்று, களிப்பிலே திளைத்து, மனத்தைப் பறி கொடுத்து, மகிழ்ச்சியிலே நிறைவு கண்ட காலம் இருந்தது. ஆனால் இன்று கிறு கிறுப்பது மட்டும் போதாது. அவருடைய பாட்டுக் களின் செயல் திட்டத்தை உணர்ந்து, அச்செய்தியை அறிந்து, அவர் அறிவுறுத்தியதை ஏற்று, அவர் வலி யுறுத்தியதை நாம் செயல்படுத்த, திடமான துணிவும், தெளிவான சிந்தையும் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியிருப்பதால், பாரதியாரின் பாட்டைக் கேட்டு கிறுகிறுத்துப் போனேனடா என்று சொல்வதை விட பாரதியாரின் பாட்டைக் கேட்டு விறுவிறுப்பு கொண் டேன் என்று சொல்லி, செயலிலே முனைந்து, முயற்சியை மேற்கொண்டு, நாட்டின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது இன்றைய கடமையாகிவிட்டது. 'கோடானு கோடி

மக்களின் போர் வீரன் நான்' என்று துருக்கி நாட்டுக் கவிஞன் ஒருவன் கூறியதாக வரலாறு உண்டு. அடிமைச் சகதியிலே புழுக்கள் போல் நெளிந்து கொண்டிருந்த பாரத நாட்டு மக்களின், கோடானு கோடி மக்களின், போர் வீரனக, புரட்சிக் கவிஞனுக, புதிய உலகம் காண வேண்டும் என்ற வேட்கைக்குக் குரல் கொடுத்தவனுக பாரதியார் விளங்கினுர். மக்களின் மனசாட்சிக்குக் குரல் கொடுத்த முதல் கவிஞர் பாரதி என்று கூறினுல் அது மிகையாகாது.

அது வரையிலே சங்க கால இலக்கியத்தில், அகம், புறம் என்று ஆன்றோர் பாடினபோதும், வாழ்க்கையிலே வீரம், காதல் என்ற இரு நிகழ்ச்சிகளைத் தலையாகவைத்து அந்த மூலங்களை ஒட்டி, பல உணர்ச்சி வலைகளைப் பின்னி அக்கவிகள் படைக்கப்பட்டன. அதற்குப் பின்பு பக்திப் பரவசத்திலே மனத்தைப் பறிகொடுத்து, ஆண்டவனிடம் நம்மை அர்ப்பணிக்கின்ற முறையிலே பக்திக் கவிதைகள் இயற்றப்பட்டன. பாரதியாரின் கவிதைகளில் நாம் காண்பது, தெய்வங்களைத் தான் தனக்காகத் துதிப்பது அல்ல; ஆண்டவனையும், இறைவனையும் தான் தனியாக வேண்டிக் கொள்வது அல்ல; தன்னுடைய ஆன்மா விடுதலை பெறுவதற்கு அவர்களை இறைஞ்சுவது மட்டுமல்ல; நாடு வளம் பெற வேண்டும், விடுதலை பெற வேண்டும், வளர்ச்சியுற வேண்டும், இந்த உலகிலேயே மக்கள் இன்பம் காணவேண்டும், விடுதலையை இந்தப் பிறவியிலேயே காண வேண்டும், இதற்காக உழைப்பதற்கு உடல் வலிமையும் உள்ளத்திண்மையையும் தர வேண்டும் என்று பாரதியார் பரமனிடம் வேண்டுகின்ற தோத்திர பாடல்களாகத் தான் அவை அமைகின்றன.

## துதித்ததும் தேசத்திற்காகவே :

பாரதியார் முதலில் தேச பக்தராக இருந்தார், பின்பு கவியாக மலர்ந்தார், இறுதியில் வேதாந்தியாகப் பழுத்தார் என்று, இலக்கியத்திலும், அரசியலிலும் தமது

இணையற்ற முத்திரையை விட்டுச் சென்ற தலைவர் ஒருவர் கூறியுள்ளார். அவரை வேதாந்தக் கூட்டிலே அடைத்து விட வேண்டாம், அவர் வெறும் வேதாந்தக் கனவுகளை கண்டவர் மட்டுமல்ல, தத்துவ சித்தாந்தங்களில் சஞ் சரித்துக் கொண்டிருந்தவர் மட்டுமல்ல; அவருடைய தத்துவ விளக்கமும், ஞானமும், திடமான செயலுக்கும் தேச முன்னேற்றத் திட்டங்களுக்கும், எழுச்சியும், புரட்சியும் கொண்ட எண்ணங்களுக்கும் வழி வகுத்தன என்ற காரணத்தினுல் அவர் வேதாந்தக் கவி என்பதை விட அவர் தேச பக்தக் கவிஞர்தான் என்று வ. ரா. போன்ற அறிஞர்கள் கூறியுள்ளார்கள். இந்த இலக்கிய சர்ச்சையிலே நாம் ஈடுபடத் தேவையில்லை. அவர் நாட்டுப் பாடல்கள் 57 தான் பாடினர், தோத்திரப் பாடல்கள் 66 பாடினர், வேதாந்தப் பாடல்கள் 30 பாடினர், இதைத் தவிர கண்ணன் பாட்டு, என்றெல் லாம் கணக்குப் போட்டு, அவரைக் கடவுளிடம் சேர்ப்ப தற்குப் பதிலாக, அவர் கடவுளிடம் சேர்ந்ததே, அவர் கடவுளிடம் முறையிட்டதே, அவர் கடவுளிடம் வேண்டி யதே, இந்த நாட்டுப் பாமர மக்கள் இன்புற்று, இந்த உலகத்திலேயே, இந்த வாழ்விலேயே, இன்பம் காண வேண்டும், அதற்காக நாம் உழைக்க வேண்டும், அதற் காக என் கவிதையைக் காணிக்கையாக்க வேண்டும்— மகேசுவரனுக்கு மட்டுமல்ல, மக்களுக்கும், என்று அவர் வேண்டியதுதான் நமக்கு முக்கியம். நமக்குத் தொழில் கவிதை, அக்கவிதையை உன் பீடத்திலே காணிக்கை யாக்குகின்றேன் என்று அவர் கூறவில்லை, கடவுளிடம். 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்று தான் அவர் தமக்கு ஒரு இலக்கணம் வகுத்துக் கொண்டார். அந்த முறையிலே புரட்சி உணர்வும், புலமை அறிவும், இலட் சிய வேகமும், இசை வளமும் ஒருங்கு திரண்டு ஒன்று கலந்த பாக்களை வார்த்துப் படைத்த பாரதியார் அவர்கள், நாட்டின் விடுதலைப் போர் வீரராக மட்டு மல்ல, நாட்டு மக்களின் மனச்சான்ருகவே அவர் காலத் திலே வாழ்ந்தார் என்பதுதான் பெருமிதத்திற்கு உரியது.

அவர் காலத்தில் அவருடன் இருந்த மற்ற புலவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை, அவரைப் பாராட்டி அவர் பெருமையை உணர்ந்து விமர்சனம் செய்யவில்லை என்பது இப்பொழுது நமக்கு வருத்தத்தையும், வேதனையையும் தரலாம். மகாமகோபாத்தியாய டாக்டர் சுவாமிநாத ஐயர் அவர்கள் எழுதி வைத்துள்ள பல குறிப்புகளில் பாரதியாரரைப் பற்றி ஒரு வரியைக் கூட காணோம். மறைமலை அடிகளார் எழுதி வைத்த செந்தமிழ்க் குறிப்புகள் பலவற்றில் பாரதியாரைப் பற்றி ஒருபுள்ளி விவரம் கூட காணோம். இவ்வாறு பெருந்தமிழ்ப் புலவர்களாலும், இலக்கிய வல்லுநர்களாலும் புறக்கணிக்கப்பட்ட பாரதியார், அதே சமயத்தில், வ. உ. சியால், சுப்ரமணிய சிவாவால், அரவிந்தகோஷ் அவர்களால் பாராட்டப் பெற்று, தம்முடைய இலக்கிய படைப்பிலும், தம்முடைய சுதந்திர போராட்ட முயற்சிகளிலும், அவர்களுடைய ஆதரவைப் பெற்று, இடைவிடாது இலக்கியப் பணியை ஆற்றி வந்தார் என்பதை நாம் இப்பொழுது காணும்பொழுது, பாரதியார் புறக்கணிப்புக்கு வருந்துவதா? அல்லது பாரதியாருக்குப் பக்கபலமாக இருந்த பெரியோர்களை வாழ்த்துவதா? என்பது நமக்கு விளங்கவில்லை.

## அன்று பாடியது இன்றும் பொருந்தும் :

1904-ஆம் ஆண்டில் முதல் கவிதை எழுதத் தொடங்கிய பாரதியார் 1921-ஆம் ஆண்டில் நம்மிடம் இருந்து பிரிக்கப்பட்டு விட்டார். இப்பதினேழு ஆண்டுகளில் அவருடைய படைப்புகள் தான் எத்தனை? எத்தனை? அப்படைப்புகளில்தான் எத்தனை வலிமை? எத்தனை வேகம்? எ்த்தனை ஒளி? எத்தனை தெளிவு? அப்படைப்புகளிலே, மக்களின் உயிர்த்துடிப்பு, விடுதலை வேகம், உயர்ந்த வாழ்வு காண வேண்டும், உண்மையான வாழ்வு காண வேண்டும், உள்ளன்புடன் வாழ வேண்டும் என்று அவர்களுக்கு இருந்த ஆராத் துடிப்பு, ஆத்ம வேகம், ஆசை,

அத்தனையும் அப்பாடல்களிலே பொதிந்து கிடப்பதை நாம் காணும்போது இன்றும் பரவசம் அடைகின்றோம்.

பாரதியார் அவர்கள் பாடல்கள் சுதந்திர இயக்கத்திற்கு வேகம் கொடுத்தன, வலியூட்டின, அதனால் நாட்டில் விடுதலை கிடைத்த பின்பு அப்பாடல்களின் முக்கியத்துவம் மறைந்து போகும் என்று கூறுகின்ற இலக்கிய விமர்சகர் கூட்டம் ஒன்று உண்டு. ஆனால் பாரதியார் கண்ட விடுதலை, அந்நிய ஆதிக்கத்திலிருந்து நாம் பெறும் விடுதலை மட்டுமல்ல, எல்லாவித ஆதிக்கங்களிலும் இருந்து நாம் பெறும் விடுதலை; மக்கள் அனைவரும் மன்னர்களாகும் வரையிலே அந்த விடுதலை உணர்வுக்கு, அந்த விடுதலை எழுச்சிக்கு இடம் உண்டு, தேவை உண்டு, பொறுப்பு உண்டு, கடமை உண்டு என்பதை உணர்த்துகின்ற பாடல்கள் அவை.

அந்த முறையிலே இன்று பாரதியாரின் கவிதைகளை நாம் பாடும்போது அவர் கண்ட விடுதலையை நாம் கண்டு விட்டோமா, நாம் பூரணமாகப் பெற்று விட்டோமா என்ற ஐயப்பாடு நமக்கு எழுவது இயல்புதான். அவர் கண்ட விடுதலை அந்நிய ஆதிக்கத்திலிருந்து பெறும் அரசியல் விடுதலை மட்டுமல்ல, வறுமையிலிருந்து, பிணியிலிருந்து, பொல்லாமையிலிருந்து, சமூக விரோதச் செயல்களிலிருந்து, எல்லாவிதமான ஆதிக்கத்திலிருந்து, செல்வமும், செல்வாக்கும் பெற்றவர்கள் செய்கின்ற சுரண்டலிலிருந்து, இதிலெல்லாம் இருந்து தனிமனிதன் பெறும் விடுதலை. மூட நம்பிக்கையிலிருந்து, பொருளற்ற சடங்குகளிலிருந்து, பொருத்தமற்ற சாத்திரங்களிலிருந்து, சமுதாயம் விடுதலை பெற வேண்டும்; சமய வேறுபாடுகளிலிருந்து, மொழி வேறுபாடுகளிலிருந்து மூளுகின்ற விரோதங்கள், குரோதங்கள், மனமாச்சரியங்கள், இவற்றிலிருந்து விடுதலை பெற வேண்டும், என்று அவர் நாடினார்; அவர் பாடினார். அந்த நாட்டத்திற்கு ஏற்ப இன்று நாம் விடுதலை எய்தி விட்டோமா என்று எண்ணிப் பார்க்கும் பொழுது வாட்டம் நமக்கு பிறக்கத்தான் செய்

கிறது. அதே சமயத்தில் இன்று நாம் பின்பற்றி வரும் இலட்சியப் பாதையில், நாம் முன்னேற்றத்திற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகள், நாம் செய்து வரும் சாதனைகள் இவற்றை எல்லாம் நாம் காணும்போது, நமக்கு உறுதியும், ஊட்டமும் உண்டாகின்றன.

## ஒருமைப்பாட்டுக்கு உருவம் கொடுத்தவர்:

பாரதியாரின் கவிதைகள் இன்று நமக்கு உணர்த்துகின்ற முக்கிய படிப்பினை என்ன, தலையாய செய்தி என்ன என்று நாம் ஆராய்ந்து பார்த்தால், அது நாட்டின் ஒருமைப்பாடே. அன்றே அவர் வற்புறுத்தி வலியுறுத்தியதை, அன்றே அறிவுறுத்தியதை, இன்று நாம் சொல்லிலும், செயலிலும், சிந்தையிலும், நம்முடைய திட்டங்களிலும், பொது வாழ்விலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமூக இயல்களிலும், கலாச்சார எழுச்சிகளிலும், நிகழ்ச்சிகளிலும், போற்ற வேண்டும்; அந்த ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க வேண்டும், பாராட்ட வேண்டும், பலப்படுத்த வேண்டும், வளமாக்க வேண்டும், உண்மையானதாக்க வேண்டும், உயிருள்ளதாக்க வேண்டும் என்பதுதான் பாரதியாரின் பாடல்கள் இன்று நமக்குத் தரும் படிப்பினை.

நாட்டுக்கு என்ன நேரிட்டாலும் அது நாட்டு மக்களின் ஒரு பகுதியினருக்கு மட்டும் நேரிட்டதல்ல; நாட்டு மக்களின் அடித்தளத்திலிருந்து அரண்மனைகளில் வாழ்கின்ற மக்கள் வரையில் அனைவருக்கும், நாட்டுக்கு ஏற்படுகின்ற ஒரே கதிதான் ஏற்படும்; நாட்டிற்கு ஏற்படும் நல்லதிலும், கெட்டதிலும் இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும், குடிமக்கள் அனைவருக்கும் பங்கு இருக்க வேண்டும், பங்கு உண்டு, என்பதை அவர் வலியுறுத்தினார்.

'எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்
யாவர்க்கும் அந்தநிலை பொது வாகும்

முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்

முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்'

அன்று அவர் கூறியதில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முப்பது கோடி என்பது மாறி விட்டிருக்கலாம்; பொருளற்றதாகவோ, பொருத்தமற்றதாகவோ ஆகிவிட்டிருக்கலாம்; ஆனால், வாழ்ந்தால் அத்தனை கோடியும் வாழ்வோம்; வீழ்ந்தால் அத்தனை கோடி முழுமையும் வீழ்வோம் என்ற உணர்வு, நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்படுவது, நாட்டின் நலனுக்கு இன்றியமையாத ஓர் ஊக்க சக்தியாகும். இந்த நாடு என்பது ஒரு பூகோளப் பாகுபாடு அல்ல, ஓர் அரசியல் நிலையல்ல, இந்த நாடு என்பது கோடானு கோடி மக்களின் உயிர்நிலையிலிருந்து பிறக்கின்ற உண்மை, வரலாற்றிலிருந்து, கலாச்சாரத்திலிருந்து, பாரம்பரியத்திலிருந்து, பொருளாதார வளத்திலிருந்து ஆதாரம் கண்டு வலுப்பெற்று வளம் பெறுகின்கின்ற ஓர் உண்மை, இந்த நாட்டின் ஒருமைப்பாடு என்பது, அவருடைய பாடல்கள் பலவற்றிலே பரந்து கிடக்க நாம் காணலாம்.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'

என்ற அவர் சூத்திரம், நமக்குத் தாரக மந்திரமாக விளங்குவது. இந்த நாடு என்பது என்ன? இந்த நாடு என்பது இந்தியன் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் உதிக்கின்ற பெருமித உணர்வு, எழுகின்ற இலட்சிய வேகம், ஏற்படும் எக்காள உணர்வு. இந்த நாட்டிலே நான் வாழ்ந்தேன், இந்த நாட்டின் பாரம்பரியம் எனக்கு உரியது, இந்த நாட்டின் வரலாறு எனக்குச் சொந்தமானது, இந்த நாட்டின் பண்டைக் காலமும், தொன்மையும், தொன்று தொட்டு அவர்கள் கண்டு வந்த மாட்சியும் எனக்குச் சொந்தமானவை, இந்த நாட்டின் நிகழ் காலத்தினை உருவாக்குவதில் நான் பங்கு கொள்கிறேன், இந்த நாட்டின் எதிர் காலத்தில் எனக்கு உரிமை உண்டு,

என்று முக்காலத்தையும் தன்னுடைய சிந்தையாலும், செயலாலும் தன்னுடைய திட்டத்தாலும் கட்டித் தழுவுகின்ற உணர்வு ஒவ்வோர் இந்தியனுக்கும் ஏற்படுவதுதான், நாட்டின் ஒருமைப்பாட்டின் அடிப்படை.

## நாட்டுக்கு எல்லை;

## பாட்டிலே எல்லையற்ற நாட்டுப் பற்று :

அந்த உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாட்டிற்கு ஆதாரமாக ஒரு நாட்டிற்கு எல்லை வேண்டாமா? இந்திய நாட்டின் எல்லைகளை, பாரதியார் சந்தம் துள்ளுகின்ற நடையிலே சொல்லுகின்றார், சித்தரிக்கின்றார். நாட்டின் பெயரென்ன?

**'பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்—மிடிப்**
**பயங் கொல்லுவார், துயர்ப்பகை வெல்லுவார்'...**

இந்த நாட்டின் பெயர், இந்த நாட்டின் பண்டைக் காலப் பெயர், இந்த நாட்டின் அரசியல் சாசனம் இட்ட பெயர், இந்த நாட்டின் பெயரென்று உலகெங்கும் ஏற்றப்பட்டு போற்றப்பட்டு வருகின்ற பெயர்,—'பாரத தேசம்'. அந்தப் பாரத தேசத்திற்கு வடக்கே வெள்ளிப் பனிமலை ஓர் எல்லை. தெற்கே 'நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் நித்தம் தவஞ் செய்யும் குமரி' எல்லை.

வடக்கிலே இமயத்திற்கும், தெற்கிலே குமரி எல்லைக்கும் நடுவிலே இருப்பது, பரந்து கிடந்த, பழம் பெருமை மிக்க, எழுச்சி கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பரவசம் கொண்டு நாட்டு நலனுக்காக உழைத்து உருவாக்குகின்ற அந்த நாடு, பாரத நாடு.

**'மன்னும் இமயமலை எங்கள் மலையே,**
**மாநில மீதிது போற் பிறிதிலையே**

இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே,
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே ?'

என்று கூறுகின்ருர்.

'பொன்ஞெளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே'

என்று பெருமிதம் கொள்கிருர். இவ்வாறு பொன்ஞெளிர் பாரத நாட்டுக்கு எல்லை வகுத்து எல்லையற்ற நாட்டுப் பற்றை அவர் ஊட்டுகின்ருர்.

## பொதுவான பாரம்பரியப் பெருமை :

இந்த எல்லைக்குள் அடங்கியது பாரத நாடு; எல்லை மட்டும் தான் நமக்குச் சொந்தமா? ஒரே பாரம்பரியம், ஒரு பொதுவான பாரம்பரியம், இந்த நாட்டுக்குச் சொந்தம். அந்தப் பொதுவான பாரம்பரியம் என்று, எவ்வாறு, உருவாகியது? நேற்று உருவானது அல்ல; இன்று உருவாகிக் கொண்டிருப்பதல்ல; ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக உருவான பாரம்பரியம். யாரால் உருவான பாரம்பரியம்?

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்து'— இந்நாட்டில் உருவாக்கிய பாரம்பரியம். முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்து உருவாக்கியது. அவர் வாழ்ந்தது மட்டுமா, அவர் வாழ்வின் பலன்களையும், அவர் வாழ்விலே கண்ட சிந்தனைகளின் பலன்களையும், அவர்கள் சிந்தனைக்கு ஆதரவாக, அரணுக இருந்த செயல்களின் பலன்களையும், நாம் இப்பொழுது வரலாற்றுப் பூர்வமாக அனுபவித்து வருகின்ருேம்.

'சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும் இந்நாடே'. இவ்வாறு சந்ததி சந்ததியாக, பரம்பரை பரம்பரையாக, முதிர்ந்த அறிவு பெற்று, ஆழ்ந்த அன்பு கொண்ட அணையாத அறவாழ்க்கையை ஒரு நெறியாகப்

பின்பற்றி வந்த எங்கள் முன்னோர்கள் வாழ்ந்து வலு ஊட்டி வளப்படுத்திய நாடு இந்த பாரத நாடு. முன்னோர்கள் என்றால் பெண்கள் மட்டும் அவர்களுக்கு உரிய பங்கையும், பொறுப்பையும் ஆற்றவில்லையா? பொது வாழ்வை ஆண்கள் உருவாக்கினார்கள்; அந்தப் பொது வாழ்வுக்கு ஆதாரமான இல்வாழ்க்கையை உருவாக்கி, மங்கையர்கள் இந்நாட்டை வளர்த்தார்கள். மங்கையர்கள் முயற்சி இவ்வாறு வீட்டிலும், நாட்டிலும், பெருமையும், நிறைவும் பொங்க, ஆணும் பெண்ணும் சேர்ந்து பாடுபட்டு, ,அன்பு வழி நின்று, அறவழி சென்று ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டு; வீட்டையும் நாட்டையும் காத்து உருவாக்கிய பாரம்பரியம் உங்களுக்குச் சொந்தம், எனக்குச் சொந்தம். அந்தப் பாரம்பரியம் நம் அனைவருக்கும் சொந்தமானதால்தான் நாட்டின் ஒருமைப்பாடு என்பது ஒரு கோஷம் மட்டுமல்ல, ஒரு சூத்திரம் மட்டுமல்ல, ஒரு சுலோகம் மட்டுமல்ல, அது நம் வாழ்வின் உயிர் மூச்சாகி விடுகிறது.

நம் நாடு வீரர்களுக்குப் பேர் போனது. இந்த நாடு ஆன்ம வீரர்களுக்கும், அறவீரர்களுக்கும், முனிவர்களுக்கும் பேர் போன நாடு,

> **"மாரத வீரர் மலிந்த நன்னாடு**
> **மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு......**
> **நல்லன யாவையும் நாடுறு நாடு"**

என்பதில்தான் எவ்வளவு நயம்? நாகரிகத்தின் முழுப் பொலிவும், செறிவும் அந்த சொற்களிலே அடங்கி இருக்கின்றன. காலச் சூழ்நிலையை மீறி, காலத்தால் கட்டுண்டு இராமல்-கூட, காலத்தை எதிர் நோக்கிக் கூட நாங்கள் நல்லன யாவையும் நாடுவோம். எய்துவது மட்டுமல்ல; நாங்கள் நாடுவோம். நல்லன அல்லன எவையும் நாடோம். அவ்வாறு நல்லன யாவையும் நாடின காரணத்தால்தான் எங்கள் நாட்டிலே பூரண

ஞானம் பொலிந்தது. எங்கள் நாட்டிலே புத்தர்பிரான் அருள் பொங்கியது. இந்தப் பாரம்பரியத்திற்கு நாம் அனைவரும் வாரிசுகள். இதுதான் நம்முடைய அழியாத, அணையாத, மாறாத, தேயாத, மாசுறாத, மங்காத ஆஸ்தி. அதைத்தான் பாரதியார் கூறுகிறார்.

"ஒன்று பரம்பொருள். நாம் அதன் மக்கள்
உலகின் பக்கேணி என்றே மிக
நன்று பல்வேதம் வரைந் தகை
பாரத நாயகி தன்திருக்கை".

ஆன்மீகப் பாரம்பரியம், அறிவுப் பாரம்பரியம், இலக்கியப் பாரம்பரியம், பொருளாதாரப் பாரம்பரியம்—இவ்வாறு பொதுவான ஒரு பாரம்பரியம் எல்லாத் துறைகளிலும் உருவான காரணத்தினால் தான், நாட்டின் ஒருமைப்பாடு நம் அனைவரையும் ஈர்க்கும் ஒரு சக்தியாக உருவாகி உள்ளது.

"நாவினில் வேத முடையவள் கையில்
நலந் திகழ் வாளுடையாள் தனை
மேவினர்க்கின்னருள் செய்பவள் தீயரை
வீட்டிடும் தோளுடையாள்"

வலிமையும் உண்டு, வளமும் உண்டு; அன்பும் அறனும் உண்டு; தெளிவும் பரிவும் உண்டு; அந்தப் பரிவு, பலம் கலந்த பரிவு; மெத்தனம் கலந்த பரிவல்ல; தளர்ச்சியின் விளைவால் ஏற்பட்ட பரிவு அல்ல; பலம் நிறைந்த பரிவு. பரிவும், பலமும், பண்பும் அறமும் சேர்ந்து உருவான இப்பாரம்பரியத்தின் மூலமூர்த்தியாக விளங்குகின்ற பாரத தேவியைப் பாரதியார் வணங்குகின்றார்.

"அறுபது கோடி தடக்கைகளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்"

## வளமும் வரலாறும் எங்களுக்குப் பொதுவே :

இந்தப் பொது பாரம்பரியத்தைக் கண்டு பெருமிதம் கொண்டோம். வரலாறும் ஒன்று தான் என்று பாரதி உணர்த்துகின்றார். இந்த நாட்டின் வரலாறு பொது வானதுதான்; அதைக் காட்டுவதற்கு வரலாற்று ஏடு களுக்குப் போகின்றார். சிவாஜியின் சாகசச் செயல் களைச் சொல்லுகின்றார். சகுந்தலை பெற்றதோர் பிள்ளை, சிங்கத்தினைத் தட்டி விளையாடியதை, வீரத்திற்கு இலக்காக எடுத்துக் காட்டுகிறார். பார்த ராணி ஒளியுறப் பெற்ற பிள்ளை என்று பாரத பீடத்திலே அந்தப் பெருமையைக் கொண்டு வந்து செலுத்துகின்றார். காண்டீபம் ஏந்தி உலகினை வென்றது எந்தத் தோள்?

> "முன்னை இலங்கை அரக்கர் அழிய
> முடித்த வில் யாருடை வில்?"

> "மிதிலை எரிந்திட வேதப் பொருளை
> வினவும், ஜனகன் மதி"

யாருடைய மதி? காளிதாசன் கவிதை யாருக்குச் சொந் தம்? கீதையின் பாதை யாருக்குச் சொந்தம்? பரதனின் வீரம் யாருக்குச் சொந்தம்? இந்த பாரத சாரமே யாருக்குச் சொந்தம்?" என்று அவர் கேட்டு நம் அனை வருக்கும் சொந்தம் என்று சொல்லி அந்த வரலாறு நம்மைப் பிணைக்கின்றது, நம்மை இணைக்கின்றது என்று உணர்த்துகிறார்.

ஒரே பாரம்பரியம்; ஒரே வரலாறு; ஏன்? ஒரே இலக்கியம், கலை கலாச்சாரம்; 'பன்னரும் உபநிட நூல் எங்கள் நூலே, பார்மிசை ஏது ஒரு நூல் இதுபோல' என்று கேட்டு, உபநிடதத்தில் உள்ளடக்கமான உயர்வை இந்த நாட்டின் பொதுச் சொத்தாகப் படைக் கின்றார்.

"போர்க்களத்தே பரஞான மெய்க்கீதை
புகன்றது தெவருடை வாய் ?
பகை தீர்க்கத் திறந்தரு பேரினள்
பாரத தேவி மலர்த் திருவாய்"

என்று கூறுகின்ருர். சேரன் தம்பி இசைத்த சிலப்பதிகாரம், தெய்வ வள்ளுவஞர் இயற்றிய திருக்குறள், கம்பன் இயற்றிய காப்பியம் கம்பராமாயணம், துளசிதாசர் இராமாயணம், உபநிடதங்கள், இதுபோல் மறைகள் முதற்கொண்டு மக்கள் நெறி காட்டிய நூல்கள் வரை, வளர்ந்து மலர்ந்துள்ள இலக்கிய படைப்புகள் அத்தனையும் கலைப் படைப்புகள், அத்தனையும் நாட்டின் சொத்துக்கள். சுந்தரத் தெலுங்கிலே பாடுகின்ற கீதங்கள், சிந்து நதிக்கரையிலே பெண்கள் ஆடுகின்ற களியாட்டங்கள், கேரளத்து நல்நங்கைகள் களிப்பிலே திளேக்கின்ற கூத்துக்கள் இவையெல்லாம் ஒரே கலையின் பலவிதத் தோற்றங்கள், ஒரே கலை மூலத்தின் பல்வித வெளிப்பாடுகள். கலை, இலக்கியம், கலாச்சாரம், மூன்றும், தமிழ், இந்திய நாடெங்கினும் வளர்ந்து, மலர்ந்து, நாட்டை மலர் பந்தங்களால், இனிய பந்தங்களால் இணைப்பதை அவர் பாடுகின்ருர். இந்த நாட்டிலே பலவித மொழிகள் உண்டு, பல்வேறு கலைகள் உண்டு, பல்வேறு தோற்றங்கள் உண்டு, பல்வேறு நெறிமுறைகள் உண்டு, பல்வேறு சமூக இயல்கள் உண்டு; ஆயினும் அத்தனையிலும், சாகுந்தலம் முதல் கொண்டு சிலப்பதிகாரம் வரையில், ஓடுகின்ற ஒற்றுமை இழை, ஒரே கலாச்சாரத்தில் உருவான படைப்புகள் என்ற இழை. அதை உணர்ந்து அந்தப் பெருமையைப் போற்றுங்கள் என்று பாரதியார் விளக்கின்ருர்.

" முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்—இவள்
செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள் "

மொழிகள் எத்தனையாக இருந்தால் என்ன? அவர் மொழிகள் பதினெட்டுடையாள் என்று பாடிப்போன பின்பு பல்நூற்றுக்கணக்கான மொழிகள் வளர்ந்தால் கூட, சிந்தனை ஒன்று உடையாள் என்ற ஒரு சிறப்பு, ஓர் உறுதி, ஒரு தூய்மை நிலை, ஓர் ஒற்றுமை, நம்முடைய நாட்டிலே வலுப்பெற்று, பந்தமும், பாசமும் நம்முடைய நாட்டிலே வலுப்பெற்று, உருவானால், இந்த நாட்டின் இலக்கியம், கலை, கலாச்சாரம் அத்தனையும் ஓதுகின்ற ஒரே தாரக மந்திரம் நாட்டின் ஒருமைப்பாடு என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

பாரம்பரியத்தைக் கண்டோம்; வரலாற்றைக் கண் டோம்; இலக்கியம், கலை கலாச்சாரத்தைக் கண்டோம்: இவையெல்லாம் மக்களுக்கு உணவு போட்டு விடுமா? நாட்டிற்கு வளம் வேண்டாமா? பொருளாதார நிலை யிலும் இந்த நாடு ஒன்றே.

**“கன்னலும் தேனும் கனியும் இன்பாலும்**
**கதலியும், செந்நெல்லும் நல்கும் எக்காலும்”**

கேரளத்திலே விளையாவிடினும் தஞ்சையிலே விளைகின்ற செந்நெல்லை தாராளமாக கேரளத்திற்குக் கொடுப் போம். பாஞ்சாலத்தில் விளைகின்ற கோதுமையைப் பரிவுடனே தமிழ்நாடு ஏற்று பயன்படுத்தும். இந்த முறையிலே இந்த நாட்டின் வளம் அனைத்தும் நாட்டிற் குப் பொதுவானது.

**“இனிய பொழில்கள், நெடிய வயல்கள்**
**என்ன ரும்பெரு நாடு**
**கனியும் கிழங்கும் தானியங்களும்**
**கணக்கின்றித் தரும் நாடு—இது**
**கணக்கின்றித் தரும் நாடு”**

என்றும்

"நித்தம் நித்தம் கணக்கின்றித் தரும் நாடு"

என்றும் வலியுறுத்தி, பொதுவான பொருளாதார வளம் இந்த நாட்டிற்கு உரியது என்று வலியுறுத்தினர்.

## கோலமிக்க கொடியின்கீழ் கூடினர் வீரர்

இவ்வாறு எல்லே, பாரம்பரியம், வரலாறு, இலக்கியம், வளம் அனைத்தாலும் ஒன்றுபட்ட இந்த நாட்டுக்குப் பொதுக் கொடி ஒன்று உண்டு. அந்த ஒருமைப்பாட்டின் சின்னமாக, உயிருள்ள சின்னமாக ஒரு கொடி!

"தாயின் மணிக்கொடி, பாரீர்! அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!..."

புகழ்கிறோம்; ஆனல் பணிவதில்லே. பணிவோம்; பாவனே செய்வோம்; ஆனல் தாழ்வதில்லே. மனத்தைத் தாழ்த்துங்கள், இதயத்தைத் தாழ்த்துங்கள், பணிந்து புகழ்ந்திட வாரீர். சொல்லால் புகழ்ச்சியல்ல; வஞ்சகப் புகழ்ச்சியல்ல; உயர்வு நவிற்சிப் புகழ்ச்சியல்ல. உண்மையாக உள்ளத்தால் பணிந்து தாயின் ஆணைகளேயும், ஆக்கினைகளேயும், அன்பு உபதேசங்களேயும், நெறிகளேயும் ஏற்று, தாயின் மணிக் கொடிக்குத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் என்று அவர் அழைத்தார். அந்த மணிக் கொடியைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் என்று கவி மன்னன் பாரதி அழைக்கின்றூர். இன்று கொடி பறக்கின்ற நேரத்தில் கூட கொடி வணக்கம் செலுத்தும் வகையும், பக்குவமும் அறியாமல், கொடியை ஏற்றுகின்ற நேரத்திலோ, நாட்டு வாழ்த்து பாடப் படுகின்ற நேரத்திலோ நடமாடிக் கொண்டிருக்கும் 'நாகரிக' மக்களேக் கூட நாம் காணுகின்றோம். ஆனல் அன்றே கொடிக்கு வணக்கம் செலுத்த வேண்டும், தாழ்ந்து செலுத்த வேண்டும், பணிந்து செலுத்த வேண்டும் என்று பாரதியார் அடித்துக் கூறினர்; அறிவுறுத்திக் கூறினர்.

அந்த மணிக் கொடியின் கீழ், அந்தக் கம்பத்தின் கீழ் திரண்டு இருக்கும் கூட்டத்தைக் கண்டு அவர் பரவசம் கொள்கிறுர். செந்தமிழ் நாட்டுப் பொருநரை அங்கு காண்கிறுர், சேரன்தன் வீரரைக் காண்கிறுர். காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டியரைக் காண்கிறுர். தாயின் தொண்டிலே சங்கமமாகிய வங்கத்தினரைக் காண்கிறுர். இவர்களெல்லாம் சேர்ந்து அதைக் காப்பது காணீர் என்று அழைத்தார். வீரத்தில் ஒவ்வொரு தேசீய இனமும் சிறந்து விளங்கிஞல் கூட, அவர்கள் அதைச் சேர்ந்து காத்தால்தான் நாட்டிற்குப் பெருமை, நாட்டுக்கு நலம், என்பதால்

**"சேர்ந்து அதைக் காப்பது காணீர், அவர்**
**சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க !..."**

என்று வாழ்த்திஞர்.

அவர் வீரராய் வாழ்ந்தால் மட்டும் போதாது. அந்த வீரத்திற்கு ஆதாரமாக, அந்த வீரத்திற்கு லட்சிய உந்துதலாக, சிந்தை இருக்க வேண்டும். அறிவு பூர்வமான வீரம், உணர்வு பூர்வமான வீரம், அறிந்து, தெளிவு உற்று துணிவு பெற்று செயலாற்ற வேண்டும் என்ற ஆர்வம் கொண்டு, அந்த ஆர்வத்தின் பலஞக, கனிந்த முயற்சியின் பலஞக, துணிந்த சிந்தையின் பயஞகக் காட்டுகின்ற வீரம், அதைத்தான் அவர் பாடுகின்றுர், போற்றுகிறுர்;

**"கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்—எங்கும்**
**காணரும் வீரர் பெருந் திருக்கூட்டம்!"**

வீரர் பலர் இருக்கலாம். இப்போது அயல் நாடுகளிலே பணத்திற்காக, காசு வாங்கப் போராடுகின்ற கூலிப்பட்டாள வீரர்களே நாம் பார்க்கிறேம். இவர்கள் அந்த மாதிரி வீரர்கள் அல்ல. நம்பக் கூடிய வீரர்கள். இந்த நாடு அவர்களே நம்பலாம். இந்த நாட்டிலே உழைக்

கின்ற பாட்டாளி, பயிர் செய்கின்ற விவசாயி, மங்கல நல்லறமாம் இல்லறம் நடத்துகின்ற மனையாள், மதலையை மொழியாகப் பேசுகின்ற குழந்தைகள், அனைவரும் நம் பற்குரிய வீரர்கள். இந்த நாட்டின் எதிர்காலம், இந்த நாட்டின் பாதுகாப்பு, இந்த நாட்டின் சிறப்பு, அவர்கள் கையிலே ஒப்படைக்கப்பட்டு இருப்பதை அவர்கள் உணர்ந்து, போற்றிப் பாராட்டுகிறார்கள் என்பதால் நம்பற்குரிய வீரர். அவர்கள் எல்லாம் சேர்ந்து வணக்கம் செலுத்துகின்ற அந்த ஒரு கொடி, அந்த ஒரே கொடி தென்றல் காற்றிலே உணர்த்துகின்ற பாடம், விடுக்கின்ற செய்தி, ஒலிக்கின்ற கீதம் எது? நாட்டின் ஒருமைப்பாடு. பொதுக் கொடி உணர்த்துகின்ற பாடம்-பொது முயற்சியில் முனைந்து, பொது உழைப்பிலே நீங்கள் ஈடுபட்டு, இந்த நாட்டின் பலத்தையும், இந்த நாட்டின் சிறப்பையும் உருவாக்க வேண்டுமென்று அழைக்கின்றது அந்தத் தாயின் மணிக்கொடி.

## போரும் பொது; புரட்சியும் பொது :

இந்த அளவு உணர்வு இருந்துங்கூட,—அதைக் காலத்தின் கோலம் என்று சொல்வோமா? அல்லது நெஞ்சு பொறுக்காத நிலையிலே, நாம் நொந்த நிலையிலே இருந்த அவலநிலை என்று கூறுவோமா-அடிமைத் தனையினால் நாம் ஆக்கம் இழந்து, ஆண்மை இழந்து, அரசியல் விடுதலை இழந்து, அறநெறி இழந்து, ஆண்மக்கள் என்று கூறக்கூடிய நிலையையே இழந்து, நாம் எத்தனை காலமாக வாழ்ந்தோம்? அந்த அடிமைத் தனமும் நமக்குப் பொதுவானது. அந்த அடிமைத் தனத்தை அகற்றுவதற்கு நாம் எடுத்த முயற்சியும், நாம் மேற்கொண்ட எழுச்சியும் பொதுவானது. அந்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய நாட்டின் தலைவர்கள், பொதுக் காவலர்கள், அறநெறிச் செம்மல்கள், புரட்சி வீரர்கள், இவர்கள் அனைவரும் இந்த நாட்டு மக்களுக்குப் பொதுவானவர்கள். விடுதலை வந்தபோது நம் அனைவருக்கும்தான் விடுதலை

வந்தது. வேதியருக்கு விடுதலை, எல்லா சாதியருக்கும் விடுதலை! பறையருக்கும் விடுதலை, பாமரர் அனைவர்க்கும் விடுதலை. இந்த நாட்டிலே செல்வனுகப் பிறந்தவனுக்கும் விடுதலை; சகதியிலே உழன்று, குடிசையில் வாழ்ந்து அன்றாடப் பிழைப்பையே ஒரு போராட்டமாக்கி கொண்டிருக்கின்ற ஏழை மக்களுக்கும் விடுதலை; ஆம்; இந்த விடுதலையும் நமக்குப் பொதுவானது.

இவ்வாறு எல்லையில் பொதுவானது கண்டு, வளத்தால் பொதுவானது கண்டு, இலக்கியம் கலை கலாச்சாரத்தால் பொதுமையை வளர்த்து, கொடியின் ஆசி பெற்று, நாம் பின்பற்றிய தலைவர்களால் ஒன்றுகி, நாம் பெற்ற விடுதலையின் பூரிப்பிலே ஒன்றுகி, அந்த விடுதலைக்குப் பின் இந்த நாடு பெறும் எழுச்சியிலும், வளர்ச்சியிலும், நாம் அனைவரும் பங்கு கொள்ள வேண்டிய பொதுவான, புனிதமான பொறுப்பிலே ஒன்றுகி, இத்தனை ஒருமித்த சக்திகளால் வளர்கின்றது இந்த நாட்டின் ஒருமைப்பாடு. இது அரசியல் சாசனத்திஞல் வந்தது மட்டுமல்ல. நம்முடைய இதயத்திலிருந்து உதிக்கின்ற, நம்முடைய உணர்ச்சியிலே இருந்து ஊறுகின்ற, நம்முடைய இரத்தத்திலே கலந்துவிட்ட, இந்த ஒருமைப்பாட்டை நாம் வெளிப்படுத்தி, வலுப்படுத்த திட்டம் தீட்டுவது மட்டுமல்ல: அந்த ஒருமைப்பாட்டை நம்முடைய இழைகளில் இழையாய், நம்முடைய தசைகளின் தசையாய், நம்முடைய மூச்சோடு மூச்சாய், நாம் அதைப் போற்றிப் பாதுகாப்பதால்தான் இந்த நாட்டிற்கு எதிர்காலம் உண்டு. அந்த தேசிய உணர்வைக் கொண்டுதான் பாரதியார் பாடிஞர். அவருடைய தேசியப் பாடல்கள், சுதந்திரப் பாடல்கள் அனைவற்றிலும், அடிமையில் உழன்ற மக்களைக் கூட வீறு கொண்டெழச் செய்த அந்தத் துடிப்பு வந்ததற்கு அந்த தேச பக்திதான் காரணம்.

“தொண்டுபட்டு வாழுமென்றன் தூய பெருநாட்டில்
கொண்டு விட்டங்கு என்னை
உடன் கொன்ருலும் இன்புறுவேன்”

என்று லஜபதிராய் பிரலாபத்தில் அவர் பாடினபொழுது, என்னுடைய சொந்த நாட்டில் போய் நான் செத்தாலும் பரவாயில்லை, அந்தச் சொந்த நாட்டிற்கு நான் செல்ல வேண்டும், எனக்கு உரிமையான நாட்டிலே நான் என் முடிவைப் பெற வேண்டும், அப்போதுதான் நான் என் நிறைவைக் காண்பேன் என்ற அந்தச் சுதந்திர வேகம் உயிரையே பலியாகக் கொடுக்கின்ற அளவுக்கு உறுதி பெற்று விளங்குவதைக் காண்கின்றோம்.

> ''நாலுதிசையும் சுதந்திர நாதம் எழுகவே,
> நரக மொத்த அடிமை வாழ்வு நைந்து கழிகவே
> ஏலுமனிதர் அறிவை அடக்கும் இருள் அழிகவே,
> எந்த நாளும் உலகமீதில் அச்சம் ஒழிகவே ''

அந்த அடிமைத்தனம், அடிமைத் தளைகள் நீங்கினால், அரசியல் விடுதலை மட்டுமல்ல, ஆன்மீக விடுதலை மட்டு மல்ல, ஆண்மையின் மலர்ச்சி, அறத்தின் வளர்ச்சி, அன் பின் எழுச்சி, இவையெல்லாம் இந்த விடுதலையின் பலன் களாக, பரிசுகளாக நமக்குக் கிட்டுமென்று பாரதியார் அன்றே கனவு கண்டார்.

## அடிமையாய் வாழ்வோர் அணிபூட்டிய பிணங்கள் :

அந்த சுதந்திர தேவியைப் பாராட்டாமல், போற்றாமல், அவருக்குத் தாழ்ந்து, பணிந்து வணக்கம் செலுத்தாமல், மற்ற சொத்துக்களையும் சுகங்களையும், செல்வங்களையும் செல்வாக்குகளையும் பெறுவதிலேயே, அதில் முன்னேறும் வேட்டையிலே ஈடுபடுகின்ற சில மாந்தரைக் கண்டு அவர் இரங்குகின்றார்; ''இத்தனை நலன்களையெல்லாம் பெற்று என்ன பலன், சுதந்திரம் இல்லாவிடில்''. அந்நிய ஆதிக்கத் திற்கு அடிவருடி ஆதிக்க வெய்யிலிலே குளிர் காய்ந்து, சுதந்திரப் போராட்ட எழுச்சியிலிருந்து ஒதுங்கி நின்று, சுயநலனும், தன்னலனும் பெரிது என்று கருதி நமக்கு நலன்கள் கிட்டிவிட்டால் போதும், நாடு என்ன நாடா?

அது வெறும் பூகோள ஏடா? என்று நினைத்திருந்த மக்கள் சிலருக்குச் சொல்கின்றார்:

சுதந்திர தேவி...

"நின்னருள் பெற்றிலாதார் நிகரிலாச் செல்வரேனும்
பன்னரும் கல்விகேள்வி படைத்துயர்ந்திட்டாரேனும்,
பின்னரும் எண்ணிலாத பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்"

அவர்கள் வாழ்க்கை பாழாம் என்று கூறிவிட்டார். அடுத்த அடியிலே கூறுகின்றார், பாழான வாழ்க்கை மட்டுமல்ல. அவர்களுக்கு வாழ்க்கையே இல்லை. அவர்கள் புழுத்துப் போன பிணங்கள். அந்த புழுத்துப்போன பிணங்களுக்குப் பொன்னுன அணிகள் பூட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாறு மண்ணில் இன்பங்களை விரும்பி சுதந்திரத்தின் மாண்பினை இழப்பதோ,

"கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினுல்
கைகொட்டிச் சிரியாரோ"

என்று சுதந்திரத்திலே நாட்டமில்லாதமக்களைப் பார்த்து அவர் எள்ளி நகையாடி அவர்களைக் கூட சுட்டெரிக்கும் சொற்களால், அவர்களுக்கும்கூட சுதந்திர வேகத்தை ஊட்ட முடியுமா என்று ஒரு சோதனை செய்து பார்க்கின்றார், தம்முடைய கவிதையால். சுதந்திர உணர்வு இல்லாத நாட்டிலே,

"ஆவி அங்கு உண்டோ?
செம்மை அறிவு உண்டோ?
ஆக்கம் உண்டோ?"

என்று அவர் கேட்டு, சுதந்திரம் இல்லா நாட்டிலே வாழ்கின்ற ஒரு வாழ்க்கை வாழ்வல்ல, அது தாழ்வு மட்டுமல்ல, தாழ்விலும் தாழ்வு என்று இடித்துரைக்கின்றார்.

## வீரர்களை வணங்குவோம்....

நாமிருக்கும் நாடு நமது, நமக்கே உரிமையாம் என்பது அறிந்தோம் என்ற உணர்வும், உறுதியும் எல்லா மக்களுக்கும் வரவேண்டும். அன்று விடுதலைக்காக, விடுதலை என்னும் வேள்வித்தீயில் தம்முடைய உடல் பொருள், உடைமை அத்தனையும் காணிக்கையாக்கி, அந்த வேள்வித் தீயிலே குதித்து, ஆயிரக்கணக்கானவர் செய்த தியாகங்களின் பலனாக இன்று நாம் சுதந்திரத்தையும், விடுதலையையும் பெற்று வாழ்கின்றோம். ஆனால் 25 ஆண்டுகளே கடந்து விட்ட நிலையிலும் அந்தத் தியாகிகளின் செயல்களை, அந்தத் தியாகிகளின் புனிதமான போராட்டங்களை, அவர்கள் வெற்றி வரலாற்றை நாம் படித்துப் போற்றுகிறோமா? நாம் பேணிக் காக்கின்றோமா? நாம் கதையாக எடுத்துச் சொல்கிறோமா? வளர்கின்ற மலர்கின்ற புதிய தலைமுறையான நம் குழந்தைகளுக்கு அவர்களைப் பற்றிப் பேசுகின்றோமா? கப்பலோட்டிய தமிழன் கதையைச் சொல்கிறோமா? கொடி தாங்கி முடி தகர்க்கப்பட்ட திருப்பூர் குமரன் பெருமை திகழப் பேசுகின்றோமா? லாலா லஜபதி ராயைப் பற்றி சொல்கின்றோமா? நவரோஜியைப்பற்றி கூறுகின்றோமா? ஏன் காந்தியடிகள் பற்றி கூடத்தான் நாம் தெளிவாக எடுத்துச் சொல்கிறோமா?

இன்னும் பள்ளிகளில் சிலவற்றில் இங்கிலாந்தின் எட்டாவது ஹென்ரி அரசன் எத்தனை மனைவிகளை மணந்தார் என்பதையும் வரிசைக்கிரமமாக அந்த மனைவிமார்களின் பெயர்களையும் சொல்வதில்தான் வரலாற்றுத் திறமையும், அறிவின் ஆற்றலும் இருக்கின்றது என்று எண்ணி, அந்தப் புத்தகங்களைப் பயில்கின்ற நிலை உள்ளதே. இந்த நாட்டின் தியாகிகள் சிந்தின ரத்தத்தினால் இந்த மண் கறை படிந்தது, இல்லை—அந்த மண்ணின் கறை நீங்கியது என்ற வரலாற்று உண்மையை நாம் அவர்களுக்கு சொல்கின்றோமா? இங்கிலாந்தின் சீமாட்டி எலிசபெத் அரசி மண்ணிலே கால் எடுத்து வைத்தால், சகதி

யிலே அவர் கால் அழுக்கு படிந்து விடுமோ என்று அஞ்சி, தம்முடைய பட்டான மேலாடையை எடுத்து, அவர்கள் பாதையில் விரித்து, அவர் பாதம் அந்த பட்டாடையிலே படும்படி, ஸர் வால்டேர் ரேலே செய்த சாகஸச் செயலை இந்த நாட்டிலே, இந்திய நாட்டிலே, நம்முடைய குழந்தைகள் பள்ளிகளில் இன்றும் படிக்கிறார்களே. இந்த நாட்டின் தியாகிகள் சிந்திய இரத்தத்தால் இந்த மண் புனிதமானது, இந்த மண்ணின் அடிமைத்தளை நீங்கியது, மாசு நீங்கியது, அடிமை என்னும் சகதி நீங்கியது, அடிமை என்னும் சகதியில் நம்முடைய வாழ்வு என்னும் பாதம் சிக்காமல் அழுந்தாமல் இருக்க எண்ணற்ற பல தியாகிகள் தங்களுடைய உயிர் என்ற பட்டுத் துகிலையே எடுத்து விரித்தார்கள் என்ற சாகசச் செயலை—என்ற வீர வரலாற்றை, நாம் எடுத்துக் கூறவில்லையே. அதைத் தான் பாரதியார் கூறுகின்றார். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துங்கள். வீரர்களைப் போற்றுங்கள், வணங்குங்கள், அவர்கள் கதைகளை நாடு நாடாக, வீடு வீடாக, குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லுங்கள் என்று அவர் அழைக்கின்றார். அவர் தலைவர்களுக்குச் செலுத்துகின்ற அஞ்சலி, தியாக உணர்வை ஊட்டும் பாடம்.

> "தாழ்வுற்று, வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு,
> பாழ்பட்டு நின்றதாமோர் பாரததேசம் தன்னை
> வாழ்விக்க வந்த காந்தி"

என்று வாயார வாழ்த்துகின்றார்; உளமாரப் புகழ்கின்றார். அவரால் வாழ்வு பெற்ற இத்தலைமுறையினர், வருங்கால தலைமுறையினர், இதயத்திலும் அந்த வாழ்த்து ஒலிக்க வேண்டும்.

> "வீரமிக்க மராட்டியர் ஆதரம்
> மேவிப் பாரததேவி திருநுதல்
> ஆரவைத்த திலகமெனத் திகழ்
> ஐயன் நல்லிசை பாலகங் காதரன்"

என்று திலகருக்குப் புகழ் மாலை சூட்டுகின்றார்.

"எமது பாரத நாட்டுப்
பெண்பல்லோர் வயிற்றினும் அங்கவரோஜி
போற் புதல்வர் பிறந்து வாழ்க!"

என்று அவர் வாழ்த்தி, தியாக பரம்பரை உருவாகட்டும், தியாக பரம்பரை மறையாமல் வளரட்டும், வலுப்பெறட்டும் என்று வாழ்த்துகின்றூர். தமிழகத்தின் மன்னன் என்று கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. யைப்பாராட்டுகின்றூர். நாட்டின் வரலாற்றிலே பெருமை கொள்ளுங்கள்; ஆங்கிலக் கல்வியால் மட்டும் உங்களுக்குப் பெருமை வந்து விடாது. கணிதம் பன்னிரண்டு பயிலலாம் நீங்கள்; ஆனல் கார்கொள் வானிலோர் மீனை தெரிவதற்கு, வக்கும் வகையும் பெருமல், ஆற்றல் பெருமல் நீங்கள் இருக்கலாம். அணி செய் காவியம் ஆயிரம் நீங்கள் கற்கலாம். ஆனல் அதில் ஆழ்ந்திருக்கும் கவி உலகம் காணுமல் போகலாம். வணிகமும் பொருள் நூலும் நீங்கள் பிதற்றலாம். ஆனல் வாழும் நாட்டின் பொருள் கெடல் உங்களுக்குத் தெரியுமா? அதை மாற்ற நீங்கள் வகை கண்டீர்களா? அந்த வீழ்ச்சியிலிருந்து விடுதலை பெற வளர்ச்சியின் எழுச்சிக்கும் நீங்கள் வழி கண்டீர்களா? தேம்ஸ் நதியைப் பற்றிப் படித்தீர்களே, தெளிந்த கங்கையைப் பற்றி படித்தீர்களா? டான்யூப் ஆறு பற்றி படித்தீர்களே, இங்கு ஓடுகின்ற காவிரியைப் பற்றி படித்தீர்களா? அங்கு இருக்கின்ற மான்செஸ்டர் போன்ற நகரங்களைப் பற்றி படித்தீர்களே, இங்கு கிராமத்தில் குடில்களில் குடிசைத் தொழில்கள் வளர்க்கின்ற வண்ணத்தைக் கண்டீர்களா? தங்கள் உடலையே காணிக்கையாக வைத்து, தங்கள் உழைப்பையே உரமாக இட்டு, இந்த நாட்டின் வயல்களிலே, களங்களிலே, பாடுபடுகின்ற உழவர் பெருமக்கள் உழைப்பிற்கு எவ்வாறு காணிக்கை செலுத்தலாம், எவ்வாறு அவர்களுக்கு மேலும் ஊதியம் கிடைக்கச் செய்யலாம், எவ்வாறு செய்முறைகளைச் சீர்திருத்தலாம் என்று கண்டீர்களா? இவை பாரதியார் அன்று கேட்ட கேள்விகள். "அன்ன யாவும் அறிந்திலரே" என்று அவர் பரிதாபமாய்க் கூறி

விட்டார். இதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. யாருக்கு? பாரதத்து ஆங்கிலம் பயில் பள்ளிகளில் புகு நர்க்கு. முன்னர் நாடு திகழ்ந்த பெருமை தெரியாது. மூண்டிருக்கும் இந்நாள் இகழ்ச்சியும் தெரியாது, என்று வேதனையிலே வெதும்பி அவர் கூறுகின்றார்.

## தமிழ்த் தொண்டின் மூலம் தேசத் தொண்டு :

இவ்வாறு தாய்நாட்டின் பெருமைக்காக, தன்னுடைய கவித்துவத்தை, தன்னுடைய உயிர் மூச்சை காணிக்கையாகச் செலுத்திய பாரதியார், அந்தத் தாய் நாடு உயர்வாக உறுதியாகத் திகழ வேண்டும் என்றால் அந்தத் தாய்நாட்டின் அங்கமாக வகிக்கின்ற பல்வேறு மாநிலங்கள், பல்வேறு இனங்கள், பல்வேறு மொழிகள், இவையும் வளம் பெற வேண்டும் என்று கூறினார்.

**''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**
**இனிதாவது எங்குங் காணோம்''**

என்று அவர் கூறியது குறுகிய பார்வையாலல்ல; குறுகிய நோக்கத்திலல்ல. இந்த உலகத்திலேயே சிறந்த மொழிகளிலே தமிழ் மொழி ஒன்று, இது உண்மை, வெறும் புகழ்ச்சியல்ல, இது வரலாறு கண்ட உண்மை, இது ஆராய்ச்சி உறுதிப்படுத்துகின்ற உண்மை என்று தம்முடைய அறிவை ஆதாரமாகக் கொண்டு அவர் அடித்துக் கூறுகின்ற போது, தமிழிலே எவ்வளவு காதல் கொண்டார், அவர் தமிழ் நெஞ்சம் எவ்வாறு துடித்தது என்பதை நாம் காணலாம்.

**''க்ஷேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்**
**தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்''**

என்று அவர் கூறிய போது இந்தத் தமிழின் பழம் பெருமையில் மட்டும் அவர் தன்னைப் பறி கொடுக்கவில்லை. தெள்ளூற்ற தமிழ்

அமுதச் சுவை கண்டு இங்கு அமரத்துவம் பெற்று விடலாம் என்று மட்டும் அவர் அறுதியிட்டு கூறவில்லை. ''சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே'' என்று அவர் கோஷமாக மட்டும் எழுப்பவில்லை. ''வானம் அறிந்தது அனைத்தும் அறிய வேண்டும். எட்டுத்திக்கும் சென்று கலைச் செல்வங்கள் யாவும் இங்கு கொணர்ந்து சேர்க்க வேண்டும். பிற நாட்டு நல்லறிஞர்கள் சாத்திரங்களைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். இறவாத புகழுடைய புதிய நூல்கள் தமிழ் மொழியில் இயற்ற வேண்டும். புத்தம் புதிய கலைகள் பஞ்ச பூத செயல்களின் நுட்பங்கள் கூறும் — மெத்த வளருது மேற்கே அந்த மேன்மைக் கலைகளைத் தமிழில் கொண்டு வர வேண்டும்'' என்று தமிழரை அழைத்தார். இவ்வாறு தமிழ்க் காதலும், தேச பக்தியும் ஒன்றாக இணைந்து ஒன்றுக் கொன்று ஊக்கம் தந்து, உறுதி ஊட்டி, உயிர் மூச்சாய் இழைந்ததால்தான்,

''செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே''

என்று அவர் செந்தமிழ் நாட்டுக்கு வந்தனை செலுத்திவிட்டு, ''வந்தே மாதரம்! வந்தே மாதரம்'' என்று உளமார, வாயார வாழ்த்துகின்றார். தமிழ் பக்தியும், தேச பக்தியும் ஒன்றாக இணைய வேண்டும், ஒன்றாகச் செல்ல வேண்டும், ஒன்றாக மலர வேண்டும், கை கோர்த்துச் செல்ல வேண்டும், உள்ளத்திலே இணைய வேண்டும் என்று முழங்கினார் பாரதியார். அவர் தேசீயத்திற்கே ஓர் இலக்கணம் வகுத்தார். உண்மையான தமிழனாக இல்லாதவன், உண்மையான இந்தியனாக முடியாது. ஆனால் உண்மையான இந்தியனாக இல்லாமல், உண்மைத் தமிழன் என்று சொல்லி கொள்வதற்கு ஒருவனுக்கு அருகதை இல்லை, யோக்கியதை இல்லை என்று அவர் இடித்துக் காட்டுகிறார்.

அவர் தமிழ் உணர்வும், தேசீய உணர்வும் இரண்டறக் கலக்க, புதியதோர் உலகு செய்ய அவர் நம்மை

அழைத்தார். அவர் கண்ட புதிய உலகத்திலே, புதிய சமுதாயத்திலே, வேதியரும் இதர சாதியினரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் என்ற உணர்வு பெற்றிருப்பர். பூனைக் கதை ஒன்றை மிக அழகாக முரசு பாட்டிலே கூறுகின்றார். சாம்பல் நிறப் பூனை ஒன்று, சாந்து நிறப் பூனை ஒன்று, பாம்பு நிறப் பூனை ஒன்று, பசும்பால் நிறப் பூனை ஒன்று.

ஆனால்

"எந்த நிறம் இருந்தாலும்—அவை
யாவும் ஒரேதரமன்றோ'
இந்த நிறம்சிறிது என்றும்,—இஃது
ஏற்றம் என்றும் சொல்லலாமோ ?
வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை;
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்"

என்று சாதிகளெல்லாம் ஒன்றே என்று சாற்றினார். சாதி மதங்களை நாம் பார்க்க மாட்டோம். உயிர் ஜன்மம் இத்தேசத்தில் எய்தினரா ? அதுதான் எங்களுக்கு முக்கியம்; அதுதான் எங்களுக்குத் தலையாய கேள்வி; அதுதான் நாட்டை எதிர் நோக்கி இருக்கின்ற பிரச்னை. சாதி மதங்களைப் பாரோம் என்று சட்டங்கள் செய்து விட்டால் போதாது. சாதி மதங்களைப் பாரோம் என்ற உணர்வு, எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந்திய மக்கள் என்ற ஒற்றுமை உணர்வு, நம் ஒவ்வொருவருடைய உணர்விலும், உள்ளத்திலும், ஊற்றெடுத்து ஊன்றி உறுதிப்பட வேண்டும்.

"அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்.

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் — இங்கு
வாழும் மனிதர் எல்லோர்க்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்!—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம் ”.

உழைப்பின் உரிமை, உழைப்பிற்கு உரிய பங்கு, அந்த உழைப்பின் பலனும், பரிசும், வெகுமதியும் விளைவும் ஒவ்வொருவனுக்கும் கிடைக்க வேண்டும். ஒருவன் உழைக்க, மற்றொருவன் சுரண்ட, ஒருவன் வாழ, மற்றொருவன் தாழ்ந்து பாழ்பட, ஒருவன் ஆண்டான், மற்றொருவன் அடிமை என்ற நிலையை மாற்ற வேண்டும் என்று தான் அன்று பாரதியார் பாடினார்.

## 20-அம்சத் திட்டம் பாரதி பாட்டின் எதிரொலி :

இன்று இருபது அம்சத் திட்டத்தில் நாம் சிறந்ததாக போற்றுகின்ற பல உன்னத இலட்சியங்களுக்கு அன்றே பாரதியார் குரல் கொடுத்திருக்கின்றார் என்பதை நாம் காணலாம். பிறர் பங்கைத் திருடுதல் வேண்டாம் என்று கூறுகின்ற போது சமூகத்திலே கள்ள மார்க்கெட்காரர்களுக்கும், பதுக்கல்காரர்களுக்கும் அவர் சாட்டைக் கொடுப்பதைக் காணலாம்.

“ காணிநிலம் வேண்டும்—பராசக்தி
காணிநிலம் வேண்டும் ”

என்று அவர் பராசக்தியை வேண்டிக் கொண்டு பாடுகின்றபோது, இன்று நாம் நிலம் இல்லாதவர்களுக்கெல்லாம் நிலம் கொடுப்பது 20 அம்சத் திட்டத்திலே முக்கியமான ஓர் அம்சம் என்று போற்றி வருகின்றது எதிரொலிப்பதைக் காண்கின்றோம். கொத்தடிமைத்தனம் ஒழிய வேண்டும் என்று நாம் கூறுகின்றோம். பாரதியார் குரல் கொடுக்கின்றார்:

" நம்மை ஏய்ப்போருக்கு ஏவல்
செய்யும் காலமும் போச்சே."

" மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனி உண்டோ ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி உண்டோ "

என்று 30 ஆண்டுகளுக்கு முன்பே அவர் பாடினர். உணவுப் பொருட்கள் அனைத்தும் சமூகத்தில் அனைவருக்கும் சமமாக, நயமாக, தடையின்றி கிடைக்க வேண்டும் என்பது 20 அம்சத் திட்டத்தின் அம்சங்களில் ஒன்று. அதைவிட முன்னேறிவிடுகிறது பாரதியார் நெஞ்சழுத்தம், அவர் காட்டுகின்ற வழி, அவர் போதிக்கின்ற நெறி, அவர் கொண்டுள்ள உணர்ச்சி வெறி.

"இனி ஒரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம் !
தனி ஒருவனுக்கு உணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம் "

என்று கூறுகின்ற அளவுக்கு வேகமும் உணர்ச்சியும் விஞ்சுகின்றன.

## உழைப்பே உயர்வுக்கு உரம் :

இந்த நாடு இவ்வளவு முன்னேற்றம் காண வேண்டும் என்ருல் கவிதையால் மட்டும் வந்துவிடுமா? ஞான ரதத்திலே செல்வதால் மட்டும் வந்துவிடுமா? முன்னோர் ஆசியினுல் மட்டும் வந்துவிடுமா? மனிதன் தன்னுடைய உள்ளத்திலே உறுதி கொண்டு, தன்னுடைய உண்மையான உழைப்பை காணிக்கையாகச் செலுத்தி, பாடுபட வேண்டும். அந்த உழைப்புத்தான் நாட்டுக்கு உயர்வைக் காட்டும் என்ற படிப்பினையை அவர் பதியச் செய்கிருர்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்,
விழலுக்கு நீர் பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்து உடலம் ஓய மாட்டோம்"

நாம் ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம். இவ்வாறு முனைந்து உழைக்க வேண்டும். என்ன உழைப்பு? உண்மையான உழைப்பு. பெரிய பெரிய திட்டங்கள் தீட்டி, இலட்சக் கணக்கிலே முதலீடு செய்வது தான் உழைப்பு என்று எண்ணிவிடாதீர்கள். சந்திர மண்டலத்து இயல் காண்பதும் பெரிய சாதனைதான். அந்த சாதனையை நீங்கள் செய்து விட்டால் மட்டும் போதுமானதல்ல. சந்தி தெரு பெருக்குகின்ற சாத்திரமும் உங்களுக்குத் தெரிய வேண்டும் என்று அவர் கூறுகின்றார். நாங்கள் பறப்போம்—ஒய்யாரமாய், உயரத்தில்; ஆனால் பூமியிலே, தரையிலே, மண்ணிலே, எங்கள் கால் பதியாது என்ற நிலை பாரத மக்களுக்கு வந்துவிடக் கூடாது. உங்கள் கால் பூமியிலே பதிந்திருக்க வேண்டும். உங்கள் கை வானை நோக்கி ஒய்யாரமாக எட்ட வேண்டும். அப்பொழுதுதான் சாதனை உங்களுக்குக் கிட்டும் என்று அவர் அறிவுறுத்துகின்றார். பட்டாடை, பஞ்சில் உடை, இவற்றையெல்லாம் உற்பத்தி செய்யுங்கள், என்று அழைத்தார். உற்பத்தி செய்து நீங்கள் மட்டும் கட்டி மகிழாதீர்கள், என்று எச்சரித்தார். ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணியைப் பெருக்கும் வகைக்கு அவர் அன்றே ஒரு திட்டம் தீட்டிக் கொடுத்து விட்டார். கட்டி திரவியங்கள் கொண்டு வரும் காசினி வணிகருக்கு அவற்றைக் கொடுங்கள், செல்வத்தை வாங்குங்கள்; செல்வத்தைக் கொண்டு, தொழில் செய்யுங்கள்; உற்பத்தி செய்யுங்கள். அவ்வாறு செய்வது என்ன? ஆயுதத்தைச் செய்யுங்கள், காகிதத்தைச் செய்யுங்கள்; குடைகள், உழுபடைகள், செய்யுங்கள். கோணிகள் செய்யுங்கள், இரும்பு ஆணிகள் செய்யுங்கள்; ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்யுங்கள். வானையும் கடல்

மீனேயும் அளக்கக் கற்றுக் கொள்ளுங்கள். பெரிதானதை யும், சிறிதானதையும், மேலானதையும், கீழ் நிலையில் உள்ளதையும், இரண்டையும் உங்கள் உழைப்பு தழு வட்டும். கலையைத் தழுவட்டும், கொல்லர் உலையைத் தழுவட்டும்; ஆலையைத் தழுவட்டும், கல்விச் சாலையைத் தழுவட்டும்! ஓவியத்தைத் தழுவட்டும், ஊசிகளைத் தழு வட்டும். இவ்வாறு பட்டியலைக் கொடுக்கின்ருர். இறுதி யில் ஒரு சொல்லில் அத்தனையையும் அடக்கி விடுகின்ருர்.

"உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்"

உலகத்திற்குத் தேவையான, ஏற்றதான, இன்றியமை யாததான, தொழில் அனைத்தையும் நீங்கள் செய்யுங்கள். கற்றுக் கொள்ளுங்கள், ஆனல் அந்தத் தொழிலை கூலிக்கு மாரடிக்கச் செய்யாதீர்கள். உவந்து செய்யுங்கள். இவ் வாறு உழவுக்கும் தொழிலுக்கும் திட்டம் வகுத்து விட் டார். ஆனல் இந்த நாட்டிலே உள்ள முக்கியமான சாபக் கேட்டை பாரதி கண்டார். கண்டதைத்தான் கூறினர். "கூடித் தொழில் செய்". தொழில் செய்ய, உனக்குத் திறமை உண்டு. எத்தனையோ இயந்திரங்களைச் செலுத்துகின்ற தந்திரங்கள் உனக்குத் தெரியும். ஆனல் ஒரு மனிதனுடன் கூடி உன்னல் தொழில் செய்யத் தெரி யாதே. அதற்காகத்தான், "கூடித் தொழில் செய்" என்று அவர் கூறினர். இவ்வாறு,

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே
பெரும் புகழ் நுமக்கே இசைக்கின்றேன்
பிரம்மதேவன் கலைஇங்கு நீரே!"

என்று தொழிலாளரையும், உழைப்பாளரையும் அவர் பாராட்டிப் போற்றினர்.

## பாரதி கண்ட பாரதம் :

அவர் கண்ட புதிய சமுதாயத்திலே ஆணும், பெண் ணும் ஒன்று; சரி நிகர் சமானமாக இருப்பார்கள். வீட்

டின் சாவிக் கொத்தை பெண்களுக்குக் கொடுக்க தயங்கிய ஒரு காலம் போய், நாட்டின் சாவிக் கொத்தையே ஓர் ஒப்பற்ற பெண்ணின் கையில் கொடுத்துவிட்ட இன்றைய நிலை, உண்மையிலே பாரதியாருக்கு மனநிறைவு தரும். கற்பு பற்றி அவர் சொன்ன கருத்து பல முற்போக்கான நாடுகளிலே கூட இன்னும் ஏற்றுக் கொள்ளப்படாத கருத்து. கற்பு என்பது பெண்களுடைய ஏகபோகமல்ல, கற்பு என்பது பெண்ணுக்கு மட்டும் உரியது அல்ல, ஆணுக்கும் உரிய பொறுப்பு என்றார்.

"கற்பு நிலை என்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

அவ்வாறு கற்பு ஆணுக்கும், பெண்ணுக்கும் உண்மையாக இருக்கின்ற நாளிலேதான், நல்லறம், இல்லறம் நின்று நிலவும்; நிலைக்கும்.

பெரியவர்களுக்கு மட்டும் பாரதியார் அறிவுரை சொல்லவில்லை. சின்னஞ்சிறு குழந்தைகளுக்குக் கூட பாப்பா பாட்டிலே கூட அவர் கூறுகிறார். "சீறுவோர் சீறு" "பகைவனுக்கருள்வாய்" என்று ஒரு இடத்தில் கூறினார். ஆனால் 'நையப்புடை' என்று இன்னொரு இடத்தில் கூறுகிறார். "போர் தொழில் பழகு" என்று கூறுகிறார். நாட்டில் அடிமைத் தனத்தைக் கண்டால், அநீதியைக் கண்டால், சதியைக் கண்டால், விதி என்று நினைத்து விடாமல் ஆத்திரங்கொள். ஔவையார் ஆத்தி சூடியைப் படித்துப் பழகினவர்களுக்கு இது புதியதாக இருக்கலாம். சற்று புரட்சிகரமாக இருக்கலாம். அதிர்ச்சி கூடத் தரலாம். ஆனால் இது ஆத்தி சூடி மட்டுமல்ல, கீர்த்தி சூடி.

இவ்வாறு புரட்சியும், பொதுவுடைமையும் பொங்குகிற கவிதைகளிலே, கொப்பளிக்கின்ற பாட்டுக்களிலே, சந்தமும், இனிமையும் சேர்ந்து துள்ளுகின்ற இசையிலே, சமதர்மம் போதித்த முதல் கவிஞன் பாரதி.

" இல்லை என்ற சொல்லே உலகில்
இல்லையென வைப்பேன் "

என்று அவர் கூறினார். அவர் இந்தியாவைப்பற்றி மட்டும் பாடவில்லை. ஜார் வீழ்ச்சியைப் பற்றிப் பாடினார். கலிபோல் வாழ்ந்து வீழ்ந்தான் என்று கூறினார். ஊருக்கு நல்லது சொன்னார். தமக்கு உண்மை என்று தெரிந்ததைச் சொன்னார். அவருக்கு உண்மை தெரிந்து, அவர் உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானதால்தான், அவர் வாக்கிலே ஒளியும் உண்டாயிற்று. இவர் தான் பாரதி. இவர்தான் இன்றையப் பாரத நாட்டிற்கும் தேவையான பாரதி. இவர் தான் பாரதம் கண்ட பாரதி. இதுதான் பாரதி கண்ட பாரதம். பாரதி, பாரத கவிஞர். பாரதி, பாரின் கவிஞர். பாரதி உழைப்பாரின் கவிஞர். இன்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு, விடுதலையில் முழுப் பலன்களையும் பெற வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கின்ற மக்களுக்குப் பாரதி காட்டிய பாதை, அன்பு நெறியிலே நின்று, அறவழியிலே சென்று, அறிவைச் செலுத்தி, ஆக்கம் கொண்டு ஆண்மையுடன் போராடி, புதியதோர் உலகம் காண்போம், வாருங்கள் என்பது. அந்த உலகத்தில் ஆண்டான் இல்லை, அடிமை இல்லை, ஆண்டானும் அடிமையும் சரிநிகர் சமானமான மனிதர்கள்; அந்த மனிதர்களே கண் கண்ட கடவுள்கள்; இந்த நாட்டின் குடிமக்கள் அனைவரும் இந்நாட்டின் மன்னர்கள்; மக்கள் கண்ட மகேசுவரர்கள் என்ற முழக்கத்தைச் செய்த பாரதி வாழ்க !

ஜெய் பாரதி ! ஜெய் ஹிந்த் !!

தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை—600 002

# தமிழரசு

இலவச
இணைப்பு